கல்கி

டிசம்பர் 25 1966



KALKI 35 காசு

சுலேகா

தினப்படி உபயோகப் பொருள்கள்

சுலேகா
டிராயிங்
இங்க்

Adsol
அட்சால்
ஆபீஸ் பசை
& கோந்து

சுலேகா
பவுண்டன்
பேனு
இங்க்


ஸிகுரிடி
முத்திரை
அரக்கு

சுலேகா
ஸ்டாம்ப்
பேட்

சுலேகா
ஒர்க்ஸ்
லிட்.

சுலேகா பார்க், கல்கத்தா - 32

Progressive/DM 31



வாயில்களில் ஒரு புதிய பெயர்

VT VOILES

தென்னுடு அளிக்கும் முதல் வாயில்

மீனுக்ஷி மில்ஸ் க்ரூப்பைச் சேர்ந்த
விருது நகர் டெக்ஸ்டைல்ஸின்
தரமான தயாரிப்பு.


விற்பனையாளர்கள்:
பி.ஆர். அண்டு சன்ஸ் (பி) லிமிடெட்
200 மவுண்ட் ரோடு — மதராஸ்-2.

Nalin VT 145 TM

REPORT ON

Ambassador

Mark II



பிறந்த தேதி : அக்டோபர் 1963

தோற்றம் : ஆரோக்யமுடன் சுறுசுறுப்பானது.

அமைப்பு : உறுதியும் சரியான அமைப்புடன் சக்தியும் பொருந்தியது. ஆறு பேர்களை ஏற்றிச் செல்லக் கூடியது.

பூட் சைஸ் : மிகப் பெரியது.

ரத்த அழுத்தம் : அதிக வேகமாய்ச் செல்கையிலும் எப்பொழுதும் சாதாரண நிலைதான்.

பாரம்பரியம் : உயர்வம்ஸ முன்னோரான மாரிஸ்ஸில் நேர்வழி வழி வந்த ஹிந்துஸ்தான் 10, ஹிந்துஸ்தான் 14, லாண்டு மாஸ்டர் தந்தை அம்பாஸடர் - எல்லாம் இன்றும் வலுவடைந்தவாறிருக்கின்றன.

பொதுவான நிலை : சக்தி நிரப்பப் பெற்றது. எல்லா நிலைகளிலும் தொடர்ந்து பிரயாசை செய்வதில் திறமை மிக்கது. சக்தி உற்பத்தி வகையிலே புஷ்டி அளிக்கும் உணவு தேவையில்லை.

நோய் நிர்ணயம் : *N. A. D.* பல்முளைக்கையில் ஏற்படும் தொந்தரவுகளை வெகுகாலம் முன்பே கடந்தாகி விட்டது. இப்போது முழுப்பருவம்.

நோக்கம் : எதிர்காலத்தில் நம்பிக்கை. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் நம்பிக்கையில்லை. இன்று நாட்டிலெங்கும் ஓடுகின்ற லட்சத்திற்கு மேலான *HM* குடும்பத்துச் சிறந்த கார்களுடன் இன்னும் 25,000 கார்களைச் சேர்க்க வேண்டுமென்று கருதுகிறது.

முன் அறிவிப்பு : ஆகிறுதியில் வளர்ச்சி நிச்சயம். மக்களால் இன்னும் அதிகமாக விரும்பப்படும் நீடித் திருப்பதற்கும் உத்தரவாதம்.

HM
HINDUSTAN MOTORS

ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிட்., கல்கத்தா-1

கல்கி

பொருளடக்கம்

பராபவ, மார்கழி 10 — டிசம்பர் 25

அக்கப்போர் —''சக்கைப்போடு''


குதிரைப் பந்தயங்களில் குதிரைகள் மேல் பணயம் கட்டுவதைத் தடுத்துவிடச் சென்னை காங்கிரஸ் சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள் என்ற வதந்தி உலவி வருகிறது.

''சில புத்திசாலிகள் பந்தயக் குதிரைகள் மேல் பணயம் கட்டக் கூடாது என்றுதானே சட்டம் செய்வார்கள்? குதிரைகளை ஓட்டும் ஜாக்கிகளின் பேரில் நாம் பணயம் கட்டினால் போகிறது!'' என்று சொல்லிக் கொள்கிறார்களாம்.


கல்கி, பிப்ரவரி 2, 1947

நினைவுத் திரையில்...

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



ஐக்கிய அரபுக் குடியரசு
PK



இந்தமுறை என்னை ஏமாற்ற யாரையும் அனுமதிக்க மாட்டேன்”
காங்கிரஸ் பாலம்
வாக்காளர்
Rath

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 ★ இதழ் 21



ஆட்சித் தலைமையில் புதுமை தேவை

உரிய சந்தர்ப்பத்தில் சரியான விஷயத்தைச் சொல்லும் திறமை ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணர் அவர்களுக்கு உண்டு. டிசம்பர் 11ந் தேதியன்று தில்லியில் நடைபெற்ற கட்சிச் சார்பற்ற ஜனநாயக சம்மேளனத்தில் தலைமையுரை வழங்குகையில் ஸ்ரீ ஜயப்பிரகாசர் வழக்கம்போல் இத்திறமையை வெளிக் காட்டியிருக்கிறார். 'தேசம் சேற்றுக் குழியில் அழுந்தியிருக்கிறது; அதை விடுவிக்க வேண்டுமாயின் கட்சிச் சார்பற்ற தேசிய அரசாங்கம் உருவாக வேண்டும்' என்று கூறியிருக்கிறார். வருகிற தேர்தல்கள் முடிந்த பின், வெற்றி பெற்ற சட்டசபையாளர்கள் கட்சிச் சார்புகளை மறந்து, தங்களை மக்களின் பிரதிநிதிகளாகவே கருத வேண்டும்; கட்சி நோக்கமின்றி, ஆற்றலுள்ளவர்களைக் கொண்டு மந்திரி சபை அமைக்கக் கூடிய ஒரு தலைவரை அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் — என்பது ஸ்ரீ ஜயப்பிரகாசரின் யோசனை. கட்சிச் சார்பற்ற மந்திரி சபை நடைமுறையில் மிகவும் சாத்தியமே என்று அவர் கூறியுள்ளார். இப்படிச் சொன்னதால், 'காங்கிரஸ் மெஜாரிட்டி பெறாவிடில் ஆட்சியே குழப்பமாகி விடும்' என்று ஆளும் கட்சியினர் பூச்சாண்டி காட்டுவதைத் தகர்த்திருக்கிறார்.

அரசியல் சாசனம் என்று ஒன்று இருக்கிறது. காங்கிரஸ் தோல்வி பெற்றால் தேசம் பாழாகி விடும் நிலைமைக்கு அரசியல் சாஸனம் நம்மைக் கொண்டு விடாது. தேசத்தில் எக்காலத்திலும் அரசு ஸ்திரமாக நடக்கச் சாஸனம் உதவும். எனவே மக்கள், காங்கிரஸ் பதவிக்கு வராவிட்டால் ஆட்சி நிலைகுலைந்து விடுமோ என்று அஞ்சாமல் தங்கள் மனச்சாட்சிப்படி வோட் செய்ய வேண்டும். இதன் விளைவாகப் பார்லிமென்டில் பிரதிநிதித்துவம் எப்படி மாறினாலும் ராஷ்டிரபதி அந்தப் பிரச்னையைச் சாஸனத்தின் துணை கொண்டு சமாளித்து விடுவார்.

மக்கள் சபையில் எந்தக் கட்சியும் மெஜாரிட்டி பெறாவிட்டால் ராஷ்டிரபதி இரண்டிலொரு வழியில் ஆட்சியை அமைக்க முடியும். ஒன்று, இருப்பதற்குள் எந்தக் கட்சிக்கு அதிக ஸ்தானங்கள் கிடைத்திருக்கிறதோ, அதன் தலைவரை மந்திரி சபை அமைக்கச் சொல்லலாம். ஆட்சிப் பொறுப்பைத் தாங்கி, சபையின் பொதுவான நம்பிக்கையை அக்கட்சி பெற முடிகிறதா என்று பரீட்சை பார்க்கலாம்.

இன்னொரு முறை, சபை முழுவதன் மதிப்பையும் விசுவாசத்தையும் பெறக் கூடிய தனிப்பட்ட தலைவர் யார் என்று ராஷ்டிரபதி ஆலோசித்து, அவர் கட்சித் தொடர்புள்ளவரா என்பதைப் பாராமல் அவரிடம் மந்திரி சபை அமைக்கும் பொறுப்பைத் தரலாம். இவ்வாறு பொறுப்புப் பெற்ற தலைவர் கட்சி நோக்கமின்றி மந்திரிகளை அமைத்துக் கொள்ளலாம். இரண்டாவதாகச் சொன்னது ஒரு புதிய முயற்சியாயிருக்கும். ஆயினும் நமது சாஸனம் கூறுவதற்கு இது சட்ட ரீதியில் முரணானதல்ல. இவ்வாறு செய்வதால் ஒரு ஸ்திரமான கூட்டு சர்க்கார் ஏற்பட வழி உண்டாகும். இது போன்றதோர் அரசாங்கம் வெற்றிகரமாகச் செயலாற்றினால் கட்சி விசுவாசத்தை விடப் பரந்த அடிப்படையில் தேசத்தின் ஆட்சித் தலைவர் உருவாவதற்கும் வழி ஏற்படும். கட்சிச் சார்பற்ற ஆட்சித் தலைவரைத்தான் இந்திய மக்களின் மனோபாவம் விரும்புகிறது. இதற்குச் செயலுருவம் தந்து ஒரு புதிய, நல்ல சம்பிரதாயத்தை ஏற்படுத்த வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இப்படிப்பட்ட சர்க்கார் அமையுமாயின் தேர்தலில் பெற்ற மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு மட்டும் அரசாங்கக் கொள்கை உருவாகாமல், மக்கள் சபையின் சகல பிரதிநிதிகளும் அவ்வப்போது பிரச்னைகளை விவாதிக்க அதற்கேற்ப முடிவுகள் எடுக்கப்படும். மந்திரி சபையும், கட்சிக் கொறடாக்களும் ஆட்டு

விக்கிறபடி மக்கள் பிரதிநிதிகள் நடக்க வேண்டி இராது. உண்மையாகவே மக்கள் சபைக்கு நாட்டின் நிர்வாகத்தில் மிகப் பெரும் பங்கு கிடைக்கும். கட்சிச் சார் பிலும், கட்சிக் கொள்கைகளை நினைத்தும் சட்டசபையாளர் பேசும் நிலை மாறும். சபையின் விவாதம் என்பது தீவிரமான ஆராய்ச்சியும் ஆலோசனையுமாக அமையும்.

இந்தத் திட்டம் உருப்பெற வேண்டு மாயின் கட்சிச் சார்புகளற்ற ஓர் அசாதாரண மனிதர் பிரதமர் பதவி ஏற்க பார்லிமெண்டில் இடம் பெற வேண்டும். இந்தத் தகுதி ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணருக்கு உண்டு என்று கூறி, அவரை மக்கள் சபைக்கு ஏதே னும் ஒரு தொகுதியிலிருந்து அபேட்சை தாக்கல் செய்யுமாறு ராஜாஜி கோருகிறார். 'இது ஒரு தார்மீகக் கடமை, தேசியக் கடமை' என்கிறார் ராஜாஜி. ''இந்திரா காந்தியையே இந்த ஸ்தானத்துக்கு நினைத் துப் பார்க்க முடியும். எல்லா விதத்திலும் அவர் பொருத்தமுடையவரா யிருப்பார். எனினும் அவர் காங்கிரஸ் கட்சிக்கே 'விற்கப் பட்டு' விட்டதால், கட்சிச் சார்பின்றி மக்கள் சபைக்குத் தலைமை தாங்குவதற்குத் தகுதி இழந்து விட்டார்'' என்று சொல்கிறார் ராஜாஜி.

பரிசு பெறும் கலைஞர்கள்

ஆண்டுதோறும் சிறப்பு வாய்ந்த கலைஞர் களைப் பாராட்டும் நல்ல சம்பிரதாயத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வரும் சங்கீத நாடக அகாதமி 1966ம் ஆண்டு பாராட்டு தலுக்குத் தென்னகத்தைச் சேர்ந்த நான்கு கலைஞர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. எல் லோருமே அந்தந்தத் துறையின் சம்பிர தாயங்களில் பழகித் திளைத்து அரும்பணி யாற்றியவர்கள். ஏற்கனவே ரசிகர்களின் அபிமானத்தைப் பெருமளவில் பெற்றுக் களிப்பவர்கள்.

வித்துவான் ராமையா பிள்ளை பரதநாட்டி யாசிரியர்களில் முன்னணியில் நிற்பவர். புதுப் புது நடன வகைகளையும்கரணங்களையும் புது உத்திகளையும் ரசனை குறையாது வழங் கும் ஆற்றல் படைத்தவர். இசைப் பேரறி ஞர் என்ற விருதைப் பெற்றுள்ளார்.

ஸ்ரீமதி ஸ்வர்ண சரஸ்வதியும் நாட்டிய ஆசிரியையாக நீண்ட காலம் கலைத் தொண் டாற்றியவர். சுமார் முப்பதாண்டு அனுபவ முள்ள ஸ்ரீமதி ஸ்வர்ண சரஸ்வதி வட இந்தி யாவில் பள்ளி வைத்து நடத்திப் பரதக் கலையைப் பரப்பி வருகிறார். நட்டுவாங்கத் துடன் தமது சிஷ்யைகளின் ஆடல்களுக்கு வெகுவாக அவரே பதமும் பாடுவார்.

வித்வான் வீருசாமி பிள்ளையின் நாகஸ்வர வாசிப்பு சம்பிரதாய சுத்தத்துக்கும் கம்பீரத் துக்கும் பெயர் பெற்றது. திருவிழாக்களில் வீதி ஊர்வலத்தில் கிடைக்கும் விச்ராந்தியை திரு வீருசாமி பிள்ளையின் நாயனத்தில் மேடைக் கச்சேரிகளிலும் அநுபவிக்கலாம். சங்கீத கலாநிதி, இசைப் பேரறிஞர் விருது களைப் பெற்றிருப்பதுடன், தருமபுரம், திரு மலை - திருப்பதி ஆதீனங்களுக்கும் ஆஸ்தான வித்வானாக இருந்து இக்கலையைப் பேணி வருகிறார்.

மதுரை ஸ்ரீரங்கம் அய்யங்கார் புகழ் பெற்ற நாமக்கல் நரசிம்மய்யங்காரின் சிஷ் யர். இவரிடம் குருவின் பல்லவி, தானம், லய விந்நியாச நுணுக்கங்களையும் அபூர்வ ராக சஞ்சாரங்களையும் கேட்க முடியும். இந்த அநுபவம் வாய்ந்த வித்வான் ஒரு பழம்பெரும் பாணிக்கு இன்று பிரதிநிதியாக இருக்கிறார்.

விருது பெற்ற கலைஞர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

ஸ்வர்ண சரஸ்வதி | ராமையாப் பிள்ளை | ஸ்ரீரங்கம் அய்யங்கார் | வீருசாமிப் பிள்ளை






என்ன சேதி?

- மதிப்புக் குறைந்தே உள்ளது
- ஃபைன் ஆர்ட்ஸ் இசை விழா
- அமெரிக்க உதவிக்கு நிபந்தனையா?
- அறிஞர்களின் அறிவுரை
- மேதையின் மறைவு

அடுத்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வெற்றி தோல்விகள் எப்படி இருக்கும் என்பது பற்றிக் காங்கிரஸ் பெரும் தலைவர்களின் கருத்துக்கள் சுவையாக இருக்கின்றன. பலமுனைப் போட்டியின்றி நேருக்கு நேர் போட்டி யிருந்தாலும் காங்கிரஸ் வெற்றி பெறும் என்று திரு காமராஜ் சேலம் மக்களுக்கு ஊக்கமூட்டியுள்ளார். கட்சித் தலைவர் தைரியமாகத்தானே பேச வேண்டும்? பிரதமர் இந்திரா காந்தியின் கருத்தில் அவ்வளவு உறுதி தென்படவில்லை. மக்களுக்குப் பொதுவாகவே காங்கிரஸிடம் உள்ள நம்பிக்கையும் மதிப்பும் குறைந்துதான் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும் என்கிறார். திரு சஞ்சீவ ரெட்டியும், திரு எஸ். கே. பாட்டீலும் இப்போதுள்ள ஸ்தானங்களை விடக் குறைந்த ஸ்தானங்களைத்தான் காங்கிரஸ் கட்சியால் பெற முடியும், வலிமை குன்றிய கட்சியாகத்தான் அது இருக்கும் என்கிறார்கள். அத்துடன் நிற்கவில்லை. அப்படிக் குறைந்து போவது நாட்டுக்குக்கூட நல்லதுதான் என்கிறார்கள்! எதிர்க் கட்சிகள் சொன்னால் அசூயையினால் சொல்லுவதாக எண்ணலாம். காங்கிரஸ் கட்சித் தலைவர்களே சொல்லும்போது வாக்காளர்களுக்கு வேறு சூசகம் வேண்டியதில்லையல்லவா?

இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியின் 34வது சங்கீத மகாநாடும் இசை விழாவும் தியாகராயநகர் வாணி மஹாலில் 22ம் தேதியிலிருந்து ஜாம் ஜாம் என்று நிகழவிருக்கிறது. தலைமை வகிக்கும் சங்கீத கலாநிதி வித்வான் முசிரி சுப்பிரமணிய ஐயருக்குச் 'சங்கீத கலா சிகாமணி' என்ற விருதை 29ந் தேதி அன்று இச்சபையினர் அளித்துக் கௌரவிக்கப் போகின்றனர். சங்கீத வித்வானிலிருந்து உயர்ந்து சங்கீத போதகாசிரியராக மலர்ந்து சங்கீத குரு ஸ்தானத்தில் பரிமளித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ முசிரிக்கு வழங்கவிருக்கும் விருது மிகவும் அர்த்த புஷ்டியுள்ளதாகவே அமைந்திருக்கிறது. இச்சபையின் இசைத் தொண்டு மேலும் பரிமளிக்கட்டும்.

அயல்நாட்டினரிடமிருந்து கிடைக்கும் உதவிகளுக்கு நிபந்தனைகள் இல்லை என்றாலும், நமக்குத் தேவைப்படும் அளவு கிடைப்பதில்லை என்பதனால், மறைமுக நிபந்தனைகள் இருக்குமோ என்னவோ என்று வருத்தத்துடன் அங்கலாய்த்துக் கொள்கிறார் பிரதமர் இந்திரா அவர்கள். இந்தியா பெறும் உதவி பெரும்பாலும் அமெரிக்காவிடமிருந்துதான் கிடைத்துக் கொண்டிருப்பதால், அமெரிக்காதான் நிபந்தனைகள் விதிக்கிறதா என்று எண்ண வேண்டியிருக்கிறது. இதைப் பற்றி அமெரிக்கத் தூதுவர் திரு செஸ்டர் பௌல்ஸ் "அமெரிக்க ரிப்போர்ட்டர்" சஞ்சிகையில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் சிந்தனைக் குரியவை.

நிபந்தனைகள் என்று ஏதாவது இருக்க வேண்டுமானால், அவை இரண்டு விதங்களில் இருக்கும். ஒன்று அரசியல் சம்பந்தப்பட்டது; மற்றொன்று பொருளாதாரத்தைப் பொறுத்தது. அரசியல் சம்பந்தப்பட்ட வரையில் நிபந்தனை ஏதும் இல்லை என்கிறார் அழுத்தம் திருத்தமாக அமெரிக்கத் தூதுவர்.

அரசியல் போகட்டும். பொருளாதாரத் துறையில் எப்படி? இதில் நிபந்தனை உண்டு என்று ஒளிவுமறைவு இல்லாமல் அவர் சொல்லுகிறார். அமெரிக்க உதவி நல்ல முறையில் பயன்படுத்தப் பெற்றாலே தொடர்ந்து உதவி வழங்குவதில் அமெரிக்கா உற்சாகம் காட்டுகிறது என்பதே இது. இதை 'நிபந்தனை' என்று சொல்வதற்கில்லை. பல நாடுகளில், அமெரிக்க உதவி பூரணமாகப் பயன்படுத்தப் படாது வீண் விரயம் செய்யப்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம் நிர்வாகத் திறன் இல்லாமை, திட்ட இனங்கள் சீராக வகுக்கப்படாமை, தனி மனிதர்களுக்கு ஊக்கம்

முசிரி சுப்பிரமணிய ஐயர்



அட்டைப்படவிளக்கம்

கலை விழாக்கள்

இந்த இதழ் கலைநேயர்களின் கரங்களை அலங்கரிக்கும்போது சென்னையின் பல பாகங்களிலும் கலை விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும். ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் நிகழும் இவ்விழாக்கள் இன்று தமிழகத்தில் மட்டுமல்ல, பாரதம் முழுவதிலுமே, ஏன், உலகின் வேறு பல தேசங்களிலும் உள்ள ரசிகர்களைக்கூட ஈர்க்கின்றன.

அரசியல், பொருளாதாரத் துறைகளில் உள்ள சிக்கல்களை, கவலைகளை மறந்து கலை உலகில் நாம் புகுந்துவிட முனைவதாக வைத்துக் கொள்ளலாம்தான்; ஆனால் அதைக் காட்டிலும், எத்தனை பிரச்னைகள், சிரமங்கள் இருந்தாலும் கலைகளை ரசிப்பதும் ஆதரிப்பதும் ஒரு பண்பாடாகத் தமிழகத்தில் வளர்ந்து விட்டது என்று கூறுவது பொருந்தும்.

எப்படியாயினும் டிசம்பர் இசை விழாக்கள் நவராத்திரி போலவும் தீபாவளி போலவும் சென்னைவாசிகளின் வாழ்க்கையில் ஓர் அங்கமாகி விட்டன. இதையொட்டியே இவ்விதழ் மேலட்டை ஓவியத்தைத் தீட்டி யிருக்கிறார் ஓவியர் வினு.

அளிக்கப்படாமை, வரிப்பளு, அரசியல் ஊழல்கள், வஞ்சம், நேர்மைக் குறைவு முதலியவை. இவை எவ்வளவு தூரம் இந்தியா விஷயத்தில் பொருந்தும் என்பதை நாமே சிந்தித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

நிதானத்தை இழக்காமல் சிந்தித்துப் பார்த்தால் இந்தப் பொருளாதார நிபந்தனைகளில் இரு சாராருக்கும் நன்மையே இருப்பது தெரிய வரும்.

ஆட்சிச் சார்பற்ற, ஆனால் நிர்வாகத் திறமையும் தேசப் பற்றும் நிறைந்த அறிஞர்கள் முந்நூறு பேர்கள் சமீபத்தில் புது தில்லியில் நடத்திய "ஜனநாயக மகாநாட்டில்" நாட்டின் நன்மைக்காகச் சில அருமையான கருத்துக்கள் சொல்லப்பட்டன. தொழிற் கம்பெனிகள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை கொடுப்பதைச் சட்ட பூர்வமாகத் தடை செய்ய வேண்டும்; பத்தாண்டு காலம் அமைச்சர்களாகப் பதவி வகித்தவர்கள் ஓய்வு பெறல் வேண்டும்; தேர்தல்களில் எல்லா அபேட்சகர்களுக்கும் சர்க்கார் செலவில் சில பொதுவான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்; வோட்டுக் கணக்கெடுப்பு முறைகளில் சில மாறுதல்கள் செய்ய வேண்டும் - இப்படிப் பல யோசனைகள் சொல்லப்பட்டன. எல்லாவற்றையும்விட மிக முக்கியமாக, "நேர்மை யுள்ளவர்களுக்கும், ஜாதி, இன, மதவெறியில்லாதவர்களுக்கும் சமூகத்தில் மாறுதல்களைச் செய்வதில் அமைதியான முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற திடநம்பிக்கை உள்ளவர்களுக்குமே வோட்டுப் போடுங்கள்" என்று நாட்டின் வாக்காளர்களுக்கெல்லாம் ஒரு வேண்டுகோளும் விடுத்துள்ளனர். நாட்டின் நன்மைக்கு இதைவிடச் சிறந்த அறிவுரை வேறு இருக்க முடியாது.

மேதை என்ற சொல்லுக்கு, கலைஞர் என்ற பதத்துக்கு, அற்புத மனிதர் என்ற வார்த்தைக்கு, திறமைசாலி என்ற பாராட்டுக்கு உருவமாக விளங்கிய வால்ட் டிஸ்னி தமது 65வது வயதில் திடீரென்று மரணமடைந்தது உலக மக்களுக்கோர் அதிர்ச்சி. உழைப்பால் உயர்ந்து, உன்னத நிலைக்கு வர முடியும், உன்னதமான காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர் டிஸ்னி. வாழ்க்கைத் துயரை மறந்து, உலக மக்களெல்லாம் குலுங்கக் குலுங்கச் சிரிக்குமாறு செய்தவர் அவர். கார்ட்டூன் படம் என்றால் டிஸ்னியின் பெயர்தான் நினைவுக்கு வரும். தமது மகத்தான சிருஷ்டிகளால் உலக மக்களிடையே ஒருமைப்பாட்டுக்குப் பணி செய்தவர் வால்ட் டிஸ்னி. அவர் அமெரிக்கராயினும் அவரது படைப்புகளை ரஷியரும் ரசித்தனர். சீனக்காரர்களையும் சிரிக்க வைக்கும் ஆற்றல் அவற்றுக்கு இருந்தன. உலகின் எந்த மூலையிலும் டிஸ்னியின் படைப்புக்களுக்கு அமோகமான வரவேற்பிருந்தது. இனம், மொழி, சமயம் எதுவும் இவற்றின் குறுக்கே நிற்கவில்லை.

வால்டர் எலியாஸ் டிஸ்னி ஒரு சிறந்த சித்திரக்காரர். இயற்கையை ஆராயும் அறிஞர். மிக்கி மவுஸ், டொனால்டு டக், புளூட்டோ, ஸ்நோ வொயிட்டு, குள்ளர்கள் ஆகியோர் எங்கு சென்றாலும் எல்லாரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தித் தோழமையை வளர்த்தனர். கார்ட்டூன் மட்டுமல்லாது காட்டு விலங்குகளையும் நடிக்கச் செய்து அற்புதமான படங்களைத் தயாரித்த விந்தை மனிதர் டிஸ்னி.



வால்ட் டிஸ்னி

அவர் சமைத்துத் தந்திருக்கும் 'டிஸ்னி உலகம்' ஓர் ஒப்பற்ற படைப்பு. உலகத் தலைவர்கள், அறிஞர்கள், சாமானிய மக்கள் ஆகிய அத்தனை பேர் கவனத்தையும் கவர்ந்து பாராட்டைப் பெற்றதோர் உலகம் அது. இந்த உலகத்தில் டிஸ்னி இறவாமல் என்றும் வாழ்வார்.



ராஜாஜியின் கருத்துக்கள்

பத்திரிகைகள் பாராட்டுகின்றன

பிரதமர் ஒப்புக்கொள்கிறார்

தில்லியில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் தேசிய மகாநாட்டைப் பற்றிப் பொதுவாகப் பத்திரிகைகள் நல்ல முறையில் பிரசுரம் செய்துள்ளன. பரந்த மனப்பான்மையுடன் தலையங்கங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

''ஜனநாயக — தேசிய ரீதியில், ஆளும் கட்சிக்குத் தான் ஒரு சிறந்த மாற்று என்பதைச் சுதந்திரக் கட்சி வெற்றிகரமாக வெளிப்படுத்திக் கொண்டுள்ளது'' என்று 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' கூறுகிறது. இதுவே மிகவும் முக்கியமான விஷயம். நீண்டகால அடிப்படையில் சீனம், பாகிஸ்தான் ஆகியவற்றின் போர் மிரட்டலிலுள்ள வித்தியாசத்தைத் தெளிவாக எடுத்துக் காட்ட மகாநாடு தவறிவிட்டது என்றும் இதே பத்திரிகை கூறுகிறது. என் சொந்தக் கருத்து, இன்று சச்சரவுகளிருந்தாலும் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒற்றுமை பூணுவது தவிர்க்க முடியாதது என்பதே. இத்திசையில் விரைவிலேயே பாகிஸ்தானும் சக்தியுடன் செயலாற்றத் தொடங்குமென நம்புகிறேன்.

❖❖❖

சுதந்திரக் கட்சித் திட்டத்தைப் பற்றி 'மெயில்' எழுதியிருப்பதையும் மகிழ்ச்சியுடன் தருகிறேன்:

> ஏழே ஆண்டுகளுக்கு முன்தான் சுதந்திரக் கட்சி தோன்றியது என்பதைப் பார்க்குமிடத்து அதன் வளர்ச்சி குறிப்பிடத் தக்கது. இது காரணமாகத்தான் 1967 தேர்தலுக்குத் தயாராகும்போது அதன் தலைவர்களின் பேச்சில் தன்னம்பிக்கை ஓங்கிக் காண்கிறது. பொறுப்புள்ள ஸ்தானம் வகிக்கும் ஆளும் கட்சியினர் அக்கட்சியின் மீது வீசும் குற்றச்சாட்டுக்களே அதன் வளரும் பலத்துக்குச் சிறந்த சான்றாகும். வாக்காளர்களில் பெரும்பாலோர் அறியா மக்களாக உள்ள நம் நாட்டில் தேர்தல் வெற்றி என்பது உணர்ச்சிகளைக் கிளப்பி விடுவதையே சார்ந்திருக்கிறது. அப்படியிருந்தும் சுதந்திரக் கட்சி அபிவிருத்தி கண்டிருப்பது விசேஷமாகும். அது கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டிவிட அருவருக்கிறது. பிரசார மந்திரங்களையும் கவர்ச்சிச் சொற்றொடர்களையும் அது தவிர்க்கிறது. விஷயங்களைச் சுயமாகப் பகுத்தறியக் கூடியவர்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவே போதும் என்று அது திருப்தி கொள்கிறது. அதே சமயத்தில் ஆளும் கட்சியின் தர்ம சக்தி வேகமாகக் குன்றி வரவர, பொது மக்களும் தனது கொடியின் கீழ் குழுமுவார்களென அது அறிந்துள்ளது.

'இந்தியாவை உண்மை இந்தியாவாக்கும் போரில் வெற்றி தோல்வியைப் பொருட்படுத்தக் கூடாது. இது ஒரு தருமக் கடமை, இது ஒரு சமயக் கடமை என்று கருதிப் போராட்டத்தைத் தொடரவேண்டும்' என்று நான் மகாநாட்டில் பேசியிருந்தது பற்றி, ''காந்திஜி இப்படித்தான் கருதியிருப்பார்'' என்று மெயில் கூறுகிறது. 'சுதந்திரப் போராட்டத்தில் சறுக்கல்கள் இருந்தாலும் அது எப்போதுமே வெற்றி காணும். பிதுரார்ஜிதமாக இந்தப் போரைத் தந்தையிடமிருந்து மகன் பெற்று நடத்துவான்' என்று இரேக்க விடுதலைப் போர் பற்றி ஆங்கிலக் கவி பைரன் கூறினார். இதுவே காங்கிரஸின் பெர்மிட் லைசென்ஸ் ஆட்சியை எதிர்க்கும் போராட்டத்துக்கும் பொருந்தும்.

❖❖❖

மந்திரிகள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்காகச் சர்க்கார் காரியதரிசிகள் நிருவாக வேலைகளை நிறுத்திக் காத்திராமல், தாங்களே அலுவல்களைக் கவனிக்க வேண்டுமெனப் பிரதம மந்திரி உத்தரவு பிறப்பித்திருக்கிறார் என்று ஒரு செய்தி காணப்படுகிறது. இத்தகவல் சரியாயின், தேர்தல் காலத்தில் மந்திரிகள் பதவியிலிருந்து விலக வேண்டும் என்ற சுதந்திரக் கட்சியின் கருத்தைக் கொள்கையளவில் ஒத்துக்கொள்வதாகவே ஆகும். பிரதமர் கூறியிருப்பது போல் நிருவாக காரியங்களைச் சர்க்கார் காரியதரிசிகளே கவனித்துக்கொள்ள முடியுமாயின், மந்திரிகள் பதவியிலிருந்தே விலகித் தேர்தல் பிரசாரம் செய்தாலும் இம்முறையைக் கடைப்பிடிப்பது சாத்தியமென்றும், நியாயமென்றும் ஆகிறது. பிரதமர் சொல்வது போல் மந்திரிகள் அலுவல்களையும் பொறுப்புக்களையும் காரியதரிசிகளிடம் ஒப்புவித்த பின்னர் அவர்கள் சம்பளம் வாங்கிக் கொள்வது முறையா என்ற கேள்வியும் எழுகிறது. இந்தக் கேள்விகளைத் தீர்ப்பதெனில் சுதந்திரக் கட்சி கூறுவது போல் ஆளும் கட்சியினரின் ஆட்சி அதிகாரத்தையே தேர்தலின்போது சட்டரீதியில் ரத்து செய்வதுதான் சிறந்த வழி.

காணாமற் போன பைபிள் 

சரித்திர மாணவன்

எந்தத் துறையிலும் பழைமைக்கு எப்போதுமே ஒரு தனி மதிப்புண்டு. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக் கணக்கில் விவிலிய நூல்கள் அச்சாகின்றன. ஆயினும் தொன்மையான பைபிளுக்கு உள்ள மதிப்பு இவற்றுக்கு இல்லை அல்லவா?


உலகத்திலுள்ள பைபிள்களுள் மிகப் பழைமையானவை என்று கருதப்படுபவை இரண்டு. இவற்றில் ஒன்று வாடிகேனிலும் மற்றொன்று பிரிட்டிஷ் மியூஸியத்திலும் உள்ளன. ஆனால் பழைமையில் இவற்றுக்கு இணையான ஒரு பைபிளைக் கிறிஸ்துவ மத குருமார்கள் இந்தியாவிலிருந்து சென்ற நூற்றாண்டில் பெற முடிந்தது என்றால் பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். இந்தியர்கள் பெருமிதமடையக் கூடிய இந்தத் தேசியப் பொக்கிஷம் இன்று கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. ஆயிரம் வருஷங்களுக்கும் முற்பட்ட இந்தத் தொன்மையான பைபிளின் வரலாறு சுவை மிக்கது.

ஆரம்ப காலத்தில் பைபிள் கிரேக்க, ஸிரிய, ஹீப்ரு மொழிகளில் எழுதப்பட்டிருந்தது. இந்த மூல மொழிகளிலிருந்து விவிலிய நூலை கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் லத்தீனில் மொழிபெயர்த்தவர் ஸெயின்ட் ஜெரோம். இதற்கு வல்கேட் பைபிள் என்று பெயர். இதுவே ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களுக்கு ஆதாரபூர்வமான ஆதி நூலாக இருந்து வருகிறது.

ஆனால் கிறிஸ்துவ மதத்தின் மற்றொரு முக்கிய பிரிவும் ஏசுபெருமான் சிலுவையில் அறையப்பட்ட பின் சில நூற்றாண்டுகளில் தோன்றியது. ஸிரியாவில் வேரூன்றிய இப்பிரிவு கிழக்கத்திய நாடுகளில் கிளை விட்டுப் படர்ந்தது. இக்கிழக்கத்தியப் பிரிவின் பைபிள் பிரதிகள்தாம் மலபாருக்குக் கொண்டு வரப்பட்டன. கி. பி. முதல் நூற்றாண்டிலேயே ஸெயின்ட் தாமஸின் வருகையில் தொடங்கி இந்தியாவில் கிறிஸ்துவ மதம் பரவ ஆரம்பித்து விட்டது. கிறிஸ்துவ மதத்தின் கிழக்கத்தியப் பிரிவின் தலைமைக் குரு ஸிரியாவிலிருந்தபடி மலபாரிலுள்ள தேவாலயங்களுக்கு ஆர்ச் பிஷப்புகளை நியமித்தார். இவர்களின் ஸிரிய பைபிள், ரோமன் கத்தோலிக்கர்களின் பைபிளினின்றும் பல விதங்களில் வேறுபடுகிறது. இந்த ஸிரிய பைபிளே மிகத் தொன்மையான அசல் பைபிள் என்று நம்பப்படுகிறது. கி. பி. நான்காம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கூடிய கிறிஸ்துவ மத குருமார்கள் பைபிளை ஒரே சீராக ரோமன் கத்தோலிக்க முறைப்படி அமைக்க முடிவு செய்தார்கள். இதன் பின்னர்தான் முன்னரே குறிப்பிட்டபடி கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் ஸெயின்ட் ஜெரோம் வல்கேட் பைபிளை உருவாக்கினார்.

மலபாரில் இந்திய கிறிஸ்துவர்கள் ஸிரிய பைபிளையே பின்பற்றி வந்தனர். 1498ல் போர்ச்சுகீஸியர் வந்தபோது இங்கு ரோமன் கத்தோலிக்கப் பிரிவைப் பரப்ப முனைந்தார்கள். கிறிஸ்துவ மதம் இந்தியாவிலும் பரவியிருப்பது பற்றி அவர்கள் மகிழ்ந்தாலும் அதன் கிழக்கத்தியப் பிரிவு இங்கு வேரூன்றியிருப்பது அவர்களுக்குப் பிடித்தமாக இல்லை. ஸிரிய கிறிஸ்துவர்களை மாற்றி ரோமன் கத்தோலிக்கர்களாக்க — அவர்களின் பற்றுதலை ஸிரியாவிலிருந்து விலக்கி ரோமாபுரி போப்பாண்டவரின் பக்கம் திருப்ப—முனைந்தார்கள். இதனால் இந்திய கிறிஸ்துவர்களுக்கும் போர்ச்சுகீஸியருக்கும் இடையில் சதா மனஸ்தாபமும் போராட்டமும் இருந்து கொண்டே இருந்தன. 1599ல் கோவாவில் இருந்த ஆர்ச் பிஷப் மென்ஸஸ் இந்திய கிறிஸ்துவர்களின் பிடிவாதத்துக்குக் காரணம் ஸிரிய பைபிளே என்று தீர்மானித்தார். மலபாரிலுள்ள இந்த ஸிரிய பைபிள்களையெல்லாம் ஒழித்துக் கட்டிவிட்டால் கிறிஸ்துவ மதத்தின் கிழக்கத்தியப் பிரிவினிடம் — ஸிரியாவில் உள்ள

கேரளத்திலுள்ள ஒரு பழைமையான ஸிரிய கிறிஸ்துவ ஆலயம்



தலைமைப் பீடத்தினிடம் இவர்களுக்கு உள்ள பற்றுதல் போய் விடும்; இவர்களின் விசுவாசம் ரோமாபுரிப் பக்கம் திரும்பிவிடும் என நினைத்தார்.

இதற்காக ஆர்ச் பிஷப் மென்ஸஸ் உதயம்பேரூர் என்ற இடத்துக்கு எல்லாக் கிறிஸ்துவப் பாதிரிமார்களையும் தலைவர்களையும் வரச் செய்தார். அவர்கள் தங்களிடம் உள்ள பைபிள்களையும் மற்றப் பழைமையான விவிலிய இலக்கியங்களையும் கொண்டுவர வேண்டும் என்றார். ஸிரிய பைபிளில் உள்ள சில தவறுகளைத் திருத்திக் கொள்ளவே இந்தக் கூட்டம் கூட்டப்படுவதாகத் தெரிவித்தார். பயமுறுத்தியும் நயமாகப் பேசியும் ஆயுத பலத்தைக் காட்டியும் அனைவரையும் உதயம்பேரூரில் குழுமியிருக்கச் செய்தார். ஒரு வாரம் வரை நடந்த இந்த மத குருமார்களின் மகாநாட்டின்போது ஸிரிய கையெழுத்துப் பிரதிகள் எதுவானாலும், அவை ரோமன் கத்தோலிக்க பைபிளுடன் ஒத்துப்போகவில்லையானால் எரிக்கப்பட்டன. இந்திய கிறிஸ்துவர்களின் நம்பிக்கைகளுக்கு ஆதாரமான தஸ்தாவேஜுகளும் விவிலிய இலக்கியங்களும் கொளுத்தப்பட்டன. ஆகக் கூடி 1599ஆம் ஆண்டுக்கு முற்பட்ட இந்திய கிறிஸ்துவர்களின் மதாசாரங்களைப் பற்றிய இலக்கிய ஏடுகள், குறிப்புகள், எல்லாமே ஏககாலத்தில் தீக்கிரையாகிவிட்டன. இது போதாதென்று அங்கமலே என்னுமிடத்திலிருந்த இந்திய கிறிஸ்துவ ஆர்ச் பிஷப்பினுடைய நூலகமும் எரித்துச் சாம்பராக்கப்பட்டது.

இது போன்ற ஓர் அநீதியை உலக சரித்திரத்திலேயே வேறு ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் தான் காண முடியும். அது கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அலெக்ஸாந்திரியாவிலிருந்த பிரும்மாண்டமான நூலகத்தைக் காலிப் ஓமார் கொளுத்தியதாகும்.

இந்திய கிறிஸ்துவ மத குருமார்கள் போர்ச்சுகீஸியரின் இந்த அநீதியைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தங்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து அவர்கள் விடுபடுமுன்னரே காரியம் கைமீறிப் போய்விட்டது.

ஆனால் இத்தனைக்குமிடையில் ஆண்டவன் அருளால் ஒரு மகிழ்ச்சிகரமான விஷயமும் நடந்தது. போர்ச்சுகீஸிய ஆர்ச் பிஷப் உதயம்பேரூருக்கு வருமாறு எல்லாருக்கும் அழைப்பு விடுத்திருந்தாரல்லவா? அந்த அழைப்பு மத்திய மலபாரின் மலைப்பாங்கான பகுதியில் ஒதுங்கி நின்ற ஒரு மாதா கோயிலுக்கு மட்டும் போய்ச் சேரவில்லை. ஆகவே அங்கிருந்த ஒரே ஒரு ஸிரிய பைபிள் மட்டும் தீக்கிரையாகாமல் தப்பியது!

இந்தப் பைபிள் பின்னால் இந்தியாவில் ஸிரிய கிறிஸ்துவர்களின் விலை மதிக்க முடியாத பொக்கிஷமாக விளங்கியது. இது மட்டும் தப்பித்துக் கொண்டது என்ற விஷயம் வெளியே யாருக்கும் தெரியக் கூடாது என்பதற்காக இதை மிகவும் ஆயமாக ஒளித்து வைத்துப் பாதுகாத்து வந்தார்கள். அந்தத் தேவாலயத்தில் இருந்த ஸிரிய பைபிள் தொலைந்து போய்விட்டது என்பதாகச் செய்தி பரவிற்று. ரொம்ப முக்கியமான ஒருசிலருக்கு மட்டுமே அதன் ரகசியம் தெரிந்திருந்தது.

இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு பிரிட்டிஷ்காரரான மதப் பிரசாரகர் டாக்டர் கிளாடு புக்கனன் என்பவர் மலபாருக்கு வந்தார். இந்திய கிறிஸ்துவர்களின் சரித்திரத்தை ஆராய்ந்தார். அப்போது ஸிரிய கிறிஸ்துவர்களின் தலைவரான டையோனே-ஸியஸ் என்பவரின் நட்பு அவருக்குக் கிடைத்தது. இவர் புக்கனனுக்குக் "காணாமற் போன பைபிள்" பற்றிச் சொன்னார். இந்தப் பைபிள் அப்போது பழைமை காரணமாகப் பொடிப் பொடியாகும் நிலையில் இருந்தது. எழுத்துக்கள் பல மங்கி மறைந்து கொண்டிருந்தன. எனினும் அந்த இடங்களிலும் பேனா அழுந்திய கோடுகள் இலேசாகத் தெரிந்தன.

டாக்டர் புக்கனன் இந்தப் பைபிளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டார். அதனை அச்சிட்டு வருங்கால உலகுக்குப் பாதுகாத்து வைப்பதாகவும் கூறினார். ஆயிரம் ஆண்டுகளாகப் பாதுகாத்து வரப்பட்டதைக் கொடுப்பதா என்று ஆர்ச்பிஷப் டையோனேஸியஸ் யோசித்தார். 'ஒரு கடினமான பிரச்னை தான். ஆனாலும் எத்தனை நாளைக்கு அந்தப் பைபிளை நாம் வைத்துப் பாதுகாக்க முடியும்? நாளுக்கு நாள் அது உளுத்துப் போய்க் கொண்டிருந்ததே!' பத்து ஆண்டுகளுக்கு முன்னர்தான் திப்பு சுல்தான் இந்திய மாதா கோவில்கள் பலவற்றை அழித்தது அவர் நினைவுக்கு வந்தது. 'இந்தக் காணாமற் போன பைபிளுக்கு ஏதேனும் அசந்தர்ப்பமான விதத்தில் ஆபத்து நேர்ந்துவிட்டால்? ஒரு முறை அச்சானால் போதும். அப்புறம் இதன் எதிர்காலம் பற்றிக் கொஞ்சமும் கவலையே யில்லைதான். பிரிட்டிஷார் மதம் சம்பந்தப்பட்டவரை பரந்த மனப்பான்மை உடையவர்கள்...'

டாக்டர் புக்கனனை நம்பிப் பைபிளை அவரிடம் ஒப்படைத்தார் ஆர்ச் பிஷப்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தப் பைபிளை கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக்கு வெகுமதியாகக் கொடுத்தார் புக்கனன். அங்கு பத்திரமாக அது பாதுகாக்கப்பட்டு வருகிறது.

1815ம் ஆண்டு இந்தப் பைபிள் அச்சிலேறியது. கிறிஸ்துவ மத ஆராய்ச்சியாளர்களுக்கு இந்தத் தொன்மையான பைபிள் ரொம்பவும் மதிப்புடையதாகத் திகழ்கிறது. ஹிந்து மதம், பௌத்த மதம் ஆகிய உலக மதங்களைத் தோற்றுவித்த இந்தியா, கிறிஸ்துவ மதத்தின் மிகப் பழைமையான, மிக மிக அபூர்வமான ஒரு விவிலிய நூலையும் பாதுகாத்துக் கொடுத்தது என்பதால் நாம் எல்லோருமே பெருமிதம் அடையலாம் அல்லவா?

உலகம் ஒரு கண்ணாடியை ஒக்கும். நாம் நகைத்தால் அதுவும் நகைக்கும். நாம் முகம் களித்தால் அதுவும் முகம் களிக்கும்.

ஆதாரம்: ஆம்பர்

அனுப்பியவர்: அ. பாண்டியராசன்

சபாஷ் சிக்கனம்!



எஸ். ஸ்ரீகுமார்

'மடையன்! எவ்வளவு பெரிய முட்டாள்தனமான காரியம் செய்துவிட்டேன்' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டான் கண்ணன். அவனுடைய இந்த வருத்தத்துக்குக் காரணம் நேற்று மாலை நடந்த நிகழ்ச்சிதான். அவனுடைய ஆபீசுக்குப் பக்கத்து ஆபீஸில் 'ஸ்டெனோ'வாக வேலை பார்க்கும் நிம்மியைக் காதலித்து வந்தான் கண்ணன். நிம்மிக்கும் கண்ணனைப் பிடித்திருந்தது என்றே கூறவேண்டும்.

அன்று வழக்கம் போல் கண்ணனும், நிம்மியும் ஏதோ பேசிக் கொண்டே சைனாபஜாரின் பக்கமாக வந்துகொண்டிருந்தனர். அப்பொழுது நிம்மியின் கண்கள் ஒரு கடையின் பக்கம் சென்றன. அந்தக் கடையில் கண்ணைப் பறிக்கும் பலவித வண்ணங்களில் கைப் பைகள் மாட்டித் தொங்கவிடப் பட்டிருப்பதைக் கண்டாள்.

''கண்ணன்! அந்த 'ஹாண்ட் பாக்' ரொம்ப நன்றாக இல்லை? அதோ அந்த 'ரோஸ்' வர்ணம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. வாங்கிக்கொடுங்களேன். வாருங்கள்!'' என்று கண்ணனுடைய பதிலுக்குக் கூடக் காத்திராமல் அவனை இழுத்துக் கொண்டு கடையில் நுழைந்துவிட்டாள் நிம்மி.

குறிப்பிட்ட கைப் பை ஒன்றைச் சுட்டிக்காட்டி, ''விலை என்ன?'' என்று கடைக்காரரிடம் கேட்டாள் நிம்மி.

''ஐந்து ரூபாய், அம்மா!'' என்று கடைக்காரரிடமிருந்து பதில் வந்தது.

''எடுத்துக் கொள்ளட்டுமா?'' என்று அவள் கண்ணனிடம் கேட்டபொழுது, ''நிம்மி! உனக்குத்தான் ஏற்கனவே ஒரு கைப்பை இருக்கிறதே. இன்னும் எதற்கு? ஐந்து ரூபாயை வீணாக்குவானேன்?'' என்றான் அவன்.

அவனுடைய அந்த வார்த்தைகளைக் கேட்டு அவளுடைய முகம் ஏமாற்றத்தால் சுருங்கியது. ஒன்றும் பேசாமல் அவள் வெளியே வந்து விட்டாள்.



''கோபமா? நிம்மி! என் மனத்தில் பட்டதைச் சொன்னேன். அவசியம் வேண்டுமானால் வாங்கிக் கொள்'' என்றான் கண்ணன்.

''பரவாயில்லை.... சம்பளம் வந்ததும் நானே வாங்கிக் கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அவனுக்கு முன்பாக நடந்து சென்றாள். அவனிடம் அதிகம் ஒன்றும் பேசவில்லை. வழக்கம் போல் சொல்லும் 'டாட்டா' கூடச் சொல்லாமல் பஸ் வந்ததும் ஏறிக்கொண்டு சென்று விட்டாள். மறு நாள் காலையில் ஆபீஸில் கண்ணனுடைய பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. அதைப் பிரித்துப் படிக்கலானான். நிம்மிதான் எழுதியிருந்தாள்:

''அன்புள்ள கண்ணனுக்கு,

நிம்மி எழுதிக் கொண்டது. நேற்று நீங்கள் நான் கேட்ட அந்தக் கைப் பையை வாங்கிக் கொடுக்காததற்குக் கோபம் அடைந்தேன் என்று தவறாக நினைத்துக் கொண்டிருப்பீர்கள். என் வருத்தமெல்லாம் 'ஹாண்ட் பாக்' கிடைக்கவில்லையே என்பதனால் அல்ல. கேவலம், ஓர் ஐந்து ரூபாய்க்கு இப்படிக் கணக்குப் பார்க்கும் நீங்கள், நாளை நமக்குக் கலியாணம் ஆகிவிட்டால், நிச்சயமாக எதற்கு எடுத்தாலும் வரவு செலவுக் கணக்குப் பார்ப்பீர்கள். எனக்கு இந்தக் கருமித்தனமே கட்டோடு பிடிக்காது. உங்களைப் போன்ற ஓர் ஆசாமிக்கு வாழ்க்கைப் பட எனக்குப் பயமாக இருக்கிறது. நம் காதலுக்கு நேற்றுடன் ஒரு முற்றுப் புள்ளி விழுந்து விட்டது. -நிம்மி''

'சே! என் காதலியின் ஆசையை நிறைவேற்றாத நானும் ஒரு மனிதனா? ஒவ்வொருத்தன் காதலுக்காக எவ்வளவு தியாகம் செய்கிறான். என்ன இருந்தாலும் நான் என் கஞ்சத் தனத்தை நிம்மியிடம் காட்டிக் கொண்டிருக்கக் கூடாதுதான்' என்று வருத்தப் பட்டுக் கொண்டான் கண்ணன். ஆபீஸில் வேலையே ஓடவில்லை.

மூன்றாம் நாள் லெட்ஜரிடையே தலையைப் புதைத்



துக் கொண்டிருந்த கண்ணனிடம், ''சார், போஸ்ட்!'' என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தான் அட்டெண்டர் ஆராமுதன்.

அதைப் பிரித்துப் படிக்கலானுன் கண்ணன்:

''அன்புமிக்க திரு கண்ணன் அவர்களுக்கு, வணக்கம். நேற்று என் மகள் 'நிம்மி' தங்களுக்கு எழுதிய கடிதத்தை அவளுக்குத் தெரியாமல் படித்துப் பார்த்தேன். 'நிம்மி காதல் கீதல் என்று ஆரம்பித்து விட்டாளா' என்று கொதிப்படைந்தேன். ஆனல் கடிதத்தை முழுக்கப் படித்ததும் என் கோபம் அடங்கிவிட்டது. அதில் நிம்மி தங்களுடைய கஞ்சத்தனத்தைப் பற்றி எழுதி யிருந்தாள். உங்களுக்கு ஒரு சபாஷ்.... இப்பொழுது விலைவாசிகள் தாறுமாருக ஏறியிருக்கும் சமயத்தில் அநாவசியச் செலவு செய்யக்கூடாது. மிகவும் சிக்கனமாகத்தான் இருக்க வேண்டும். நீங்கள் ஓர் ஐந்து ரூபாய்க்குக் கணக்குப் பார்த்தது பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம். என் மகள் நிம்மி இருக்கிருளே, அவள் ஒரு பெரிய ஊதாரி; அவளுக்குத் தங்களைப் போன்ற ஒரு சிக்கனமான ஆசாமியைத்தான் இத்தனை நாளும் தேடிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் என்னுடைய மாப்பிள்ளையாக ஆகும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். **- சின்னசாமி**

பி. கு. : இப்போதைக்கு நிம்மியைத் திருப்திப்படுத்த அவளுக்கு நீங்கள் ஓர் உயர்ரக 'ஹாண்ட் பாக்' வாங்கித் தரலாமே!

கடிதத்தைப் படித்து முடிப்பதற்கு முன்பாகவே கடைத்தெரு நோக்கி ஓடிக் கொண்டிருந்தான் கண்ணன்.



லண்டனில் பி. பி. ஸி. நிகழ்ச்சிக்காகத் திரு மோகன் சிங் உலக அழகி மிஸ் ரீடா ஃபாரியாவைப் பேட்டிகண்டார். ஐம்பத்தொரு நாடுகளைச் சேர்ந்த அழகிகளிடம் பேரழகி என்று பெயரெடுத்த ரீடா தம் அனுபவங்களை விளக்கிருர்.

சென்னை புரசவாக்கம் எம். ஸிடி. முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு எஸ். நரசிம்மன் அவர்களுக்கு ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தேசிய விருது வழங்குகிருர்.

பம்பாயில் பாரதி கலா மன்றத்தின் ஆதரவில் டிசம்பர் 11, 12 தேதிகளில் நடைபெற்ற பாரதி விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கு பம்பாய் சர்வகலாசாலை துணைவேந்தர் பி. பி. கஜேந்திர கட்கர் பாராட்டுத் தெரிவிக்கிருர்.












பெற்றால்தான் பிள்ளையா ?

‘இந்தப் பட முதலாளிகளுக்குக் காதலைத் தவிர வேறு ஒன்றுமே தெரியாதா? இப்படி இளம்பிள்ளைகளின் மனத்தைக் கெடுத்துத் தொலைக்கிறார்களே!’— இப்படி எங்கும் கண்டனக் குரல் கேட்கிறது. காதலைவிடப் பாசத்துக்கு முதல் இடம் கொடுத்துள்ள படம் ‘பெற்றால்தான் பிள்ளையா?’

ஆனந்தன் அநாதை. ‘யாரோ தவமிருந்து யாரோ மடி சுமந்து’ பெற்ற பிள்ளையை வளர்க்கக் கடுமையாக உழைக்கிறான். தன் அருமைக் காதலி சோசியக்காரியையும் புறக்கணிக்கிறான். ‘நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி!’ என்று எம். ஜி. ஆர். அநாதை ஆனந்தனாக வந்து அன்பையும் பாசத்தையும் பொழிகிறார். கௌரவ நடிகர் டி. எஸ். பாலையாவிடம் போலீஸ்காரரின் இயற்கையான குண விசேஷங்களைக் காண்கிறோம். ‘நடமாடும் பள்ளிக்கூட’மான பலூன் வியாபாரி தங்கவேலு பொம்மைகளை விற்பதோடு விஞ்ஞானத்தையும் சிறுவர்களுக்குத் தருகிறார்.

காதலை விடக் குழந்தை வளர்ப்பு-பாசம் இவற்றுக்கு முதலிடம் தந்துள்ளதற்காகவே இந்தப் படத்தைப் பார்க்கலாம்.



மணிமகுடம்

நாட்டைக் காட்டிக் கொடுத்து அந்நிய நாட்டு ஆதிக்கத்துக்கு வரவேற்பு கொடுக்கத் தயாராக இருந்தது ஒரு துரோகக் கூட்டம். முடியரசுக்கு முடிவு கூறிக் குடியரசை நிறுவ முயன்றது மக்கள் மன்றம்.

ஆனால் அந்நாட்டு மன்னன்? அரச போகத்தையும், அரண்மனை வாழ்வையும் துறந்து, தானே மக்களாட்சிக்கு வித்தூன்ற அரும்பாடு பட்டான். எப்படி? அரியணையில் அரசன்; மக்கள் மன்றத்தில் ஒரு தொண்டன்; குறுக்கு வழியில் சென்று குடியைக் கெடுக்க முயலும் குள்ளநரிக் கும்பலில் ஒரு பைத்தியக்காரன் — இப்படிப் பல மாறு வேடங்களில் மறைந்து திரிந்தான்.

எஸ். எஸ். ராஜேந்திரன் மூன்று வேடங்களில் தோன்றுகிறார். ஆனால் பைத்தியக்காரன் வேஷத்தில்தான் அவர் நடிப்பு பாராட்டும்படியிருக்கிறது. விஜயகுமாரி புரட்சி மிகுந்த மக்கள் மன்றத்தில் முக்கிய அங்கம் வகிப்பதோடு நடிப்பிலும் முக்கியமாக விளங்குகிறார்.

பூங்கொடி ஜயலலிதா அரண்மனைப் பூங்காவில் நடனமாடி, அரசனைக் கட்டித் தழுவி மகிழ்கிறார். மன்னனைப் பழிவாங்க வந்திருப்பதாகக் கூறிக் கொண்டு வந்த காரியத்தை மறந்து விடுகிறார். காதல் வென்று விடுகிறது. ஜயலலிதாவுக்கு ஏற்ற பாத்திரம்தான்.

மனோரமா—நாகேஷ் ஹாஸ்யக் கட்டங்கள் சிரிப்புக்கு இடமாயிருக்கின்றன!

கலைஞர் மு. கருணாநிதி கதையில் கருத்தையும், திருப்பங்களையும் புகுத்தி, வசனத்தில் அடுக்கு மொழிகளையும் அருமையாக அமைத்திருக்கிறார்.

‘‘மணி மகுடம்’’ மறைந்த சாம்ராஜ்யங்களின் சரித்திரங்களை நினைவூட்டுவதோடு காலத்துக்கேற்ற கருத்தை அழகாகக் கூறுகிறது.



வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு

அத்தியாயம் 13

கடலின் நடுவில்!

மரக்கலம் வெள்ளைத் தீவை அணுகிய போது நல்ல வெண்ணிலவு பொழிந்து கொண்டிருந்தது. முழு நிலா இரவு அது!

''தலைவரே! இப்போது நம்முடைய மரக்கலம் வெள்ளைத் தீவின் மேற்குப் பகுதியிலே ஒரு மறைவான கரைக் கோடியை நோக்கிச் செல்கிறது'' என்று சொன்னான், வேலவனோடு வந்த புன்னாட்டு வீர ஒற்றர்களிலே ஒருவன்.

''கடம்பன் வெள்ளைத் தீவில் இல்லாத முழு நிலா இரவுதான் இது. என்றாலும் முன்காப்போடு இருப்பது நமது கடமையல்லவா! அதனால்தான் தீவின் முகப்பை விட்டுவிட்டு இப்படி ஒரு பின்புறப் பகுதியிலே நாம் இறங்க வேண்டியவர்கள் ஆகிறோம்!'' என்று மேலும் விளக்கினான் அந்த வீரன்.

''இந்தப் பகடிதான் எத்தனை கூர்மையான மதிநுட்பம் வாய்ந்தவன் பாருங்கள்! அதோ கரையின் மீது அங்குமிங்கும் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறான் தெரிகிறதா?'' என்று கேட்டான் இன்னொரு மரக்கல வீரன்.



வேலவன் கோதையும் மற்றப் புன்னாட்டு ஒற்றர்கள் ஐவரும் வெள்ளைத் தீவில் இறங்கியபோது இவர்களைக் கைகூப்பி வரவேற்றான் யவனப் பகடி.

''வேலவரே! சமணை முறைக்குச் சற்றுத் தொலைவிலே அலைகளிலேயே கண்ணாக இருக்கிறார்கள் உங்கள் நீலவல்லியும் மணிமாலையும். ஆனால் அவர்களைப் போய்ப் பார்ப்பதற்கு முன்பு மிகவும் ஆயமாக நீங்கள் இந்த வெள்ளைத் தீவின் கோட்டையை ஒரு நோட்டம் பார்த்து, மனத்திலே இதன் மையமான இடங்களையெல்லாம் நன்கு பதிவு செய்து கொண்டுவிட வேண்டும் அல்லவா?'' என்றான் அந்த யவனப் பகடி.

வேலவன் கோதை ஒற்றர்களின் துணையோடு அந்தக் காட்டுப்பாங்கான வட்டாரத்தில் மறைவாக நடந்து செல்லத் தொடங்கினான். பகடி என்ற திறமை மிக்க ஒற்றன், வேலவன் கோதைக்கு வெள்ளைத் தீவுக் கோட்டையின் அமைப்பிலுள்ள ஆயங்களை விளக்கம் செய்தான்.

''வேலவரே! காவற்காடு என்றும், கடிமிளை என்றும் உங்கள் தமிழ் நாட்டு அரசியலிலே குறிக்கிறார்களே அந்தக் காட்டு அரண்தான் இப்போது நாம் நடந்து செல்கிற இந்தக் காட்டுப் பகுதி. இன்னும் உள்ளே புகுந்தோமானால் கருவேல மரங்கள் அடர்த்தியாக நிற்கும்! அகழியின் வெளியே இப்படி ஒரு கருவேலங்காட்டினால் ஆகிய கடிமிளை என்ற அரண், இந்த வெள்ளைத் தீவுக்கு ஓர் இயற்கைக் கோட்டையாக அமைந்திருக்கிறது. அகழியைத் தாண்டி நெடுமதில் என்னும் வெளிப்புற மதிலிலே, பல இயந்திரப் பொறிகளை அமைத்திருக்கிறான் வானமண்டலக் கடம்பன்!'' என்றான் யவனப் பகடி.

''எங்கள் சேரலாத மன்னர் தொடக்கத்திலேயே இந்த நுட்பங்களை



யெல்லாம் கணித்து உணர்ந்திருக்கிறார். கோட்டை மதில்களில் ஏதேதோ இயந்திரப் பொறிகளை இவர்கள் அமைத்திருக்கிறார்கள் என்பது அவருடைய செவிகளுக்கு ஏற்கனவே எட்டியிருக்கிறது'' என்று சொன்னான் வேலவன் கோதை.

பகடி தொடர்ந்து பேசினான்:

''தலைவரே! உங்கள் சேர நாட்டுக் கோட்டை மதில்களிலும் நீங்கள் பலப்பல இயந்திரப் பொறிகளும் விசையில் இயங்கும் வட்டில்களும் அமைத்திருப்பீர்கள். ஆனால் இந்த வானமண்டலக் கடம்பன் பல திருட்டுத்தனமான, முறையற்ற, வீரமற்ற செயல்கள் புரிபவன். எதிர்ப்பு எந்த விநாடியும் ஏற்படும் என்று தெரிந்து, அதன் பொருட்டு இந்த மதில்களிலே செம்பையும் இரும்பையும் உருக்கி எதிரிகள் மீது வீசிப் பொழியும் உலைப் பொறிகளைப் பொருத்தி வைத்திருக்கிறான்! பகைவர்களுடைய கழுத்தை முறுக்கும் இரும்புத் தொடர்கள் இந்தக் கோட்டை மதில்களிலே ஏராளம்! அகழிகளுக்குள்ளோ என்றால் தூண்டிற் பொறிகள் பலவற்றை இட்டுப் பதித்து வைத்திருக்கிறான். மதில் மீது ஏறுவோர்களை இழுத்துச் சிக்கிப் பிடிப்பது இந்தத் தூண்டிற் பொறிகள்! இவற்றையும் தாண்டி மதில் மீது ஏறினால் மறித்துத் தள்ளும் கவை என்ற இயந்திரமும், கதவுகளை அணுகாதபடி அம்புகளை வைத்து எய்யக் கூடிய ''ஐயவித்துலாம்'' என்ற ஒரு விந்தைப் பொறியும், ஊசி, எறிசிரல், எழு, சீப்பு, கணையம், கோல், ஞாயில், கொழு, மழு, கழுமுள், சுழல், தோட்டி, கவண், கன்னம், தாமணி, இடங்கணி என்று தமிழ் நூல்களில் சொல்லப்படுகிற தொண்ணூற்று நான்கு வகையான கருவிகளும் இந்த மதிலுக்குள்ளே இருக்கின்றன! இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டிருப்பதால்தான் எதையும் யாரையும் பொருட்படுத்தாமல், முழுநிலா இரவுகளில் கடல் மீது சென்று இத்தனை வன்முறைச் செயல்களையும் அச்சமின்றி அவன் நடத்திக் கொண்டிருக்கிறான். மன்னர்களும் அவனுடைய மதிலைத் தாக்குவதற்குத் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது தெரிகிறதா நீங்கள் இந்த மதில்களிலே தெரிந்து கொள்ள வேண்டிய உளவு எத்தகையது என்று!''

இவ்வாறு சொன்னான் யவனப் பகடி. கடந்த சில நாட்களில் இரவு தோறும் அவன் பாதுகாவலாகச் சுற்றித் திரிவது போலச் சென்று, அந்த வெள்ளைத் தீவுக் கோட்டையையும் அதன் சுற்றுப்புறங்களையும் எவ்வளவு கூர்ந்து ஆராய்ந்திருக்கிறான் என்பது வேலவன் கோதைக்கு நன்றாய்ப் புரிந்தது.

''நான் செய்ய வேண்டிய வேலையை நீங்களே எனக்காக இவ்வளவு நன்றாகச் செய்து முடித்திருக்கிறீர்கள்! உங்களுக்கு எப்படி நான் நன்றி சொல்வது!'' என்று கேட்டான் வேலவன் கோதை.

''நான் செய்ய வேண்டிய வேலை, நீங்கள் செய்ய வேண்டிய வேலை என்றெல்லாம் பாகுபாடு செய்வதற்கு நம்மிடம் போதிய நேரமில்லை. நம் அனைவருக்கும் இப்போது ஒரே வேலை இளவரசியின் மீட்சிதான். அதை இனி உடனடியாகச் செய்வதற்கு முனைவோம்!'' என்றான் பகடி.

ஒற்றர்கள் மரக்கலம் நின்ற இடத்தை நோக்கி நடந்தார்கள். வேலவனும் பகடியும் நீலவல்லியைக் காணச் சமணை முழைக்குச் சென்றார்கள்.


* * *



வெள்ளைத் தீவிலிருந்து ஆயத்தில் எல்லாம் பெரிய ஆயமாக மிருந்த மறைவோடு அந்த மரக்கலம் புறப்பட்ட போது, நடுநிசி தாண்டிப் பின் நிசியின் பின் வேளை ஆகிவிட்டது. மரக்கலத்தின் மேல் முகட்டிலே பகடியும் ஐந்தாறு ஒற்றர்களும் நின்று கண்ணும் கருத்துமாகக் கடல் அலைகளின் சுற்றுப் பரப்பிலே விழிகளைச் செலுத்திக் காத்தார்கள். மரக்கலத்தின் உள்ளே மணிமாலையும் நீலவல்லியும் வேலவன்கோதையும் ஒருவர் மீது ஒருவர் காவற் காப்பாக இருந்தார்கள். இதயங்கள் படபடத்தன. ஆனாலும் எண்ணம் ஈடேறுகிறது என்ற ஒருமை நினைவிலே மூன்று மனங்களும் ஒன்றி நின்றன. மூவருமே எதுவும் பேசவில்லை நீண்ட நேரம். அந்த மோன ஒருமையைக் கலைத்துக் கொண்டு பேசினான் வேலவன்:

''வல்லி! இதுவரை உன் முகத்தில் பார்த்தறியாத ஒரு தெளிவு இப்போது முனைப்பாகப் பரவி நிற்பது எனக்குத் தெரிகிறது. ஆனாலும் இத்தனை தெளிவுக்கும் நடுவே இனம் தெரியாத ஏதோ ஓர் உணர்ச்சி நம் மூவரையுமே போர்த்தி நிற்கிறதே! அது ஏன் அப்படி?''

இவ்வாறு நீலவல்லியைக் கேட்டான் வேலவன் கோதை. அவன் நெட்டுயிர்ப்பாக ஒரு பெருமூச்சுடன் மறுபடியும் வேலவனையே பார்த்தான்.





சீக்கிரமாக
மார்பு சளியை
கலையுங்கள்
அமிர்தாஞ்சனம் தடவி
விரைவில் நிவாரணம் பெறுங்கள்
பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரான அமிர்தாஞ்சனம், ஜலதோஷம் மற்றும் மார்புசளி இவைகளிலிருந்து பூரணமாக நிவாரணம் அளிக்கிறது. தசைவலி, தலைவலி, சுளுக்கு இவைகளுக்கும் சிறந்த வகையில் நல்ல குணமளிக்கும் மருந்து அமிர்தாஞ்சனம். ஒரு சமயத்தில் தேவையானதெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால் ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக்கணக்கில் வரும் • அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி.
பத்து மருந்துப் பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி.
AMRUTANJAN
Pain Balm
அமிர்தாஞ்சன் லிமிடெட்
மதராஸ் - பம்பாய் - கல்கத்தா - டெல்லி

''வல்லி! எத்தனையோ உறுதியோடும் மனத் துணிவோடும்தான் நாம் இப்படி ஒரு முடிவுக்கு வந்தோம். என்றாலும் உன்னை ஒன்று கேட்கிறேன். வெள்ளைத் தீவை விட்டுப் புறப்பட்டதில் உனக்கு முழுமையாக, முற்று முழுமையாக மன நிம்மதிதானே?''

நீலவல்லி சிரித்தாள். சிரித்துக் கொண்டே சொன்னாள்:

''அன்பரே! இதுவரை இல்லாத ஒரு புதிய அனுபவம் இது! உங்கள்வரையில் எப்போதும் நேருக்கு நேர் போரிட்டுப் பழகிய ஒரு தானை வீரர் நீங்கள். நானும் மணிமாலையுமோ என்றால் பல ஆண்டுகளாகக் கூண்டுப் பறவைகளாக அடைபட்டுச் சிறைவாழ்வு வாழ்ந்தவர்கள். எங்களுக்கும் உங்களுக்கும் மூவருக்குமே தப்பி ஓடுவதென்பது ஒரு புதிய அனுபவம்தானே!''

மணிமாலை சொன்னாள்:

''புதிய நிகழ்ச்சி என்ற புதுமை உணர்ச்சிகள் ஒருபுறம் இருக்கட்டும். ஆனால் ஏனோ தெரியவில்லை. நாம் இந்த மரக்கலத்தில் ஏறிய விநாடியிலிருந்து என் நெஞ்சு படபடக்கிறது.''

மணிமாலை இப்படிச் சொன்னாளோ இல்லையோ நீலவல்லி கூறினாள்:

''நெஞ்சுதானே! படபடப்புத்தானே! ஆமாம். எனக்கும் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டேயிருக்கிறது. எவ்வளவோ மகிழ்ச்சி இருக்க வேண்டிய, உவகை பொங்க வேண்டிய ஒருவேளையில் எனக்கும் நெஞ்சு படபடக்கிறது. எதனால் என்று எனக்குமே புரியவில்லை!'' இப்படிச் சொல்லும் போதே நீலவல்லி இரண்டு கைகளையும் இறுகச் சேர்த்துக் கொண்டு நெஞ்சகத்திலே பொதிந்தாள்.

மரக்கலத்தின் அந்த உள் அறையிலே மறுபடியும் மோனம் நிலவியது. மரக்கலமோ விறுவிறு என்று படர்ந்து கொண்டிருந்தது, அலைகடலுக்கு மேலே!

இப்போது வேலவன் பேசினான்:

''வல்லி! பெண்களுடைய மெல்லிய இதயத்துக்கு உள் உணர்ச்சி உண்டு என்றும், வருங்காலத்தின் நிகழ்ச்சிகளைப் பற்றிய உணர்வின் அலைகள் பெண்களின் இதயத்தில் மிகுந்த நுட்பத்தோடு திரை வீசி எழும் என்றும், சேர நாட்டு முனிவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். நீங்கள் இருவரும் சொல்வதைப் பார்த்தால் என் நெஞ்சிலுமே ஒரு படபடப்பு ஏற்படத்தான் செய்கிறது. என்றாலும் எந்தப் படபடப்பையும் தாங்கிக்கொண்டு மேற்செல்ல வேண்டிய போர் வீரன் அல்லவா நான்? உங்களோடு சேர்ந்து நானும் கவலை கொள்ளலாகாது!''

சூப்பர் மார்க்கெட் ஹாஸ்யங்கள்

மர்மம் என்ன ?



இன்ஸ்பெக்டர்: என்னப்பா 144, மாடிக்குப் போகிற ஜனங்களை ஒழுங்குபடுத்த அங்கே நின்று கொண்டிருந்த 305ஐ எங்கே காணோம்?

போலீஸ்காரர்: மேலே போற ஜனங்கள் அவரையும் கூடவே தூக்கிட்டுப் போயிட்டாங்க சார்!

ஒரே வழி!



ஒருவர்: என்னப்பா, இங்கே நல்ல மூட்டைப்பூச்சி மருந்து கிடைக்குமா?

கடைக்காரர்: சார், உண்மையைச் சொல்லிவிடுங்கள்! மருந்து மூட்டைப் பூச்சிக்கா அல்லது மனைவியை ஜவுளிக்கடைப் பகுதியில் பார்த்துவிட்டு வந்து கேட்கிறீர்களா?

புதுமொழி !

சூப்பர் மார்க்கெட்டில் பெண் புகுந்த மாதிரி!

''இன்று போய் நாளை வா!''



''என்னப்பா! இந்த ஆப்பிள் என்ன விலை?''

''அறுபது பைசா சார்!''

''அதோ அந்த அழுகிய ஆப்பிள்?''

''அதுவும் அறுபது பைசாதான்!''

''என்னப்பா இது! நல்ல ஆப்பிளும் அழுகிய ஆப்பிளும் ஒரே விலைதானா? அதைக் கொஞ்சம் குறைத்துத் தருவதானால் அதையும் வாங்கிக் கொள்கிறேன்.''

''அப்படியானால் நீங்கள் நாளை வாருங்கள்.''

''ஏன்! இன்று நல்ல நாள் இல்லையா?''

''அதில்லை சார்! 'அழுகிய ஆப்பிளைக் குறைந்த விலைக்குக் கேட்கிறார்கள், கொடுக்கலாமா?' என்று சம்பந்தப்பட்ட அதிகாரிக்குச் சீட்டு அனுப்பி, அவர் அனுமதி தந்த பிறகு தான் ஆப்பிளை விற்க முடியும். அனுமதி வாங்க ஒருநாளாவது வேண்டாமா?''

'' ? ? ? ''

- எஸ். அருண்

மறுபடியும் மோனம் குடி கொண்டது அந்தச் சூழலிலே. மரக்கலம் திரை கடலின் மீது வேகமாகப் படர்ந்தது. விரைந்து செல்லும் ஓர் ஒளிப் படகைப் போல முழு நிலவும் வான முகில்களிலே மிகுந்த விரைவோடு 'விறுவிறு'வென்று சென்று கொண்டிருந்தது.

இப்போது நீலவல்லி பேசினாள்:

''அன்பரே! பெண்களுடைய இதய உணர்ச்சிகளைப் பற்றியும் உள்ளுணர்வுகளைப் பற்றியும் பேசினீர்கள். நீங்கள் ஒப்புதல் கொடுத்தால் என் உள்ளத்தின் ஆழத்திலே ஓடுகிற ஓர் எண்ணத்தை உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.''

இவ்வாறு தயங்கிக் கொண்டே, சொற்களை மெதுவாகத் தொடுத்தாள் நீலவல்லி.

''அன்பரே, நான் சொல்லப்போவது பாசத்தினால் ஏற்பட்ட வெறும் அச்சமோ, அல்லது பெண்களுக்குரிய கோழைத்தனமாகவோ இருக்கலாம். அல்லது உள்ளுணர்வாகவும் இருக்கலாம். எப்படியானாலும் என் உள்ளத்தில் உள்ள படபடப்பு முழுவதையும் உங்களிடம் சொல்லிவிட வேண்டும் அல்லவா நான்!''

வேலவன் கோதை சிரித்தான். அடுத்த விநாடி அந்தச் சிரிப்பு மறைந்தது. காரணம், நீலவல்லியின் முகத்திலே ஒரு பெருங் கலக்கம் படர்ந்தது. அதைத் தொடர்ந்து அவள் பேசத் தொடங்கினாள்:

''அன்பரே, வெள்ளைத் தீவிலிருந்து நாம் புறப்பட்டது பற்றி எனக்கு எள்ளளவும் தயக்கமோ, வருத்தமோ எதுவும் இல்லை. நீண்ட நாளாக எதிர்பார்த்து ஏங்கித் தவம் கிடந்த விடுதலை நாள் வந்துவிட்டதே என்று மகிழ்ச்சிதான். ஆனால்..... ஆனாலும் ஏதோ ஒன்று என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து என்னை அச்சமுறுத்தியபடியே இருக்கிறது, நாம் புறப்பட்ட விநாடியிலிருந்து! அது பொருளற்ற வீணை அச்சமாகவும் இருக்கலாம். அல்லது நீங்கள் சொன்னபடி பெண் இதயத்தின் உள்ளுணர்வாகவும் இருக்கலாம். அது எப்படி இருந்தாலும் சரி. நீங்கள் எனக்கு இப்போது ஒரு தீர்மானமான உறுதிமொழி தரவேண்டும். எந்தக் காரணமும் சொல்லி அதைத் தட்டிக் கழிக்கக் கூடாது. என்ன சொல்லுகிறீர்கள்?''

இவ்வாறு கேட்டுக் கொண்டே வேலவன் கோதையின் கண்களையே பார்த்தாள் நீலவல்லி.

''அன்பே! இந்த உள்ளமும் இந்த உள்ளத்துக்கு உடைய மனிதனுமே உன்னுடைய உடைமை என்று ஆகி விட்ட பிறகு உறுதிமொழி என்றுகூட ஒன்று தனியாக வேண்டுமா? ஆனாலும் தருகிறேன்: நீ என்ன சொன்னாலும் அதன்படி அதை நிறைவேற்றுகிறேன். சரிதானா? இப்போது சொல். நான் என்ன செய்ய வேண்டும்? என்ன உறுதி மொழி உனக்குத் தரவேண்டும்?''

''அன்பரே, என் நெஞ்சு படபடப்பதைப் பார்த்தால் ஒருவேளை நாம் புன்னாடு போய்ச் சேர்வதற்கு முன்பே அந்தப் பொல்லாத கடம்பன் நம்மைக் கண்டுபிடித்து நம்முடைய மரக்கலத்தைத் தாக்கிவிடலாமோ என்று எனக்கு அச்சமாக இருக்கிறது!''

வேலவன் கோதை உரக்கச் சிரித்தான்.

''அன்பரே, மீண்டும் சொல்கிறேன்; என் வேண்டுகோளை நீங்கள் புறக்கணித்து விடக் கூடாது. அது உறுதி தான் என்று நீங்கள் மொழி கொடுத்தால் மேலே சொல்லுகிறேன்!''

''வல்லி! அதுதான் அப்போதே சொல்லிவிட்டேனே. நீ என்ன சொல்கிறாயோ அதை உறுதியாக நிறைவேற்றுவேன். அதில் சிறிதும் தயங்க மாட்டேன்.''

நீலவல்லி குரலைச் சரிப்படுத்திக் கொண்டாள். பிறகு ஒரு விநாடி மௌனமாக இருந்தாள்; சொன்னாள்:

''அன்பரே, ஒருவேளை கடம்பன் திடீரென்று இந்த மரக்கலத்தைத் தாக்கினால் நீங்கள் உடனே செய்ய வேண்டிய முதன்மையான சாதனை ஒன்று இருக்கிறது. மரக்கலத்தின் முகட்டிலிருந்து காலடி ஓசை கேட்டதுமே நீங்கள் இந்தத் தட்டின் புகுமுகத்தை அகற்றிக் கொண்டு அப்படியே கடல் அலைகளில் குதித்து, அப்படியே வேகமாக, விரைவாக, யாருக்கும் தெரியாமல் மறு திசையிலே அலைகளுக்குள்ளே முங்கி முக்குளித்துச் சென்று அப்படியே, மூச்சை அடக்கிச் சென்று, அப்படியே, அப்படியே, அப்படியே...''

நீலவல்லியின் கைகள் பதறின!

''தப்பித்து மறைந்துவிட வேண்டும் என்று சொல்ல வருகிறாயாக்கும்!''

இவ்வாறு கேட்டுக் கொண்டே சிரித்தான் வேலவன் கோதை.

''சிரிக்கிறீர்கள் நீங்கள்! உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது! அதனால் தான் முதலிலே சொன்னேன், என் வேண்டுகோளைப் புறக்கணிக்கக் கூடாது என்று!''

''வல்லி! நீ என்ன சொல்லுகிறாய்? என்ன விந்தையான பேச்சுப் பேசுகிறாய் நீ?''

''அன்பரே, என்னையும் மணிமாலையையும் பொறுத்தமட்டில் எந்தச் சூழ்நிலையிலும் எங்களைக் கடம்பன் கடுமையாக நடத்துவான் என்றோ, எங்களுக்குத் தண்டம் வழங்குவான் என்றோ நான் நினைக்கவில்லை. முன்னமேயே உங்களிடம் சொல்லியிருக்கிறேன். ஏதோ ஒரு காரணத்தால், எங்கள் இருவருக்கும் இதுவரை புரியாத, தெரிந்து கொள்ள முடியாத, ஏதோ ஒரு காரணத்தால், வான மண்டலக் கடம்பன் எங்கள் இருவரிடமும் எந்த வேளையிலும், கடுமையின்றி, அமைதியோடு நடந்து கொள்கிறான். ஆகையால் எங்களிருவரையும் எந்தச் சூழ்நிலையிலும் அவன் கடிந்து கொள்ள மாட்டான் என்று எனக்கு உறுதியாகத் தெரிகிறது. ஆனால் உங்கள் நிலை அப்படி இல்லை. எங்கள்மீது ஏற்படுகிற சீற்றமும் சேர்ந்து ஒரு பெரிய நெருப்பாக உங்கள் மீது பாயும். எங்களுக்கு அவன் கொடுக்க வேண்டிய தண்டனையையும் சேர்த்து உங்களைக் கடுமையாகத் தாக்கக்கூடும். அதனால்தான் உங்களை நான் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்; நீங்கள் தப்பித்து மறைந்துவிட வேண்டும். இதற்கு நீங்கள் ஒப்புதல் ஏற்கனவே தந்துவிட்டீர்கள். இனி அதைப் புறக்கணிக்க முடியாது. உறுதிமொழி கொடுத்த பிறகு அதற்கு மறுமொழி ஏது...?''

மரக்கலம் வெண்ணிலவின் ஒளியிலே 'விறுவிறு' என்று விரைவாகக் காற்றாகப் பறந்து சென்று கொண்டிருந்தது. ஓங்கிப் புரளும் கடல் அலைகளின் மீது!

ஆனால் இதென்ன? திடீர் என்று இது என்ன ஆட்டம்? இது என்ன அசைவு?

வேகமாகச் சென்று கொண்டிருந்த மரக்கலம் ஏன் சுற்றித் திரிகிறது? ஏன் இப்படிச் சுழன்று அலைகிறது?

'விறு விறு' என்று ஒரே மூச்சில் படர்ந்த அந்த மரக்கலத்துக்கு இப்போது என்ன நேர்ந்தது?

'தடதட', 'படபட', 'மடமட' என்று இது என்ன ஓசை?

மரக்கலத்தின் மேல் முகட்டிலே நின்றுகொண்டிருந்த ஒற்றர்கள் கலக்கமுற்று அங்குமிங்கும் ஓடுகிறார்களா? மரப் பலகையிலே காலடி ஓசை ஏன் இப்படி அதிர்கிறது? ஐயோ, இது என்ன குழப்பம்!


''கடம்பன்! கடம்பன்! கடம்பனுடைய மரக்கலம் அதோ!''


கூக்குரல் கிளம்பியது. இரண்டு ஒற்றர்கள் மரக்கலத்தின் உள் அறைக்குள் ஓடி வந்தார்கள்.


''நம்முடைய மரக்கலத்தின் கிழக்குப் பக்கத்திலே கடம்பனுடைய மரக்கலம் — நம்மைத் தாக்குவதற்கு விரைவாக வருகிறது!''

பதறிக் கொண்டே இந்தச் சொற்களைக் குழறினார்கள் ஒற்றர்கள்!

(தொடரும்)











அவள் : இந்தச் சந்தோஷமான நேரத்திலே ஒரு பாட்டுப் பாடட்டுமா?

அவன் : வேண்டாம். இந்தக் காட்டிலே இந்த நேரத்திலே உன்னையும் தனியா விட்டுவிட்டு நானும் தனியாப் போவதற்குப் பயமா யிருக்கு!


காலை 8 மணி, சிம்ம நந்தனபல்லவி பற்றி அம்மங்குடி அபிராம பாகவதர் பேசுவார். 'மீன் பிரைஸன்' நம் பக்க வாத்தியங்களுடன் நிருபணம் செய்து காட்டுவார்.
எங்க சபாவிலே உங்க கச்சேரி! நாழியாச்சு. டாக்சி ரெடி! கிளம்புங்கோ!
1
2
கடையில் நல்ல ரேஷன் அரிசி கொடுக்கிறாளாம்!
3
கச்சேரி! என்ன ஆறது?
மனைவி:
திருடனை விரட்ட நம்மிடம் ஒரு ஆயுதமும் இல்லையே! நீங்க வேணும்னு ஒரு பாட்டுப் பாடுங்களேன்!

சிறு தொழில் பெருஞ் செல்வம்



அபட்ஸ்பரியில் நிகழ்ந்த சிறு தொழில்கள் கண்காட்சியில் சென்னை முதன் மந்திரி.

'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்று நம் முன்னோர்கள் சொன்னார்கள். பிரும்மாண்டமாகத் திட்டம் போட்டு மாபெரும் ஆலைகள் அமைக்கக் கோடிக்கணக்கில் ரூபாயை அள்ளிக் கொட்ட வேண்டும். பணத்தின் பெரும் பகுதி மாயமாக எங்கே மறைகிறது என்று தெரியாமல் கண்கட்டு வித்தை நடந்து ஏராளமாக மக்களின் வரிப் பணம் நஷ்டமாகும். அதைவிட நாடு முழுவதும் சிறு சிறு தொழில்கள் ஆங்காங்கே ஏற்பட வழி செய்வது சாலச் சிறந்தது. ஓரளவுக்கு முதலீடு செய்யக்கூடிய தனியார்களை இத்துறையில் ஊக்குவிப்பது பலன் தரும். நாட்டின் பொருளாதாரம் வேகமாக அபிவிருத்தி அடைய இது உதவும். சிறு துளி பெரு வெள்ளமாகப் பெருக்கெடுக்கும்.

சிறு தொழில்களின் முக்கியத்துவம், தேசப் பொருளாதாரத்தில் அவற்றின் பங்கு, அவை அமைய வேண்டிய முறை ஆகியவை பற்றி இன்னும் நிறையத் தெரிந்து கொள்ளச் சிறு தொழில் அதிபர்கள் நடத்திய மகாநாடு மிகவும் உதவியது. இந்தக் கருத்தரங்கில் பல சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. ஏட்டளவில் (அல்லது செவியளவில்) சிறு தொழில்களின் சிறப்பை உணர அவை வழி செய்தன.


ஆனால் இதுமட்டும் போதாது; நம் தமிழகத்தில் சிறு தொழில் பட்டறைகள் இதுவரை சாதித்துள்ளது என்ன என்று நேரடியாக மக்கள் உணரவும் வேண்டும் என்பதற்காக ஒரு கண்காட்சியும் சென்னை 'அபட்ஸ்பரி'யில் நடத்தினார்கள்.

சோப்பு வாங்குகிறோம். அதைவிட அதைத் தாங்கி வரும் அட்டைப் பெட்டியின் அமைப்பும், அழகும் அற்புதமாக இருக்கிறது. மருந்துப் புட்டியினுள்ளிருக்கும் டானிக்கின் தரம் எப்படியானாலும் அதைக் காத்துநிற்கும் அட்டைப் பெட்டியின் அழுத்தமும் அமைப்பும் அமர்க்களமாக இருக்கிறது. இப்படியே ஒவ்வொரு பொருளையும் 'பாக்' செய்து அனுப்ப இன்றைய வியாபார உலகில் பயன்படுத்தப்படும் அழகிய அட்டைப் பெட்டிகளின் பிறப்பைப் பற்றி அறிந்து கொள்ள நாம் அதிகமாக அக்கறை காட்டுவதில்லை. ஆனால் இந்தக் கண்காட்சியில் அட்டைப் பெட்டிகள் அனைவரது கவனத்தையும் கவர்ந்து தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டன.

முன்னும் பின்னும் சமதளமும் நடுவில் நெளி நெளியான அலை போன்ற மடிப்புமாக உள்ள 'பாக்கிங்' அட்டைக் காகிதங்களையும் மற்றும் பல்வேறு வகையான அட்டைப் பெட்டிகளையும் நம் மாநிலத்திலேயே இத்தனை அழகாகத் தயாரித்திருக்கிறோமா? என்ற வியப்பே அங்கு வந்திருந்த அத்தனை பேர் முகத்திலும் தெரிந்தது.

இதேபோல் கண்காட்சிக்கு வந்திருந்த குழந்தைகளெல்லாம் வியப்பால் விரிந்த கண்களோடு ஒரு பகுதியில் குழுமியிருந்தனர். 'அட! இத்தனை விதமான பென்சில்களெல்லாம் இருக்கும்போது நம்ம அப்பா எப்பவும் ஒரே மாதிரியான பென்சிலேத்தானே வாங்கித் தருகிறார்' என்ற கோபமும் ஏக்கமும் அந்தக் குழந்தைகளின் பார்வையில்தெரிந்தன. ஸ்டாண்டர்ட்பென்சில் தொழிற்சாலையினர் தாங்கள் தயாரிக்கும் பென்சில்களைக் காட்சிப் பொருளாக்கி இருந்தார்கள் அங்கே.

சுமார் இரண்டடிக்கு ஒன்றரை அடியில் ஒரு வெண் திரை. அதில் நிழற்படம் கன ஜோராக ஓடிக் கொண்டிருந்தது. நாட்டியமங்கை யொருத்தி அபாரமாக ஆடிக் கொண்டிருந்தாள். பேசாப் பட




கருத்தரங்குக்கு வந்திருந்த பிரமுகர்கள்.

மல்ல. பாட்டும் பக்கவாத்தியமும் கணீரென்று கேட்டுக் கொண்டிருந்தன. அந்தத் திரைப்படத்தை இயக்கிய புரொஜக்டரைத் தயாரித்தது நம் மாநிலம்தான்.

இந்தக் கண்காட்சியில் மக்களின் கவனத்தை அதிகமாகக் கவர்ந்த இடம் அடுப்பங்கரைதான்! அடுப்படி ஒழுங்காக இருந்தால்தானே மற்றபடிகளெல்லாம் சுமுகமாக இயங்கும். தம் பெயரைத் தெரிவிக்க விரும்பாத திருச்சிக்காரர் ஒருவர் கண்டுபிடித்த அதிசய அடுப்பை அங்கு இயக்கிக் காட்டிக் கொண்டிருந்தார்கள் ஒரு பக்கத்தில். தண்ணீரில் எரியும் அடுப்பல்லவா அது! ஆகவே, மக்களின் ஆர்வம் அங்கு திரும்புவதில் வியப்பில்லைதானே? எரிபொருளாக விறகு பயன்பட்டு வந்தது ஒரு காலம். விறகுக்குப் பஞ்சம், அதன் பிறகு கரி எரிபொருளாக வந்தது. காட்டுக் கரிக்கும் கஷ்டம் வரவே அதன் இடத்தை மண்ணெண்ணெய் பிடித்துக் கொண்டது. மண்ணெண்ணெய்க்கும் கிராக்கி—ரேஷன் கார்டு முறை. மின்சார அடுப்புக்களையும், எரியும் வாயுக்களையும் எல்லாரும் பயன்படுத்த முடியாதே. ஏழையும் பயன்படுத்தக் கூடியதும், எக்காலத்திலும் கிடைக்கக் கூடியதுமான — பஞ்சம் ஏற்படாததொரு எரிபொருளை மனிதன் தேடிக் கொண்டிருக்க; தண்ணீரையே எரிபொருளாகப் பயன்படுத்தி ஓர் அடுப்பு இருக்குமானால் அதைக் காண மக்கள் கூடாமலா இருப்பார்கள்? அடுப்பின் அடக்க விலைதான் ரொம்ப அதிகம். அடுப்பை எரிப்பதற்கான செலவோ மிக மிகக்குறைவு. இதைப் பெருமளவில் உற்பத்தி செய்தால் விலை குறையுமாம். 'இந்த அடுப்பு ஏழைகளின் கைக்கு எட்டும் காலம் எப்போதோ' என்று பெருமூச்சுவிட்டபடி நகர்ந்தார், ஒரு நடுத்தர வருவாய்க்காரர்.

மின்சார சாதனங்கள், அலாரம் கடிகாரங்கள், சைக்கிள் உறுப்புக்கள், ஸ்டீல் பர்னிச்சர்கள், பலவித யந்திர சாதனங்கள்—இப்படிப் பலப் பலவற்றைக் கண்காட்சியில் வைத்து நம் கவனத்தைக் கவர்ந்திருந்தார்கள். 'இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்' என்ற பெயரைப் படிக்கிறோமே தவிர அங்கு என்னென்ன பொருள்கள் தயாராகின்றன என்று ரொம்பப் பேருக்குத் தெரிவதில்லை. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பல சிறு பொருள்களை உற்பத்தி செய்து தருவதுடன் பெரிய பெரிய ஆலைகளும், யந்திர சாலைகளும் இயங்கத் தேவையான பல உபகரணங்களையும் இந்தச் சிறு தொழில் பட்டறைகள் செய்து கொடுத்துப் பெரிதும் உதவுகின்றன.



○ சிறு தொழில்கள் கண்காட்சியில்
○ ஒரு பகுதி.

சென்னை மாநிலத்தில் 23 சிறு தொழில் பட்டறைகளுக்கும் அறுநூறு தொழில்களுக்கும் இதுவரை அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளது. இன்று இருபத்தொரு சிறு தொழில் பட்டறைகளில் 401 தொழில்கள் இயங்கி வருகின்றன. இந்தச் சிறு தொழில் பட்டறைகளில் உற்பத்தியாகும் பொருட்களின் மதிப்பு பத்து கோடி ரூபாய். 15,000 தொழிலாளர்களுக்கு இந்தப் பட்டறைகள் வேலை வாய்ப்பு அளிக்கின்றன.

பல சிறு தொழிலகங்களைத் தன்னகத்தே கொண்ட இது போன்ற தொழில் பட்டறைகளால் சிறு தொழிலதிபர்களுக்கு என்ன லாபம்? புதிதாக ஒரு தொழிலகத்தைத் தனிப்பட்ட முறையில் தொடங்குவதென்றால் எத்தனையோ விஷயங்களைப் பற்றி யோசிக்க வேண்டும். ஆனால் தொழில் பட்டறையில் பல சிக்கல்கள் அரசினராலேயே தீர்க்கப்பட்டு விடுகின்றன. தொழிலதிபர் இயந்திரங்களைக் கொண்டு வந்து நிறுவி இயக்கி உற்பத்தியைத் தொடங்கவேண்டியதுதான். மற்ற பல பிரச்னைகளை அரசினரே கவனித்துக்கொள்கிறார்கள். உதாரணமாக நிர்வாகிகள் வேலை செய்வதற்கான காரியாலயம், உத்தியோகஸ்தர்கள் வசிக்க இடம், உணவு அளிக்கும் கான்டீன், முதலுதவிச் சிகிச்சை தர நிறுவனம், கழிவு நீர் வடிய வசதிகள், நல்ல குடிதண்ணீரும் தொழிலுக்குத் தேவையான நீரும் கொடுக்கும் ஏற்பாடுகள், மின்சார வசதிகள், தபால் ஆபீஸ், தொழிலாளர்களுக்கான குடியிருப்புக்கள் போன்ற பல வசதிகளையும் அரசினர் செய்து தருகிறார்கள். நவீன பாணியில் கட்டப்பட்டுள்ள தொழிலகங்களைக் குறைந்த வாடகைக்குச் சிறு தொழிலதிபர்களுக்குத் தருகிறார்கள்.

சிறு தொழிலதிபர்களையும் வியாபாரிகளையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தவும், தொழில் துறையில் நாம் எந்தமட்டில் தன்னிறைவு பெற்றிருக்கிறோம் என்பதைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கவும் இம்மாதிரியான கண்காட்சிகளை அவ்வப்போது விரிவான முறையில் நடத்த வேண்டியது அவசியம்தான் என்பதை ''அபட்ஸ்பரி''யில் நடந்த தமிழ்நாடு சிறு தொழிற்பட்டறை கண்காட்சி உறுதிப்படுத்தியது.




தன்னிகரில்லாச் சிறப்பு! கண்ணைப் பறிக்கும் வெளுப்பு! துப்புரவான தூய்மை! எல்லாம் ஸர்ப் செயல், எல்லைமீறிய வல்லமை, கரைகடந்த நுரைவளம். சலவையே வெகு எளிது. ஆம், சிறுவர் உடை முதல், சட்டை, சேலைவரை எல்லாத் துணிகளையும் கைப்பட வீட்டிலேயே சலவை செய்துகொள்ளச் சாலச் சிறந்தது ஸர்ப்!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

SU. 45-140 TM



வேலை நிறுத்தம்

தோட்டக்கார விசுவநாதன்



[கந்தசாமி குளித்துவிட்டு உணவருந்த உட்காருகிறார் சமையல் அறையில். அவர் மனைவியைக் காணோம்.]

கந்த: கமலா!... கமலா!...

[மனைவி வருவதற்காகச் சிறிது நேரம் காத்திருந்து பார்க்கிறார். மனைவி வருவதாகக் காணோம். அதனால் குரலை இன்னும் உயர்த்தி, 'கமலா' 'கமலா' என்று கத்துகிறார். அவர் மகன் சுந்தரம் வருகிறான்.]

சுந்தரம்: ஏம்பா இப்படிக் கத்துகிறீர்கள்? அம்மா இப்போது வர மாட்டாள். ரொம்ப 'பிஸி'யாக இருக்கிறாள்.

கந்த: அவள் எப்போதுதான் 'பிஸி'யாக இல்லை? என்றைக்கு எனக்கு ஒழுங்காக ஆபீஸ் நேரத்துக்குள் சாப்பாடு போட்டிருக்கிறாள்? (கோபமாக) கமலா! கமலா!...

[அவர் மனைவி கமலா சாந்தமாக வருகிறாள்.]

கமலா: எதற்கு' இப்படி வீடு இடிந்து விழுவது போல் கத்துகிறீர்கள்? இப்பொழுது என்ன குடி முழுகிப் போய்விட்டதாம்?

கந்த: தினமும் ஆபீசுக்கு 'லேட்'டாகப் போனால் குடி முழுகித்தான் போய்விடும்.

கமலா: நீங்கள் நேரத்தோடு ஆபீசுக்குப் போவதை யார் தடுத்தார்கள்? போவது தானே?

கந்த: போவதா? நீ சாப்பாடு போட்டால் தானே போக முடியும்?

கமலா: இன்னிக்கு வீட்டில் சமையல் கிடையாது.

கந்த: ஐயோ! ஏன்? நேற்றுத்தானே ரேஷன் வாங்கிப் போட்டேன்?

கமலா: யார் இல்லை என்றார்கள்?

கந்த: பின்னே?

சுந்தரம்: பின்னே என்னப்பா. சமையல் இல்லை. எல்லோரும் ஹோட்டலில்தான் சாப்பிட வேண்டும்.

கந்த: நீ சும்மா இருடா. ஏன் கமலா சமையல் செய்யவில்லை?

கமலா: நேற்று எங்க 'லேடீஸ் கிளப்'லே ஒரு தீர்மானம் கொண்டு வந்தோம். கிளப் அங்கத்தினர்கள் யார் வீட்டிலும் இன்று சமையல் இல்லை.

கந்த: உன் கிளப்புக்கும் என் சாப்பாட்டுக்கும் என்ன சம்பந்தம்?

கமலா: ஏன் இல்லாமல்? நீங்க ஆபீஸிலே ஆறு நாள் வேலை செய்தால் ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் லீவு கொடுக்கிறார்கள் அல்லவா? ஆனால் வீட்டில் அப்படிப்பட்ட லீவு ஏதாவது உண்டா? வருஷம் 365 நாளும் மாடு போல் உழைக்க வேண்டுமா?

கந்த: இதுவும் நல்லாத்தான் இருக்குது. இந்த ரேட்டிலே 'காஷுவல் லீவு, சிக் லீவு, பிரிவிலெஜ் லீவு'ன்னுகூட ஆரம்பித்துவிடுவாய் போலிருக்கிறதே.

சுந்தரம்: கட்டாயம் ஆரம்பிக்கத்தான் போறாங்க.

கந்த: அடேய் முந்திரிக் கொட்டை! மூடுடா வாயை. கமலா, இதெல்லாம் என்ன விளையாட்டு?

கமலா: விளையாட்டா! நிஜமாகத்தான் சொல்றேன். திங்கட்கிழமைதோறும் மனைவிகளுக்கு விடுமுறை. அதையொட்டி இன்றைக்கு வேலை நிறுத்தம்.

கந்த: இப்படித் திடீர்னு நோட்டீஸ் தராமல் ஸ்ட்ரைக் செய்தால் எப்படி கமலா?

சுந்தரம்: நாட்டிலே வேலை நிறுத்தம் செய்கிறவர்கள் எல்லாம் நோட்டீஸ் தருகிறார்களா

அப்பா? அப்படி நோட்டீஸ் கொடுத்தால் வேலைநிறுத்தத்தின் வேகம் குறைந்துவிடாதா? எதிர்பாராதபோது வேலைநிறுத்தம் செய்தால்தான் ஒரு திடீர் அதிர்ச்சி ஏற்படும், இப்போ உங்களுக்குச் சாப்பாடு இல்லாத அதிர்ச்சி போல.

கந்த: உன்னை விளக்கம் கேட்டார்களா? அது சரி, நீ ஏன்டா பள்ளிக்கூடம் போகவில்லை?

கமலா: அதைக் கேளுங்கள். நான் கிளப் வரை போய் வருகிறேன். ஹோட்டலிலிருந்து சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துவிடுங்கள். (போகிறாள்).

கந்த: திங்கட்கிழமை ஒருவேளை பட்டினி கிடக்கச் சொல்லி அரசாங்கம் சொல்லுது. அவுங்க தீர்மானத்தையொட்டி ரெண்டு வேளையும் பட்டினி கிடந்தாப் போச்சு. அது கிடக்கட்டும். நீ ஏன்டா பள்ளிக்கூடம் போகவில்லை என்றால்?

சுந்தரம்: நாங்களெல்லாரும் ஸ்ட்ரைக் பண்ணிட்டோம்ப்பா.

கந்த: ஸ்ட்ரைக்கா! ஏன்டா?

சுந்தரம்: இந்த வாத்தியாருங்க ரொம்ப அக்கிரமம் செய்யிறாங்களப்பா.

கந்த: என்னடா செய்கிறார்கள் அப்படி?

சுந்தரம்: நன்றாகப் படிக்கிற பிள்ளைகளுக்கு நிறைய மார்க்குப் போடுகிறார்கள். மந்த புத்திப் பையன்களுக்கு மார்க்கே போடுவதில்லையப்பா!

கந்த: இதுவும் நன்றாகத்தான் இருக்கிறதடா. படிக்காவிட்டால் எப்படிடா மார்க் போட முடியும்?

சுந்தரம்: நீங்களும் என்னப்பா அந்த வாத்தியார் போலப் பேசுகிறீர்கள்? 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது பழமொழியல்லவா? நாங்க கட்டும் பள்ளிக்கூடச் சம்பளத்திலிருந்துதானே அவர்களுக்குச் சம்பளம் தருகிறார்கள். அந்த நன்றி வேண்டாமா? நாங்கள் என்ன 'முதல் மார்க்கா' கேட்டோம். கேவலம் 'பாஸ் மார்க்'தானே கேட்கிறோம். அதுகூட முடியாதென்றால் நியாயமா? அதற்காக மந்த புத்திப் பையன்கள் எல்லாம் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்துவிட்டோம்.

கந்த: நிம்மதியாகப் போயிற்று. புத்திசாலிப் பையன்களை வைத்துக் கொண்டு பாடம் சொல்லிக் கொடுத்தால் எல்லோரும் பாஸ் செய்வார்கள். பள்ளிக்கூடத்துக்கும் நல்ல பெயர்.

சுந்தரம்: அப்படி விட்டுவிடுவோமா? நாங்கள் வேலை நிறுத்தம் செய்யும்போது மற்றப் பையன்களைப் பள்ளிக்கூடத்தில் நுழைய விடுவோமா? அவர்கள் காலை முறித்து விட மாட்டோமா?

கந்த: அப்படிச் செய்தால் உங்களைப் பிடித்து ஜெயிலில் தள்ளிவிட மாட்டார்களாடா முட்டாப் பயலே!

சுந்தரம்: மாணவர்கள் யூனியன் எதற்கு இருக்கிறது என்று நினைக்கிறீர்கள் அப்பா? அப்படி ஏதாவது அக்கிரமம் செய்தால் பள்ளிக்கூடத்தில் மேஜை நாற்காலி என்று ஏதாவது இருக்கும் என்று நினைக்கிறீர்களா? தெருவில் ஒரு பஸ் போகும் என்று கனவு காண்கிறீர்களா? எல்லாவற்றையும் கொளுத்திவிடமாட்டோமா? எங்க ஸ்டூடென்ஸ் யூனியன் ரொம்ப ஸ்ட்ராங்கப்பா. இதை ஒரு அரசியல் விவகாரம் ஆக்கும்வரை நாங்கள் விடமாட்டோம்.

கந்த: நாசமாய்ப் போயிற்று! (அவர் மகள் ஜானகி வருகிறாள்) என்னம்மா ஜானகி நீ ஏன் ஆபீசுக்குப் போகவில்லை?

ஜானகி: நாங்களெல்லாம் ஸ்ட்ரைக் பண்ணிட்டோம்பா.

கந்த: அம்மா ஸ்ட்ரைக், பிள்ளை ஸ்ட்ரைக், பொண்ணும் ஸ்ட்ரைக்கா? ஏனம்மா ஸ்ட்ரைக் பண்ணினே?

ஜானகி: பின்னே என்னப்பா. எங்க ஆபீஸ் மானேஜர் ரொம்பப் பொல்லாதவரா இருக்காரப்பா.

கந்த: அவர் என்னம்மா செய்தார் அப்படி?

ஜானகி: எங்க 'கோட்டாப்'படி தினத்துக்கு நாற்பது கடிதங்கள் டைப் செய்யணும். போனால் போகிறதென்று நாற்பத்திரண்டு கடிதாககள் டைப் அடித்து விட்டு நாவல் படித்துக் கொண்டிருந்தேன், அப்பா! அது கூடாதாம். ஐந்து மணிவரையில் டைப் அடித்துக் கொண்டே யிருக்க வேண்டுமாம். எப்படி?

கந்த: ஏம்மா, சம்பளம் ஒழுங்காக வாங்குகிறாயோ இல்லையோ? அப்போ தினத்துக்கு எட்டு மணி நேரம் வேலை செய்துதானே ஆகணும்?

ஜானகி: என்னப்பா நீங்களும் அந்த மானேஜரைப் போலவே பேசுகிறீர்கள்? முதலில் தினமும் எட்டு மணி நேரம் வேலை செய்து இருபது கடிதங்கள் டைப் செய்து வந்தோம். மானேஜர் ஒரு நாள் எங்களையெல்லாம் கோபித்துக் கொண்டு நாற்பது கடிதங்களாவது டைப்படித்தாக வேண்டும் என்றார். சரி என்று ஐந்து மணி நேரத்தில் நாற்பது கடிதங்கள் டைப் அடித்துவிட்டு மீதி நேரத்தில் நாவல் படித்தால் அது தவறாம். அதனால் 'நாங்கள் எல்லாம் சேர்ந்து எட்டு மணி நேரம் வேலை செய்து இருபது கடிதங்கள் வேண்டுமா, அல்லது தினத்துக்கு நாற்பது கடிதங்கள் தேவையா?' என்று கேட்டு வேலைநிறுத்தம் பண்ணிவிட்டோம்.

கந்த: இதுவும் நல்ல ஒழுங்கம்மா.

[''சார், தபால்!'' என்றபடி தபால்காரர் வந்து ஒரு கடிதத்தைக் கந்தசாமியிடம் தந்து செல்கிறார். அதைப் படித்த கந்தசாமி ''அட கடவுளே'' என்று சொல்லித் தலைமீது கை வைத்து அமர்ந்துவிடுகிறார். சுந்தரம் கடிதத்தை வாங்கிப் படிக்கிறான்.]

ஜானகி: சுந்தரம்! யார் எழுதியிருக்கிறார்கள்?

சுந்தரம்: அப்பா ஆபீஸிலேயும் வேலை நிறுத்தமாம்!

ஜானகி: ஐயையோ! அப்பா மூர்ச்சித்து விழுந்துவிட்டாரே. டாக்டரைக் கூப்பிடு... டாக்டரைக் கூப்பிடு.

(திரை)


அத்தியாயம் 21

அப்போதைக்கு வேலையிலிருந்துவிடுதலை பெற்றுச் செல்ல வேண்டுமென்ற பிடிவாதத்தை மங்கா நிறைவேற்றிக் கொண்டாளே தவிர அதன் பிறகு நேரத்தை எப்படிச் செலவிடுவது என்று அவளுக்குப் புரியவில்லை. 'இவ்வளவு சீக்கிரம் வீட்டுக்குப் போய்த்தான் என்ன செய்ய? தவிரவும், ஆத்தாளின் கேள்விக்கு யார் பதில் சொல்லிக் கொண்டிருப்பது? லீவு எடுத்துக்கிட்டு வந்தேன் என்று சொன்னால் குடிமுழுகிப்போய்விட்ட மாதிரிக் கூச்சல் போட ஆரம்பிப்பாளே ஆத்தாள்!'

முதல் பரிசு நாவல்

சிமெண்ட் நெடியுடன் கூடிய புழுதியும் தூசியும் திடீரென்று அவள் மனத்தில் தாங்க முடியாத எரிச்சலைக் கிளப்பி விட்டன. அவற்றிலிருந்து விலகி நெடுந்தூரம் செல்ல வேண்டுமென்ற துடிப்புடன் வெகு வேகமாக அவள் நடந்தாள்.

கருளியாற்றுப் படுகையை ஒட்டினாற்போல் இருந்த சமதரைப் பகுதி ஒன்றில் பவர் ஹவுஸும் அமைந்திருந்தது. பென்ஸ்டாக் குழாய்களில் பாய்ந்து வந்த தண்ணீர் பவர்ஹவுஸிலுள்ள மின் இயந்திரங்களை இயக்குவதற்குப் பயன்பட்ட பிறகு கருளியாற்றுப் படுகையில் போய்க் கலந்திருந்தது. அதன்




முள்ளும் மலரும்

உமாசந்திரன்

ஒரு வாரமாகத் தானாக விதித்துக் கொண்ட கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இயங்கி வந்த அவள் உள்ளம் திடீரென்று விட்டு விடுதலையாகி விண்ணுயரப் பறப்பது போன்ற உணர்வைப் பெற்றது. ஆத்தாளுக்கு உடம்பு சரியாயிருந்த நாட்களில் அவள் மனத்தில் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்த பொறுப்பற்ற பூரிப்பு மீண்டும் திரும்பி விட்டது போல் அவளுக்குத் தோன்றியது. ஒரு வாரமாக அவளுக்குப் பழக்கப்பட்டுப் போயிருந்த பல்வேறு யந்திரங்களின் ஒலிகளும், தொழிலாளர் கும்பலின் கூச்சலும்

பிறகு கருளியாறு சிறையிலிருந்து விடுபட்ட கைதியைப் போன்ற களிப்புடன் பாறைகளினூடே துள்ளிக் குதித்துச் சென்று கொண்டிருந்தது.

ஆற்றுத் தண்ணீரின் அந்தத் துள்ளலை ரசித்தவாறு கரையோரமாக நடந்து சென்றாள் மங்கா. ஆனால் ஆற்



றின் இந்தத் துள்ளல் கொஞ்ச தூரத்துக்குத்தான் இருந்தது. அதன் பிறகு அந்த ஆறு அடக்கம் நிறைந்த அமைதியுடன் நிதானமாகச் செல்ல ஆரம்பித்திருந்தது. கரையிலும் நிழல் தரும் மரங்கள் நெருங்கித் தோன்ற ஆரம்பித்திருந்தன.

ஓரிடத்தில் கரை சற்று மேடாக உயர்ந்து அப்பால் தணிந்து சென்றிருந்தது. அந்த மேட்டின் உச்சியை அடைந்த மங்கா அதற்கு அப்பால் தெரிந்த கண்கொள்ளாக் காட்சியைக் கண்டதும் அப்படியே சொக்கிப் போய் நின்று விட்டாள்.

கிண்ணம் போன்று அமைந்திருந்த பள்ளத்தாக்கு அது. அடுக்கடுக்காகத் தேவதாரு மரங்கள் அந்தக் கிண்ணத்தின் விளிம்பிலிருந்த ஒரு சிறிய ஏரியின்



விளிம்பு வரை ஒரே ஒழுங்காக வளர்ந்திருந்தன. ஏரியிலிருந்து பிரிந்துசென்ற ஒரு சிற்றோடை கிண்ணத்தின் வலப்புறத்திலிருந்து ஒரு சிறிய பிளவு வழியாகச் சுருளியாற்றில் சென்று கலந்து கொண்டிருந்தது. ஏரியின் கரை நெடுகிலும் வண்ண வண்ண மலர்களைத் தாங்கிய வகை வகையான செடி கொடிகள். ஏரியின் நீரிலும் அங்கங்கே பச்சையும் நீலமும் சிவப்புமாக வாரிச் சிதறியது போல் பூத்துப் படர்ந்திருந்த நீர்ப்பூண்டுகள். அவற்றின் இடையிடையே வெள்ளை வெளேரென்று ஒயிலாக நின்றிருந்தன நாரைக் கூட்டங்கள்.

இவ்வளவு அழகு இங்கே கொட்டிக் கிடப்பது யாருக்குமே தெரியாதா? மனிதச் சுவடே படாத மாதிரியல்லவா காட்சியளிக்கிறது இந்த இடம்? பவர் ஹவுஸ் பகுதியில் வேலை செய்பவர்களுக்கு அந்தச் சந்தடிகளையும் தும்பு தூசிகளையும் விட்டு விட்டு இம்மாதிரி ஓரிடத்துக்கு வரவேண்டும் என்றே தோன்றவில்லை போலிருக்கிறது. ஆனால் 'வேலை வேலை' யென்று எப்போதும் மாய்ந்து கொண்டிருப்பவர்களுக்கு இங்கெல்லாம் வருவதற்குப் பொழுது ஏது?

அநத ஏரியில் அமிழ்ந்து குளிக்க வேண்டும் போலிருந்தது மங்காவுக்கு. ஆசை தீரக் குளித்து விட்டுத் துணிகளையெல்லாம் அழுக்குப் போகக் கசக்கி அலசி உலர்த்திக் கொண்டு அந்த ஏரியைச் சுற்றியவாறு மாலை நேரம் வரை பொழுதைப் போக்கிவிட வேண்டும் என்று அவள் நினைத்தாள்.

பள்ளத்தாக்கின் சரிவில் இறங்கி ஏரிக் கரையை அவள் நெருங்கியதுமே கரையோரமாக நின்றிருந்த நாலைந்து நாரைகள் விசுக்கென்று அங்கிருந்து பறந்து சிறிது தூரம் எட்டிப் போய் நின்று கொண்டன.

மங்கா சிரித்தாள். ''ஏன் அப்படிப் பயந்து ஓடறீங்க? உங்களைக் கடிச்சா தின்னு போடுவேன்? வெள்ளை வெளேர்னு இவ்வளவு அழகாயிருக்கீங்களே. உங்களைக் கழுத்தோட சேர்த்து அணைச்சுக்கிட்டுக் கொஞ்சணும் போல ஆசையா யிருக்கு. ஆனா நீங்க எங்கிட்டே எங்கே வரப் போறீங்க?'' என்று அவற்றைப் பார்த்துக் கூறிக் கொண்டே தண்ணீரில் இறங்கினாள். ஜில்லென்று குளிர்ந்திருந்த அந்த மலைத் தண்ணீர் பகல் முழுதும் உழைத்துக் களைத்துப் போயிருந்த அவளது உடம்புக்கு இதமா யிருந்தது. அந்தத் தண்ணீரை விட்டு வெளியே வர மனமில்லாமல் அதிலேயே அமிழ்ந்து நீந்தவாறு கரையை யொட்டினாற் போலேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தாள்.

நாரைகள் பயத்தை மறந்து அவளது கைக்கு எட்டினாற்போலவே வந்து நிற்க ஆரம்பித்தன. அவற்றின் கழுத்தைப் பிடித்து விடுவது போல் மங்கா கையை நீட்டியதும் அவை பயந்து அலறிக் கொண்டு ஓடின. சிரித்துக் கொண்டே அவற்றின் மீது தண்ணீரை வாரி அடித்தாள் மங்கா.

நெடுநேரம் இவ்வாறு விளையாடிய பிறகு மங்கா தண்ணீரை விட்டுக் கரைக்கு வந்து கரையில் காயப் போட்டிருந்த துணிகளை எடுத்து உடுத்திக் கொண்டாள். குளிக்கும்போது மேலே சுற்றிக் கொண்டிருந்த சும்மாட்டுத் துணியை நன்றாக அலசிக் கரையில் காயப் போட்டு விட்டு அருகேயே ஒரு புல் மேட்டில் உட்கார்ந்து கொண்ட நேரத்தில்—

''மங்கா...''

காளியண்ணன் அவளெதிரே நின்று கொண்டிருந்தான்.

''இங்கே வந்து குளிக்கறதுக்காகத்தான் வேலைக்கு லீவு போட்டயா?''

''லீவு போட்டது குளிக்கறதுக்காக இல்லே. உனக்கு டிமிக்கி குடுக்கறதுக்காக.''

''என்ன பிரயோசனம்? டிமிக்கி குடுக்க முடிஞ்சுதா உன்னாலே?'' என்று சிரித்தான் காளி.

''இந்த எடத்துக்கு நான் வந்திருக்கேன்னு உனக்கு எப்படித் தெரிஞ்சுது தய்யா?''

''நீ லீவு எடுத்தாலும் வீட்டுக்குப் போகாமே இங்கேயேதான் சுத்திக்கிட்டிருப்பேன்னு எனக்கு நல்லாத் தெரியும். உன்னைத்தான் நான் அளந்து வச்சிருக்கேனே. உன் மனசு இப்படித்தான் வேலை செய்யும்னு எனக்கா தெரியாது?''

''என்னமோ என் மனசுக்குள்ளே புகுந்து பார்த்த மாதிரி பேசிக்கிட்றயே? உன்னைப் பத்தி நான் என்ன நெனைக்கறேன்னு சொல்லு, பார்க்கலாம்'' என்றாள் மங்கா சிரித்துக் கொண்டே.

''நான் சொல்லணுமா என்ன? நீயே எத்தனையோ தரம் நேருக்கு நேர் சொல்லியிருக்கியே. மனசிலே ஒண்ணு, வாயிலே ஒண்ணுங்கற பேச்சே உன்கிட்டே கிடையாதே.''

''தெரிஞ்சிருக்கில்லே? பின்னே ஏனய்யா என்னையே தொரத்தித் தொரத்தி வந்துக்கிட்டிருக்கே?''

''நான் ஒண்ணும் உன்னைத் தொரத்திக்கிட்டு இங்கே வரல்லே. எனக்குக்

லாபோனி ஸ்னோ

முகத்தில் பனியின் மென்மை மிளிரச்செய்கிறது

லாபோனி ஸ்னோ உங்கள் முக அலங்காரத்தைப் புத்துணர்வுடன் துவங்கவைக்கிறது. அழகூட்ட ஆரம்பிக்குமுன் இதில் சொற்ப அளவைப் பூசுங்கள், போதும்; உங்கள் ஒப்பனை எவ்வளவு சுலபமாகப் பொலிகிறது என்பதை கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவது நிச்சயம். லாபோனி ஸ்னோ ஈரப்பசையையும் அளிக்கக்கூடியது என்பதை மறந்துவிடாதீர்கள் !



இது கல்கத்தா கெமிகல் தயாரிப்பு

CTC-4 TAM

குளிக்கணும் போல இருந்திச்சு. அதுக்காகத்தான் வந்தேன்.''

''அப்படின்னு ஏன் நிக்கறே? குளி! போயேன்.''

''இப்பக் குளிக்கணும் போலே இல்லே.''

''என்ன புதிர் போடறே?''

''உன்னைப்பார்த்ததும் மனசு குளுந்து போச்சு. ஒடம்பிலே இருந்த எரிச்சலும் தீர்ந்து போச்சு. தண்ணீரில் எறங்கினு குளிர் நடுக்கி எடுத்திடும்.''

''வேடிக்கைதான்.''

''என்ன?''

''என்னைப் பாத்தா உன் மனசு குளுந்து போகுதா? ஆனு உன்னைப் பாத்தா எனக்கு எப்படி யிருக்கு தெரியுமில்லே?''

''எப்படி இருக்கு?''

''பத்திக்குது.''

''பத்த வைக்கத்தானே திரும்பத் திரும்ப உன்னைத் தொரத்திக்கிட்டு வந்துக்கிட்டிருக்கேன்.''

மங்கா சிரித்தாள். ''உன் வாயாலேயே உண்மை வெளிவந்திடுச்சே இப்போ. என்னைத் தொரத்திக்கிட்டுத்தானே நீ இங்கே வந்திருக்கே?''

''இதிலே ஒளிவு மறைவு என்ன புள்ளே? உன்னை எனக்குப் புடிச்சிருக்கு. எப்பவும் உன்னைப் பாத்துக்கிட்டிருக்கணும் போலே இருக்கு. அதுக்காகத்தான் உன்னை வேலை செய்ய விடாமே எங்க வீட்டுக்கே அழைச்சுக்கிட்டுப் போயிடணும்னு ஆசைப் படறேன். அதுக்காகத்தான் உன்னைத் தொரத்தித் தொரத்தி வந்துக்கிட்டிருக்கேன். போதுமா?''

ஒரு கேலிப் புன்னகையுடன் புல்தரையில் நிமிர்ந்து சாய்ந்தாள் மங்கா. காளியண்ணன் அப்படியே நின்றான். சில நிமிஷங்களுக்கு இருவரும் ஒன்றுமே பேசவில்லை. அந்த ஏரியின் எதிர்க் கரைக்கு அப்பால், பள்ளத்தாக்கின் விளிம்புக்கு அப்பால், நீலமலைகளுக்கு அப்பால், நீல வானத்துக்கும் அப்பால் எதையோ பார்ப்பவை போலிருந்தன மங்காவின் விழிகள். சட்டென்று அவள் மௌனத்தைக் கலைத்தாள்.

''உன்னை எனக்குப் புடிச்சிருக்கய்யா!''

''சரி, நம்பறேன்'' என்றான் காளி ஒரு வறண்ட சிரிப்புடன்.

''விளையாட்டுக்குச் சொல்லலேய்யா. மெய்யாத்தான்'' என்றாள் மங்கா அவனை நேருக்கு நேர் பார்த்தவாறு.

காளியண்ணனின் சிவந்த விழிகளில் ஆவல் குமிழியிட்டது. ''என் சத்தியமா சொல்லுவையா மங்கா?'' என்று கேட்டுக் கொண்டே அவளருகே மண்டியிட்டமர்ந்தான்.

''ஆமாய்யா.... உன் சத்தியமாச் சொல்லறேன். உன்னை எனக்குப் புடிச்சிருக்கு. ஏன் புடிச்சிருக்குன்னு என்னைக் கேக்காதே. நீ மொரட்டு ஆளு. ஒத்தக் கை மொடமான ஆளு. மிச்சமிருக்கிற ஒத்தக் கையை நீட்டி என்னை அடிக்கறதுக்கும் தயங்காத ஆளு. இவ்வளவெல்லாம் இருந்தும் உன்னை எனக்குப் புடிச்சிருக்கு. அவ்வளவுதான் நான் சொல்லுவேன்.'' இப்படிக் கூறிய மங்கா சட்டென்று எழுந்திருந்தாள்.

கரையில் காயப் போட்டிருந்த சும்மாட்டுத் துணி உலர்ந்திருக்கிறதா என்று அதை எடுத்துக் கன்னத்தில் வைத்துப் பார்த்து விட்டு அதைச் சுருட்டிச் சாப்பாட்டுப் பாத்திரத்துக்குள் திணித்துக் கொண்டாள்.

''புறப்பட்டுட்டயா மங்கா?''

''பின்னே, சங்கு ஊதறதுக்குள்ளே டிராலியை வரவழைச்சு அதிலே ஏறிக்கிட்டுப் போயிடவேண்டாம்! இல்லாட்டி கும்பல் சேர்ந்து போகுமே. அதிலே கிடந்து யாரு அவதிப்படறது?'' என்று கூறிக் கொண்டே அங்கிருந்து நடக்க ஆரம்பித்தாள் மங்கா.

துடிக்கும் நெஞ்சுடன் அவளைத் தொடர்ந்து நடந்தான் காளி.

ஃ ஃ ஃ

கனகாவுக்குக் கோபம் கோபமாக வந்தது. தினமும் காலை பத்து மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை தன்னந்தனியாக அந்த அணைக்கரை வீட்டில் மொட்டு மொட்டென்று உட்கார்ந்திருப்பதென்றால் அவளுக்குக் கோபம் வராமல் என்ன செய்யும்? மண வாழ்க்கையின் ஆரம்ப நாட்களைக் கலகலப்பேயில்லாத இப்படியொரு காட்டுப் பிரதேசத்தில் கழிக்கவேண்டி யிருக்குமென்று அவள் கனவிலாவது நினைத்துப் பார்த்திருப்பாளா ?

தனிமை காரணமாகக் கனகாவுக்கு அலுப்புத் தட்டக் கூடாதென்பதற்காகவே வீரமணி கையோடு ரேடியோப் பெட்டியை அனுப்பி வைத்திருந்தான். தேவையான நேரங்களில் தானாகவே இசைத்தட்டுக்களை மாற்றி மாற்றி வைத்துக் கொண்டு இயங்கக் கூடிய கிராமபோன் அமைப்பும்கொண்ட ரேடியோப் பெட்டி அது. கனகாவின் சமையல் திறமையை அநுபவிக்கும் தண்டனை சபேசனுக்கும் குமரனுக்கும் இருக்கக் கூடாதென்ற கருணை


பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்யத்திற்கும் பலத்திற்கும்

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ்-17.

கால்கேட் மென்தாலேடெட் ஷேவிங் க்ரீம்



இதுவரை
நீங்கள்
அனுபவித்திராத
அளவு
குளுமையான
க்ஷவரத்தை
அளிக்கிறது!



கால்கேட் ஷேவிங் க்ரீம் உங்கள் சருமத்தைப் புல்லரிக்கச் செய்யும் புதுமையைக் கொடுக்கும், குளுமையான மென்தால் அடங்கியது! கால்கேட் மென்தாலேடெட் ஷேவிங் க்ரீம் உங்கள் சருமத்தை மழமழப்பான, சுகமான க்ஷவரத்திற்குத் தகுந்த நிலையில் சமனப்படுத்தும்போது, அதன் பொங்கி வரும் நுரையும், அடுத்துள்ள குளுமையும் எவ்வளவு பரவசமூட்டும் வகையில் தனிப்பட்டவை என்பதை நீங்கள் உணருவீர்கள். ஒவ்வொரு காலையும் குளுமையுடன் தொடங்குவீர்! ஒவ்வொரு தினத்தையும் மிடுக்குடன் தொடங்குவீர்!

உண்மையிலேயே குளுமையான க்ஷவரத்திற்கு ஒரு ட்யூப் கால்கேட் மென்தாலேடெட் ஷேவிங் க்ரீம் இன்றே வாங்குங்கள்!

CHS. G.3.TAM

உணர்ச்சியுடன் சமையற்கார ஆளையும் அந்தப் புது மணத் தம்பதிகள் சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்ற மறு நாளே விஜயபுரத்துக்கு ரயிலேற்றி அனுப்பி அங்கிருந்து அடுத்த பஸ்ஸிலேயே உச்சிக்கடவுக்குப் பயணமாகும்படி பணித்திருந்தான் வீரமணி.

கனகாவுக்கு எந்த விதத்திலும் மனக் குறை இருக்கக் காரணமில்லை. எல்லா வசதிகளும் அந்த வீட்டில் நிரம்பியிருந்தன. கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்க அந்தத் தவசிப் பிள்ளையும், போலாவும் எந்த நிமிஷமும் காத்திருந்தார்கள். பொழுது போக்குக்கு ரேடியோகிராம் இருந்தது. பத்திரிகைகள் இருந்தன. வெளியிலோ மணிக்கணக்காகப் பார்த்துக் கொண்டிருந்தாலும் அலுக்காத எழில் வளம், எங்கு திரும்பினாலும் கொட்டிக் கிடந்தது. இவ்வளவெல்லாம் இருந்தும் கனகாவுக்குச் சபேசனும் குமரனும் காலை பத்து மணிக்குப் புறப்பட்டுப் போனதிலிருந்து மாலை ஆறு மணிக்கு அவர்கள் திரும்பி வரும் வரையில் அந்த எட்டு மணி நேரத்தைத் தள்ளுவது பெரும் பாடாயிருந்தது.

ரேடியோகிராம் மாற்றி மாற்றி இசைத் தட்டுக்களை இசைத்துக்கொண்டிருக்க, கட்டிலில் ஒய்யாரமாக ஒருக்களித்துச் சாய்ந்த நிலையில் கதைப் பத்திரிகையொன்றைப் படித்துக்கொண்டிருந்த கனகா, கதையை முடிக்கக் கூடப் பொறுமையில்லாமல் சலிப்புடன் பத்திரிகையை மூடி ஒரு மூலையிலிருந்த மேஜை மீது வீசியெறிந்தாள். நீண்டதொரு கொட்டாவியுடன் சோம்பல் முறித்துக் கொண்டே ஹாலிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். மணி இன்னும் நான்குகூட அடித்தபாடில்லை.

''சேச்சே, பொழுது ஏன்தான் இப்படி ஆமை வேகத்தில் நகர்கிறதோ, தெரியவில்லை'' என்று முணுமுணுத்துக் கொண்டே வெளிவராந்தாவுக்கு வந்தாள்.

வெளியே தோட்டத்துப் புல்தரையில் வெயில் நன்கு உறைக்கக்கூடிய இடமாகப் பார்த்து உட்கார்ந்திருந்த போலா, ஹுக்காவைப் புகைத்தவாறு தவசிப்பிள்ளையுடன் ஏதோ கதை பேசிக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்ததும் கனகாவின் எரிச்சல் இன்னும் அதிகமாகியது.

''போலாவுக்குக்கூடப் பேசத் துணைக்கு ஆள் இருக்கிறான். நான்தான் இப்படித் தனியாக உட்கார்ந்து மணிக்கணக்காகப் பொழுதைப் போக்க வேண்டியிருக்கிறது'' என்று மனதுக்குள் சிடுசிடுத்தவாறு மீண்டும் உள்ளே சென்று கட்டிலில் தொப்பென்று சாய்ந்தாள். சட்டென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. 'அவர்கள் திரும்பி வரும் வரை இங்கேயே அடைந்து கிடப்பானேன்....? போலாவைத் துணைக்கு அழைத்துக் கொண்டு உச்சிக்கடவுக்கே சென்று விட்டால் என்ன?'

''போலா.... போலா!''

ஹுக்காவின் இன்பத்தில் தன்னை மறந்து தவசிப்பிள்ளையுடன் பேசிக் கொண்டிருந்த போலா, எஜமானியின் அழைப்பு காதில் விழுந்ததும் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு வேகமாக எழுந்தான்.

''என்னம்மா?'' என்று கேட்டுக் கொண்டே அவன் கூனல் முதுகைக் குலுக்கியவாறு வராந்தா வாயிலுக்கு வருவதற்கும், கனகா வெளியே வருவதற்கும் சரியாயிருந்தது.

''அம்மா, எங்கேயாவது புறப்படறீங்களா?'' என்று கேட்டான் போலா.

''நீயும் என்னோடு வா, உச்சிக்கடவுக்குப் போகணும்'' என்று கூறியவாறே தோட்டத்தில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள் கனகா.

''முத்தையா, நாங்க திரும்பி வர வரையிலே வீட்டைப் பார்த்துக் கொண்டு இங்கேயே இருங்கய்யா'' என்று தவசிப்பிள்ளைக்கு உத்தரவிட்டு விட்டுக் கனகா வேகமாக வெளியே நடக்கத் தொடங்கியதும் போலா அவசர அவசரமாக ஹுக்காத் தணலைக் கொட்டிக் குழாயைக் காலி செய்து பையில் சுற்றியெடுத்துக் கொண்டு அவளைத்தொடர்ந்து ஓடினான். போகிற இடத்தில் எவ்வளவு நேரமாகுமோ?.. கையோடு ஹுக்காவும் அதற்கு வேண்டிய பொருள்களும் இல்லாவிட்டால் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விடுமே!

பணம்

பணம் அடி மட்டம் அறிய முடியாத ஆழ்கடல். அதில் கௌரவம், மனச்சாட்சி, உண்மை ஆகியவை யெல்லாம் மூழ்கிவிடக் கூடும். - கோல்லே

●

பணம் நல்ல பணியாளன். ஆனால் மோசமான எஜமானன். -டி.பௌஹர்ஸ்

●

உன் நம்பிக்கையைப் பணத்தின்மீது வைக்காதே. பணத்தை நம்பிக்கையான இடத்தில் வை. - நேராம்ஸ்

அனுப்பியவர்: அ. பாண்டியராசன்

சாதாரணமாகக் காலையில் குமரனும் சபேசனும் ஒன்றாகத்தான் காரில் உச்சிக்கடவுக்குப் புறப்பட்டுச் செல்வது வழக்கமாயிருந்தது. சபேசனின் வேலை பவர்ஹவுஸ் பகுதியில் இருந்ததால் குமரனை முதலில் உச்சிக்கடவுக் காரியாலயத்தில் கொண்டு விட்டுப் பிறகு உடும்புக் கொட்டகைக்கு வந்து காரை அங்கே நிறுத்திவிட்டு டிராலியில் பவர்ஹவுஸ் பகுதிக்குச் சென்று கொண்டிருந்தான். சில நாட்களில் வழக்கமான நேரத்துக்கும் சற்று முன்னதாகவே காரியாலயத்துக்குச் செல்லும்படியாயிருக்கும் குமரனுக்கு. அம்மாதிரி நாட்களில் அவன் தனது மோட்டார் சைக்கிளிலேயே புறப்பட்டுச் சென்று விடுவான். திரும்பி வரும்போது அவன் மோட்டார் சைக்கிளிலும், சபேசன் காரிலுமாக ஒன்றாகவே திரும்பி வருவார்கள்.

அன்று காலையும் குமரன் சபேசனுக்கு முன்னதாகவே காரியாலயத்துக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தான். அந்த விஷயம் கனகாவுக்கு உடும்புக் கொட்டகையை நெருங்கிய போதுதான் நினைவுக்கு வந்தது. ஒரு மரத்தடியில் நிறுத்தப்பட்டிருந்த சபேசனின் காருக்கு அருகே குமரனின் மோட்டார் சைக்கிளும் நிறுத்தப்பட்டிருந்ததைப் பார்த்த போலா, ''அம்மா, குமரய்யாகூட இங்கேதான் வந்திருக்காங்க போலேயிருக்கு'' என்று கூவினான்.

அதே சமயம் உடும்புக் கொட்டகைக்குள்ளிருந்து வெளியே வந்த குமரனும் அவர்களைப் பார்த்துவிட்டு வியப்புடன் அவர்களை நெருங்கி வந்தான்.

''என்ன கனகா, நீ எப்படி இங்கே வந்தாய்?''

''வீட்டில் தனியே மொட்டு மொட்டென்று உட்கார்ந்திருக்கப் பிடிக்கவில்லை. நீங்கள் திரும்பி வரும் வரை காத்திருப்பதற்குப் பதிலாக நானே உங்கள் இருவரையும் எதிர்கொண்டழைத்துப் போக வந்துவிட்டேன்'' என்றாள் கனகா.

''அம்மாக்கும் ஒரு வேலை போட்டுக் குடுத்திடுங்கோ ஸாப். அவங்களும் உங்ககூடவே வந்திடுவாங்கோ'' என்றான் போலா, பொக்கை வாயைத் திறந்து சிரித்துக் கொண்டே.

''அவன் சொல்வதிலும் அர்த்தமிருக்கிறது. வேலை போட்டுக் கொடுக்க வேண்டாம். என்னையும் உங்களுடன் அழைத்துக் கொண்டு வந்து விடுங்கள். போதும்'' என்றாள் கனகா.

''சபேசன் வேலை செய்யும் இடத்துக்கு ஒரு நாள் போய்ப் பார்த்தால் அப்போது தெரியும்'' என்று சிரித்தான் குமரன்.

''அதிருக்கட்டும், நீங்கள் இங்கே எதற்காக வந்தீர்கள்? இதே பவர் ஹவுஸுக்குப் போக வேண்டிய வேலை ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டாள் கனகா.

''அங்கே வேலையொன்றுமில்லை.... ஆனால் இன்று முன்னதாகவே வந்து விட்டேனல்லவா? காரியாலயத்தில் என் வேலை சீக்கிரமாகவே முடிந்துவிட்டது. அதன் பிறகு அங்கே உட்கார்ந்திருப்பானேன்! பவர்ஹவுஸ் பகுதிக்குப் போய்க் கொஞ்ச நேரம் சபேசனுடன் பொழுதைக் கழிக்கலாமென்று நினைத்தேன்'' என்று குமரன் கூறியதும் கனகா பிடித்துக் கொண்டாள்.

''பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கே பொழுதுபோவது கஷ்டமாயிருக்கிறதே. எனக்கு எப்படியிருக்கும்?'' என்று கூறினாள்.

''நீ வந்ததும் நல்லதாய்ப்போயிற்று, கனகா. உன்னையும் அழைத்துக் கொண்டே பவர்ஹவுஸுக்குப் போகிறேன். சபேசன் ஒரேயடியாக ஆச்சரியப்படட்டும்'' என்றான் குமரன்.

''ஸாப், நீங்க திரும்பி வர வரையிலே நான் இங்கேயே இருந்துடறேன். அந்த டிராலியிலே நம்மாலே இதே எறங்க முடியாது'' என்றான் போலா.


(தொடரும்)



வேடிக்கையல்லவா இது!

'ஏராளமான சொத்துக்களை விட்டு விட்டு ஒரு குபேரர் திடீரென்று காலமானார்' என்ற செய்தியைக் கேட்டதும் அவன் தேம்பித் தேம்பி அழலானான். அருகில் இருந்த அவனுடைய நண்பனுக்கு இது விசித்திரமாக இருந்தது. ''அவர் செத்துப் போனதற்கு நீ ஏன் அழுகிறாய்? அவர் என்ன உனக்குச் சொந்தமா பந்தமா?''

''உண்மைதான் நண்பா! அவர் எனக்குச் சொந்தமும் இல்லை, பந்தமும் இல்லை. அதை நினைத்தால்தான் ஒரே அழுகையாக வருகிறது!'' என்று குமுறினான் அவன். -'ரம்யன்'


வெள்ளி விழா
இரண்டாவது
பரிசு நாவல்

இல்லாத விளம்பரங்கள்

'களப்பாள் நம்பி'

[முன்னுரை : நம் ரயில்வேக்காரர்கள் பிரயாணிகளின் பொழுதுபோக்குக்காகவும், அறிவு வளர்ச்சிக்காகவும் ஏதாவது வாசித்துக் கொண்டே வரட்டுமே என்ற நல்லெண்ணத்தினாலும் நிறைய 'அறிவிப்புகள்', 'நோட்டீசுகள்', 'கவனிப்புகள்', 'விளம்பரங்கள்', 'அறிக்கைகள்' பெட்டி நெடுக எழுதிவிட்டிருக்கிறார்கள். நல்ல நல்ல தலைப்புகளுடன் இன்னும் பல வெளியிடலாமே என்று எண்ணி, இங்கே மாதிரிக்குச் சில புது அறிவிப்புகளைத்] தருகிறேன்.]


வதந்திகளைப் பரப்பாதீர்கள்

வண்டி ஸ்டேஷன் வரும் முன்பே எங்காவது நின்றுவிடில், கீழே இறங்கிச் சிறிது நேரம் நின்றுவிட்டுத் திரும்ப உள்ளே வந்ததும், வண்டி ஏன் நின்றது எனக் கேட்போரிடம் 'கைகாட்டி இறங்கவில்லை' என்று உண்மையையே கூறுங்கள். 'ஏதோ தற்கொலைக் கேசு. ஆள் ஒருவன் தண்டவாளத்தில் குறுக்கே விழுந்துவிட்டான்'' என்று அளந்து விடாதீர்கள்.



உரிமையும் கடமையும்

டிக்கட்டுப் பரிசோதகர் வந்ததும் உடனே, கண்ணுறத் தூங்க ஆரம்பித்து விடாதீர்கள். தூங்குதல் உங்கள் உரிமையாக இருக்கலாம். ஆயினும் அவர் கடமை எழுப்பி, டிக்கெட்டுகளைப் பார்ப்பதாகும். எனவே உங்களை எழுப்ப அவர் காப்பிங் பென்சில் கூரையோ, அல்லது பென்சிலின் கிளிப்பையோ கையாண்டால் நாங்கள் பொறுப்பாளியல்ல.




தன் 'கைடே' தனக்குதவி

உங்கள் ஊர் எப்போது வரும் அல்லது குறிப்பிட்ட ஸ்டேஷனில் சிற்றுண்டி நிலையம் உண்டா என்றெல்லாம் பக்கத்துப் பிரயாணிகளை நச்சுப் பண்ணுதீர்கள். விலை கொடுத்து ஒரு ரயில்வே 'கைடு' வாங்கிவிடுங்கள்.



நல்ல விஷயம் பேசுங்கள்

வழி நெடுகச் சில பேர் அயிலூர் விபத்து, அரியலூர் விபத்து, மகபூப் நகரில் ரயில் கவிழ்ந்தது - இப்படியே பேசிக் கொண்டு வருவார்கள். நல்ல விஷயமாகப் பேசிக் கொண்டிருங்கள், இருக்கிற வரை !






குறுகிய புத்தி வேண்டும்!

அடுத்த ஸ்டேஷன் வரும் அறிகுறி தென்பட்டதும், உங்கள் குடும்பத்தினர்-குழந்தைகளை யெல்லாம் நன்றாக, விலாசமாக (அல்லது விசாலமாக) உட்காருமாறு கண் சமிக்ஞை காட்டாதீர்கள். வரப் போகிறவர்களும் உங்களைப் போலத்தானே?

மனச்சாட்சியைத் தொட்டுக்கொண்டு பேசுங்கள்

உங்களுக்குக் காலை நீட்டிப் படுக்க ஆசை யென்றால், படுங்கள். அதற்காக, இரண்டு மூன்று இரவுகளாகக் கண் விழித்து வடக்கே கார்கியிலிருந்து வருவதாக, எல்லாம் பொய் பேசாதீர்கள். நீங்கள் ஏறியது அரை மணி முன்புதான் என்பது உங்கள் மனச்சாட்சிக்குத் தெரியாதா?






பகைவனுக்கருள்வாய்!

பட்டாணிக்கடலை, வேர்க்கடலை முதலியன வாங்கித் தின்னும்போது தோலியை வாயினால் ஊதி ஊதி எதிராளை அழவிடாதீர்கள். அவரது சட்டை, வேஷ்டி முழுதும் கடலைத் தோலிக்கு ஒரு குப்பைத் தொட்டியா?

வாழ்க காதல்

இளம் தம்பதி எவரேனும் இருப்பின், கூடியவரையில் அந்தப் பெட்டியில் ஏறாதீர்கள். வீட்டில் பிடுங்கல்கள் இருக்கலாம்.




மேலே போனால் ஆசையைக் குறையுங்கள்

மேலே பலகையில் ஏறிப் படுத்துவிட்டால், ஆசையை அடக்கிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வண்டி நின்றதும், மேலே இருந்தபடியே கீழே சன்னல் அருகில் அமர்ந்திருப்பவர்களைக் கொண்டு சாத்துக்குடி,



மசால்வடை, டீ — இப்படி ஒவ்வொன்றாகக் கேட்டு வரவழைத்துச் சாப்பிட்டவண்ணமாக இராதீர்கள். இன்னொரு விஷயம்: மாதுளம் பழம், சாத்துக்குடி போன்றவற்றின் விதைகளை வாயில் அடக்கிக் கொள்ளுங்கள்; அங்கு அமர்ந்தபடியே துப்பாதீர்கள்!



குழந்தைகளுடன் போட்டியிடாதீர்கள்

ஓரத்து இடம் வேண்டும் என்று சன்னல் பக்கத்தில் உட்காரக் குழந்தைகள் ஆசைப்படுவது இயற்கை. அவர்களோடு இடத்துக்குப் போட்டியிடாதீர்கள். நீங்களும் ஒரு காலத்தில் குழந்தைகளாக இருக்கவில்லையா? எண்ணிப் பாருங்கள்.

நகத்துக்குப் பலப்பரீட்சை வேண்டாம்

உங்கள் கை நகத்தின் கூர்மையைப் பரீட்சிக்க, பெஞ்சின் மீதுள்ள எங்கள் மெத்தையைப் பயன்படுத்தாதீர்கள். அப்புறம் பஞ்சு, தேங்காய் நார் முதலியன வெளிவர ஏதுவாகும்.

உங்கள் பிரயாணம் முடிந்த கையோடு மெத்தையின் வாழ்வும் முடிந்துவிட வேண்டுமா? பாவம், மெத்தை பிழைத்துப் போகட்டும்!

அதிசய நாடு!



தேசிய கீதம் இல்லாத நாடு இருக்கிறது என்றால், ஆச்சரியப்படுகிறீர்கள் அல்லவா? பெரிய நாடுகளில் ஒன்றாகிய ஆஸ்திரேலியாவுக்குத் தனக்கென்று ஒரு தேசிய கீதம் இல்லை. இந்நாட்டு மக்கள் இன்னமும் 'ஆண்டவன் அரசியைக் காப்பாற்றுக' என்னும் இங்கிலாந்தின் தேசிய கீதத்தைத்தான் பாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆஸ்திரேலிய நாட்டு அதிகாரிகள் தங்களுக்கு நாட்டுக்கென்று ஒரு தனி தேசிய கீதம் தேவை என்று இப்பொழுது உணர்ந்து, கருத்துச் செறிவும் இசை நயமும் பொருந்திய ஒரு தேசிய கீதத்தை இயற்றும் பணியில் மும்முரமாக இறங்கியுள்ளார்கள்.

ஆதாரம்: டைம் அண்டு டைட்

தகவல்: ஏ. கே. கந்தசாமி.



புறப்படுவது என்று முடிவு செய்தவன் இரண்டு நாட்கள் விடுமுறைக்கான விண்ணப்பத்தை எழுதித் தாமுவிடம் கொடுத்து, உடன் வேலை பார்த்த அடுத்த வீட்டுக்காரரிடம் அளித்து ஆபீஸில் சேர்த்து விடும்படி சொல்லச் சொன்ன பொழுது என் மனைவி ராஜம் என்னைத் திகைப்புடன் பார்த்தாள். என் தீர்மானம் அவளுக்கு வியப்பை அளித்திருக்க வேண்டும்.

பிரிவின் வேதனையை — துயரத்தை அவள் எப்படியோ தாங்கிக் கொண்டு விட்டாள். அதை மற்ற இரு குழந்தைகளின் விளையாட்டுக்களிலும், அவர்களைக் கவனிப்பதிலும் மறக்கவும் தலைப்பட்டாள்.

காரணம் அவள் பெண். உணர்வுக் கூட்டங்கள் பொங்கி எழுந்தாலும், அவை வெளியே வழிந்துவிடாமல் தடுத்து உள்ளுக்குள்ளேயே வைத்துக் குமையும் நிதானம் அவளுக்கு உண்டு. ஆனால், என்னால்தான் முடியவில்லை! எதையோ இழந்தவன் போன்று நான் துடித்த துடிப்பும், அடைந்த மனத் தவிப்பும் அவள் உணர்ந்ததுதான். அதை ராதைக்கு அவள் எழுதியும் விட்டாள். அதற்கு ராதை எழுதிய பதில்....? இவ்வளவுக்கும் ராதை என் ஒரே பெண்ணல்ல. அவளுக்குக் கீழ் தாமுவும் அடுத்துப் பாமாவும் வளரும் குருத்துக்களாய் இருந்தனர்.

ஆயின் ராதையிடம் எனக்கிருந்த பாசம் பிரிவின் துயரினால், அழுத்தும் சுமையாக இரட்டிப்பாகி விட்டதோ என்னவோ!

அவள் திருமணமாகிக் கணவன் வீடு சென்று சில மாதங்களே ஆகியிருந்தன. அதற்குள் காலம் மலையாகச் சரிந்து விழுந்துவிட்டதாக எனக்கு ஒரு பிரமிப்பு. ராதைக்கு நல்ல மன உறுதி!

ஊருக்குப் புறப்படும் பொழுதுகூடக் கண் கலங்கவில்லை அவள். அதற்குப் பதில் அவள் முகத்தில் பெண்மையின் மகத்தான சாதனையை அடைந்துவிட்ட பூரிப்பு

என்னால் தாங்க முடியவில்லை.

அவள் முன்னிலையில் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்ட நான் வழியனுப்பி விட்டு வீட்டுக்கு வந்ததும் அறைக்குள் புகுந்துகொண்டு அவிழ்த்துக் கொட்டினேன்.

''நாகசாமிக்கு என்றுமே கோழை மனசு''- இது என் தாயின் விமரிசனம். கோழைத்தனமும், இளகிய மனமும் பெண்களுக்கான குணங்கள். ஆண்பிள்ளையான என்னிடம் அவை எப்படித் தஞ்சம் புகுந்தன?

என்னை உணர்ந்து கொண்டதாலோ என்னவோ ராதை கடிதம் எழுதியிருந்தாள். திருமணத்துக்குப்பின் எனக்கு வந்த முதல் கடிதம்.

''பாசத்தின் வேதனை பெரிதுதான் என்றாலும் புதிய சூழ்நிலைக்கு உங்களைப் பழக்கப்படுத்திக் கொள்வதுதான் நல்லது. வளர்ந்து விட்ட கொடிக்குக் கொழுகொம்புதான் ஆதாரம். அது போன்று வயது வந்துவிட்ட பெண்ணுக்குக் கணவனாவான்.

''முட்டையிட்டுப் பாதுகாத்துக் குஞ்சு வெளி வந்ததும் அன்பும் ஆதரவும் தருவது தாய்ப் பறவைதான் என்றாலும் இயற்கையின் நியதிப்படி இறகு முளைத்ததும் குஞ்சு ஒரு நாள் கூட்டை விட்டுப் பறந்துதான் போகிறது. அதன்பின் தனியாக அதன் குடும்பம் அமைந்துவிடும். அதன் பிரச்னைகளும் கவலைகளும் வேறாகி விடுகின்றன. அவற்றை எதிர்த்துப் போராடி வெற்றி காணும் மன உறுதியும் ஆற்றலும் அவற்றுக்கு இயல்பாகவே வந்துவிடுகின்றன. இது தான் உலக வழி. வாழ்க்கையில் நாம் அன்றாடம் பார்க்கும் உண்மை.

''என் கணவர் என்னிடம் மிகவும் பிரியமாக இருக்கிறார். நான் பாக்கியசாலி.

றில் சில முக்கியமான வாக்கியங்களை ராஜம் அடியில் கோடிட்டிருந்தாள்.


''ஏண்டா, நாகு! பெண்கள் கல்யாணமானால் புக்ககம் போவது சகஜம்தானே. நானும் ராஜமும் அப்படி வந்தவர்கள்தானே? இப்போ என்ன புதிசாய் நடந்துவிட்டது? பார்க்கணும்னு தோணினா போய்ப் பாரேன். பெங்களூர் அடி நிலத்தில் இருக்கிறது. அதுக்கு ஏன் இந்த யோசனை?''

அம்மா எனக்குத்தினமும் புத்திசொன்னாள்.

திடீரென்று புறப்படத் தோன்றியதன் காரணம் அதுதானா?

எதை எடுத்துக் கொண்டேனா இல்லையோ கிளம்பி விட்டேன்!

அந்த அவசரத்திலும் ராஜம் மறக்காமல் பாட்டிலில் திணித்துக் கொடுத்த—ராதைக்கு மிகவும் பிரியமான—ஆவக்காய் ஊறுகாய், கடலை உருண்டை டப்பா, வாழைச் சருகில் சுற்றப்பட்ட மல்லிகைச் சரத்தின் பொட்டலம், – இவை கூடைக்குள்ளிருந்து எட்டிப் பார்த்தன. ராதைக்கு மல்லிகை என்றால்



மல்லிகைச்சரம்

லட்சுமிரமணன்


இத்தகையவரை என்னுடையவராக்கிக் கொடுத்ததற்கு நான் மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன் உங்களுக்கு. என்னை அடுத்துத் தாமுவும் பாமாவும் உங்களைத் தங்கள் எதிர்காலத்துக்காக நம்பியிருக்கிறார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். என்னைப் பொறுத்தவரை உங்கள் கடமை முடிந்து விட்டது.''

அவள் கெட்டிக்காரி. எவ்வளவு பெரிய விஷயத்தை எத்தனை எளிதாக விளக்கிவிட்டாள்! நியதியின் வரம்புக்குள் மனிதன் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும் என்பதை தான் ஏன் மறந்து விட்டேன்?

ராதையின் இந்தக் கடிதத்தை நான் எப்பொழுதும் உடன் வைத்திருந்தேன். அவற்

உயிர்! ராஜத்துக்கும் என்னுடன் வர ஆசைதான். அம்மாவைத் தனியே விட்டு விட்டு வர நான்தான் சம்மதிக்கவில்லை. மேலும் அவள் கிளம்பினால் குழந்தைகள் தாங்களும் வருகிறோம் என்று அடம் பிடிப்பார்கள். முன் அறிவிப்பில்லாமல் குடும்பமே போய் நின்றால் மாப்பிள்ளை என்ன நினைப்பார்? பெண் வீடு என்ற உரிமை இருந்தாலும் மாப்பிள்ளை அயல்தானே? அதனால்தான் மறுத்து விட்டேன்.

ஸ்டேஷனுக்கு வந்து ரயிலைப் பிடித்ததும் வழியில் நான் ராதைக்காக வாங்கிய கத்தான் சில்க் புடவையையும் ரவிக்கையையும் பெட்டிக்குள் அடக்கம் செய்து பூட்டிய பின்னரே நிம்மதியாகப் பெருமூச்சு விட்டேன். ரயில் கிளம்பியதும் வெளியே பதிந்த பார்வைக்குத் தென்பட்டவை, பூசி நின்ற இருளுக்குள் மின்


எல்லாமே கருகிச்
சாம்பலாகிவிட்டது
கவனக் குறைவால், அணைக்கப்படாமல் தூக்கி எறியப்பட்ட ஒரு சிகரெட் துண்டு அனைத்தையும் நாசமாக்கி விட்டது. வருடக் கணக்காகக் கட்டிக் காத்து வளர்க்கப்பட்ட வாணிகம் சாம்பலாகக் காட்சியளிக்கிறது.
உங்களுக்கும் இதுபோன்ற நிலை ஏற்படலாம். இத்தகைய இடர் மற்றும் இன்னல்களினின்றும் உங்களை நீங்கள் காத்துக்கொள்ள முடியும். எல்.ஐ.சி., நெருப்பினால் ஏற்படும் இழப்பிற்குப் போதுமான ஈடுசெய்து பாதுகாப்பளிக்கிறது. விபத்து, கப்பல் மற்றும் மோட்டார் விபத்து ஆகியவற்றிற்கும் இன்சூரன்சு வசதி கிடைக்கிறது.
எல்லா வகையான
இன்சூரன்சுகளுக்கும்
எல்.ஐ.சி.
ARR & CO.

மினிப் பூச்சிகளாய் ஒளிர்ந்து மறையும் நகரத்து விளக்குகள்.

கண்களை மூடிக் கொண்டால் மலர்ந்த புன்னகையுடன் ராதை எதிரில் வந்து நிற்பது போன்ற பிரமை.

அன்று ராதையின் பிறந்த நாள்! காலையி லிருந்தே நிலை கொள்ளவில்லை எனக்கு. நெஞ்சுக்குள் ஏதோ கருவண்டு வந்தது. ராதை யின் நட்சத்திரத்துக்கு அர்ச்சனை செய்து கொண்டு வர ராஜும் கோவிலுக்குப் புறப் பட்டாள். நான் உடன் செல்லவில்லை. மனத் துள் பார்க்க முடியாத ஒரு பொருள் கனமாக நின்று அழுத்திற்று.

அவள் நினைவுதான், மரத்தடியில் உதிரும் பூக்களைப் போன்று. அந்நினைவுகளைச் சுவைக் கும் பொழுது விலை உயர்ந்த அத்தரைக் கைக் குட்டையில் தோய்த்து நுகர்ந்த இனிமை.

சின்ன வயதில் ராதை செய்த விஷமங் களும் முரட்டுப் பிடிவாதங்களும் இருக்கட் டும். பெரியவளான பின்னரும் விளையாட்டுப் புத்தி போகவில்லை அவளுக்கு.

''ராதை.... ராதை....'' வேண்டியோ வேண்டாமலோ அவளைக் கூப்பிட வேண்டும் எனக்கு. இருபது ஆண்டுகளாக வாயுடன் வந்துவிட்ட பழக்கம். எளிதில் போக மறுத்தது.

''என்ன அப்பா?'' என்று அவள் துள்ளி யோடி வருவாள்.

''மெதுவாக வா, அம்மா !''

அவள் சிரிப்பாள். ஜலதரங்கக் கிண்ணங் களை ஒருங்கே தட்டிவிட்டது போன்று இருக் கும் அந்தச் சிரிப்பு.

உள்ளிருந்து அம்மாவின் குரல் அதட்ட லாக வரும். ''என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது வயசுப் பெண்ணுக்கு? கொஞ்ச மாவது பதவிசு வேண்டாம் ?''

''என்ன 'விசு' வேண்டும் பாட்டி ?''

அப்போதும் அவளுக்குக் குறும்பு.

''வாயைப் பார், வாயை ! எவன்தான் கட்டி மேய்க்கப் போகிறானோ இவளை?''

'எல்லாம் நீ கொடுக்கிற இடம் தான்' என்று என்னை அம்மா தாக்க முற்படுமுன் சாமர்த்தியமாகப் பேச்சை மாற்றிவிடுவாள் அந்தக் குறும்புக்காரி. அம்மாவுக்கு மட்டும் என்ன? ராதையைக் கண்டிப்பாளே தவிர அவளிடம் பற்றுதலும் பாசமும் இல்லாமல் இல்லை. கல்லூரி நாட்களில் என் ராதை வாங்கிக் குவித்த பரிசுகள் எத்தனையோ.

''ஏதேது. இதை வைத்துக் கொண்டே உன் கலியாணத்துக்குச் சீர் செய்துவிடலாம் போலிருக்கிறதே!'' என்று நான் கேலி செய் தால், ''போங்கப்பா, எனக்குக் கலியாணம் வேண்டாம்'' என்று அவள் சிணுங்குவாள்.

படிப்பு முடிகிறதே என்று யோசிப்பதற் குள் அவள் திருமணம் நிச்சயமாகி விட்டது. மாப்பிள்ளை சங்கரனுக்குப் பெங்களூரில் கம்பெனியொன்றில் வேலை. பெற்றோர்கள் கிடையாது. தூரத்து உறவுக்காரர் ஒருவரின் மூலம்தான் பேச்சு முடிந்து முகூர்த்தம் நிச்சயமாயிற்று. பையனும் கண்ணுக்கு லட்சணமாக இருந்தான். கை நிறையச் சம் பளம். என் ராதை மட்டும் என்ன குறைந்த வளா ? நிர்மலமான சிவந்த அவள் முகம் எப் பொழுதும் காலையில் மலரும் ரோஜாவை நினைவூட்டும். பார்வையிலே விளையாடும் துறுதுறுப்பு. பேச்சிலே இனிமை அவளுக்கே உரிய குணம். சரியான ஜோடிப் பொருத் தம்தான்.

விளக்கை அணைத்துவிட்டு உறங்க முயன் றேன். தூக்கம் வருவதேது?

எதிரெதிரே இருந்த நிலைக் கண்ணாடிகளுக் குள் விழும் பிரதிபிம்பங்களாய் உள்ளத்துள் ராதைதான் நிறைந்து நின்றாள். அவள் எனக்குச் செல்லப் பெண்தான். அவளை யாரும் அதிர்ந்து பேசினால்கூடச் சகிக்காது எனக்கு.

எதிர்பாராதவிதமாக என்னைக் கண்டால் அவள் என்னை எப்படி வரவேற்பாள் என்ப தைக் கற்பனை செய்து பார்த்துக் கொண் டேன்.

''நீங்களா?'' என்று பிரமித்துப்போவாள், நான் போய் நின்றதும். வியப்பும், மகிழ்ச்சி யும் அவள் முகத்தில் பொங்கி வழியும்.

இல்லறத்தின் பூரிப்பிலும் நிறைவிலும் அவள் சற்றுப் பருத்திருப்பாளோ? அவள் குறும்பு விழிகளில் அடக்கம் குடிகொண் டிருக்கும். அவள் நடையிலும் பேச்சிலும் நிதானம் புகுந்துவிட்டிருக்கும். அடேயப்பா! திருமணம் ஒரு பெண்ணை எந்த அளவுக்கு மாற்றி விடுகிறது!

பொழுது விடிந்து விட்டதா என்று நொடிக்கொரு முறை பார்த்துக் கொண்டிருந்தேன். என் பொறுமையை நெடுநேரம் சோதித்த பின்னரே ரயில் பெங்களூர் நிலையத்தை அடைந்தது.

உள்ளத்தில் சொல்ல முடியாத துடிப்பு. முன்னறிவிப்பில்லாமல் சென்றதால் யாரும் ஸ்டேஷனுக்கு வருவார்கள் என்று காத்திருக்க வேண்டியதில்லை. சாமான்களை அவசரமாக டாக்ஸியில் ஏற்றிக் கொண்டு பசவன்குடியை நோக்கி விரைந்தேன்.

அவள் வீடு வந்து விட்டது !

சாமான்களை இறக்கி வைக்கும் வரைகூடப் பொறுமை இல்லை. அதற்குள் என் வரவை அறிவித்துவிட மனதில் பொங்கிய ஆவலுடன் கதவைத் தட்டக் கைவைத்தேன்.

உள்ளே தாளிடப்படாத கதவு தானே திறந்து கொண்டு எனக்கு முகமன் கூறியது.

எங்கும் நிசப்தம்!

'எங்கே ஒருவரையும் காணோம். ஒரு வேளை வெளியூர் எங்காவது சென்றிருப்பார்களோ? இல்லையே. இரண்டு நாட்களுக்குமுன் வந்த கடிதத்தில்கூட, தான் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதாகவும் கவலை வேண்டாம் என்றும் அல்லவா ராதை எழுதியிருந்தாள் ?' நினைவின் ஓட்டம் நின்றது.

வரவேற்பு அறைக்கு அடுத்தாற்போல் இருந்த அறையில் அவள்.... ராதையேதான் நின்றிருந்தாள். எதிரே மேஜையொன்றில் கால்களைப் போட்டவாறு சங்கரன் அமர்ந்திருந்தான்.

நான் உற்று நோக்கினேன். சங்கரனின் கலைந்த கிராப்பு. சிவந்த கண்கள். கால்களில் கழற்றப்படாத செருப்புக்கள் அவன் அப்போதுதான் எங்கோ வெளியே போய் விட்டு வந்திருக்கிறான் என்பதை உணர்த்தின.

என் ராதை.... ராதையா அவள்? நான் மனத்துக்குள் சித்திரித்துப் பார்த்துக் கொண்ட பெருமிதமும் பூரிப்பும் நிறைந்த அவள் எங்கே....? மகிழ்வு குமிழியிடும் அந்த மலர்ந்த முகம் எங்கே?

வேதனை தோய்ந்த பார்வையுடன், தசை உருகி ஒன்றிவிட்ட வெறும் எலும்புக்கூடாய் அவள் காட்சி தந்தாள்! அவள் ஏதோ மெல்லிய குரலில் வினவினாள்.

அவன் பதிலுக்குப் பெரிதாகச் சிரித்தான். ஏளனமான குரலில் பதிலிறுத்துவிட்டு விருக்கென்று எழுந்தான். அவனிடம் மதுபோதையில் இருப்பவனின் தடுமாற்றம்....

எனக்கு விளங்கிவிட்டது. நெஞ்சுக்குள் 'சுருக்'கென்று கண்ணாடித் துண்டாய் உறுத்தியது ஏதோ ஒன்று. அடுத்த கணம்.... நான் முற்றிலும் எதிர்பாராதவண்ணம் என் ராதையின் பட்டுக் கன்னத்தில் பளீரென்று ஓர் அறை வைத்தான் அவன்.

என் இதயத்தைக் கசக்கிப் பிழிந்திருந்தால்கூட நான் அப்படித் துடித்திருக்க மாட்டேன். ராதையை அதிர்ந்து ஒரு வார்த்தை பேசக்கூட நான் யாரையும் அனுமதித்ததில்லை. அப்படி இருக்கையில் கண் முன் கண்ட அந்தக்கொடுமையை எப்படித் தாங்குவேன்?

அந்தக் காட்சியைக் காணவா நான் அவசரமாக ஓடி வந்தேன்? அதற்காகவா நான் பொழுது எப்பொழுது விடியும் என்று காத்திருந்தேன்?

அறைக்குள்ளிருந்து அவளது விசும்பல் ஒலி. அவன்.... அதை லட்சியம் செய்தவனாகவே தெரியவில்லை. என் உடல் நடுங்கியது. கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டேன்.

அதற்குள் எனக்குள்ளே தீர்மானம் உருவாகி விட்டது. ராதையின் கண்ணீரைத் துடைப்பது என் கடமை. அவள் துயரை அகற்றுவதும்தான். அந்தத் துயர் அவனுடன் இப்படி வாழ்கிற வரையில் நீங்காது. அவளை என்னுடன் அழைத்துப் போய்விடுவேன். அவள் துயர் உறுவதை என்னால் பொறுக்க முடியாது. "நீ வாழா விட்டால் வேண்டாம். என்னுடன் வந்துவிடு. எனக்கு ஒரு மகளாக இருந்து விடு. நான் இருக்கிறேன், உனக்கு ஆதரவளித்துக் காக்க" என்று கூறி அவளை அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்ற உத்வேகம் என்னைத் தள்ளியது. ஓரடி முன்னே வைத்தேன். காலில் ஏதோ இடறிற்று. குனிந்து அதைக் கையில் எடுத்தேன். ராதை எனக்கு எழுதிய கடிதம். நான் எப்பொழுதும் உடன் வைத்திருந்த அவளது முதல் கடிதம். அது எப்படிக் கீழே விழுந்தது? கைக்குட்டையை எடுக்கும் போதா? அதைப் பிரித்தேன்.

"ராதை!" அவளை அழைக்க வாய் வரை வந்த வார்த்தை ஏனோ நின்றுவிட்டது.

"..... ..... இயற்கையின் நியதிப்படி இறகு முளைத்ததும் குஞ்சு ஒரு நாள் கூட்டைவிட்டுப் பறந்துதான் போகிறது. அதன்பின் தனியாக அதன் குடும்பம் அமையும். அதன் பிரச்னைகளும், கவலைகளும் வேறாகி விடுகின்றன. அவற்றை எதிர்த்துப் போராடி வெற்றி காணும் மன உறுதியும் ஆற்றலும் அவற்றுக்கு இயல்பாகவே வந்து விடுகின்றன. இதுதான் உலக வழி..... என்னைப் பொறுத்தவரை உங்கள் கடமை முடிந்து விட்டது." நானும் கோடிட்டு வைத்திருந்த வாக்கியங்கள் என் பார்வையில் இடறின.

தெய்வத்தின் வாசகங்களோ அவை ? நான் பிரமித்து நின்றேன். வெளியே இருந்த டாக்ஸிக்காரர் பொறுமையின்றி ஹாரனை அழுத்திக் கொண்டிருந்தார். அவர் அவசரம் அவருக்கு.

ஒரு கணம்தான். அதற்குள் மின்னலாய்ப் பளிச்சிட்டு விழுந்தது உண்மை. அவளை நான் என்னுடன் அழைத்துப் போய்விடுவதால் அவள் பிரச்னை முடிந்துவிடப் போவதில்லை. அவன் திருந்தினாலொழிய அவள் துயரம் அழியப் போவதும் இல்லை.

அது அவள் சொந்தப் பிரச்னை. அதுடன் பொறுமையாகப் போராடி முடிவு காண வேண்டிய பொறுப்பு அவளுடையது. அதற்கான திறமையும், உறுதியும் தனக்கு இருக்கிறது என்ற நம்பிக்கையை அவள் இழக்கவில்லை. என்னுடைய உதவி அவளுக்குத் தேவையில்லை. தேவை இருப்பதாகக் கருதி இருந்தால் நாடி வந்திருப்பாள்.




ஸ்ரீ முத்துக்குமரன் பிக்சர்ஸ் அளிக்கும்
புரட்சிநடிகர் எம். ஜி. ஆர் நடிக்கும்
பெற்றால்தான் பிள்ளையா
டைரக்ஷன்
கிருஷ்ணன்பஞ்சு
தயாரிப்பு
வாசு
ஸ்டூடியோ
சத்யா
ஸ்டார், மஹாராணி, நூர்ஜஹான்
மற்றும் தென்னாடெங்கும்



ஒரே ஒரு

ஸாரிடான்

'ரோஷ்'



JWT-VT-3337

வலியைப் போக்குகிறது ஆசுவாசப் படுத்துகிறது புத்துணர்ச்சி யூட்டுகிறது

உலகப் புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் - விரைவில், அபாயமின்றி, நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, பல்வலி, உடல்வலி, சாதாரண உடற் கோளாறுகள், இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். ஒரு வில்லை முழு டோஸ்; குழந்தைகளுக்கு ½ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.



ஸாரிடான் ஒரே வில்லை போதும்

'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் : வால்டாஸ் லிமிடெட்

மேலும்..... ஒரு முறை அவள் வாழ வேண்டிய பாதையைக் காட்டிக் கொடுத்துவிட்ட பின்னர் அதில் குறுக்கிட்டு மாற்றி அமைக்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது? உரிமை இருப்பதாகக் கூறி உதவப் போனாலும்கூட அவள் அதை ஏற்றுக் கொள்வாள் என்பது என்ன நிச்சயம்? கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்தேன்.

அவளது விசும்பல் ஒலி எனக்குக் கேட்காமல் இல்லை.

திண்ணையில் உட்கார்ந்திருந்த அடுத்த வீட்டுக்காரர் என்னைப் பார்த்து விட்டு எழுந்து வந்தார்.

''நீங்கள் சங்கரனுக்கு உறவா, சார் ?'' இது அவர் கேள்வி.

நான் பேசவில்லை.

''நீங்களாவது புத்தி சொல்லுங்கள் சார். இரவெல்லாம் குடித்துக் கொம்மாளமடித்துவிட்டு அந்தத் தங்கமான பெண்ணை இப்படி...''

''இல்லை, இல்லை. தவறான விலாசத்துக்கு வந்துவிட்டேன்......'' மனமறிந்து பொய் சொல்லிவிட்டு அவசரமாக டாக்ஸியில் ஏறிக் கொண்டேன். தொடர்ந்து நிற்க மனமில்லை. என்னையும் மீறி எதுவும் நடப்பதற்குள் திரும்பி விடுவதுதான் உசிதம் என்று நினைத்தேன். டிரைவர் என்னை வியப்புடன் பார்த்துவிட்டு வண்டியைச் செலுத்தினார். குறையில் நிறைவைக் காண்பதுதான் பெண்மையா? உண்மைக்குத் திரை போட்டு அவள் மறைத்துவிட்டதற்கு அதுதான் காரணமா ?


அப்படி என்றால் நான் மட்டும் அந்தத் திரையை விலக்கிப் பார்த்துச் சுயரூபத்தை அறிந்துவிட்டதை ஏன் வெளிக்காட்டிக் கொள்ள வேண்டும்? நான் வந்ததற்கு அடையாளமாக எந்தச் சுவட்டையும் விட்டுச் செல்ல விரும்பவில்லை.

ஸ்டேஷனில் தங்குமிடத்துக்குச் சென்று அமர்ந்தேன். மனத்தில் சஞ்சலம் அடங்குவதாயில்லை. பார்வை யதேச்சையாக ராஜம் கொடுத்திருந்த கூடையின்மீது பதிந்தது.

ராதைக்காக அதில் அவள் வைத்திருந்த மல்லிகைச் சரப் பொட்டலத்தைக் காணவில்லை ! எங்கோ விழுந்து விட்டிருக்க வேண்டும். டாக்ஸிக்குள் விழுந்ததோ, இல்லை வழியிலோ. அதை யார் எடுத்துக் கொண்டார்களோ? இனிய சுகந்தம் வீசும் அம்மல்லிகைச் சரத்தைத் தெய்வத்துக்குச் சமர்ப்பிக்கிறார்களோ, தலையில் சூடுகிறார்களோ, இல்லை, கசக்கி மிதித்து எறிகிறார்களோ? யாருக்குத் தெரியும்!

இறந்தபின் சொந்தம் கொண்டாட எனக்கு என்ன உரிமை? ராஜத்துக்காவது எப்படியோ பதில் சொல்லிச் சமாளித்து விடுவேன். ஆயின் இந்தப் பாழும் மனம்....?

'ராதாக்! கண்ணு உனக்கேற்ற கண்ணன் வாய்க்கவில்லையடி, காதகன் வாய்த்துவிட்டான்! நான் என்னம்மா செய்வேன் ?' நெஞ்சை அழுத்திய துயரம் கண்களில் நீராகக் கசிந்துவர வாய்விட்டு அழுதேன் — நான் ஓர் ஆண் மகன் என்பதையும் மறந்து விட்டு.



திணற அடித்த தமிழ் !

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுக நாவலர் ஒரு நாள் காலை ஏழரை மணி அளவில் சென்னைக் கடற்கரையில் உலவ வந்து கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென ஒரு வீட்டில் தீப்பற்றிக் கொண்டது. அச்சம்பவம் காரணமாகப் பின்னர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நடந்தது. நாவலர் சாட்சியாக நீதி மன்றத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். நீதிபதி நாவலரிடம், ''தீ விபத்து நடந்தபோது எத்தனை மணி இருக்கும்? நீங்கள் அப்பொழுது என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு நாவலர் மறுமொழியாகத் தூய்மையான - உயர்ந்த - ஆங்கிலத்தில் விடை கூறினார். அவர் ஆங்கிலத்தில் விடை கூறியதை நீதிபதி வரவேற்கவில்லை. நாவலரைத் தமிழிலேயே விடை கூறுமாறு பணித்தார். உடனே நாவலருக்குச் சினம் வந்து விட்டது. தமிழில் பேசி எல்லாரையும் திணற அடிக்கிறேன் என்று எண்ணினவராய் ''அஞ்ஞான்று எல்லிஎழ நாலுழிப் போதின் வாய் ஆழிவரம் பணித்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி'' என்று விடை சொன்னார்.

நாவலர் இவ்வாறு சொன்னதும் நீதிமன்றத்தில் எல்லாரும் திகைத்து விட்டனர். ஏனெனில், யாருக்கும் அவர் பேசிய தமிழ் புரியவில்லை. இந்நிலையில், மொழிபெயர்ப்பாளரின் நிலைமை மிகவும் பரிதாபகரமாகப் போய் விட்டது. ஏனெனில், அவர் தாம் நாவலர் பேசியதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நீதிபதிக்குச் சொல்ல வேண்டும்.

(நாவலர் கூறிய விடை இதுதான்: அன்று சூரியன் வானத்தில் எழுந்து நான்கு நாழிகை இருக்கும்; நான் கடல் ஓரத்தின் அருகே காற்று வாங்கியவாறு உலாவச் சென்றபோது.)

— க. தி. நாகராசன்

கழுதையும் குதிரையும்!

உலகப் புகழ் பெற்ற பிரஞ்சுக் கதாசிரியரான அலெக்சாந்தர் டூமாஸுக்கு ஒரு நாள் முன்பின் தெரியாத நபரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அது மிகவும் விசித்திரமானது.

தான் ஒரு நாடகம் எழுதத் திட்டமிட்டிருப்பதாகவும் அதை டூமாஸ் அவர்களோடு சேர்ந்து கூட்டாக எழுதத் தான் விரும்புவதாகவும் ஒருவன் எழுதியிருந்தான்.

டூமாஸுக்குக் கோபம் வந்து விட்டது. அநாமதேயமான ஓர் ஆசாமி, புகழ்பெற்ற தமக்குக் கூட்டாளியாவதா?

"எப்படி ஐயா, கழுதையையும் குதிரையையும் ஒரே வண்டியில் பூட்டலாம் என்ற துணிச்சல் உமக்கு வந்தது?" என்று கேட்டு அந்த நாடகாசிரியனுக்கு டூமாஸ் எழுதினார்.

அவனும் விடவில்லை. உடனே "எப்படி ஐயா, என்னைக் குதிரை என்று சொல்ல உமக்குத் துணிச்சல் வந்தது?" என்று கேட்டு டூமாஸுக்கு எழுதினான்.

இதைப் படித்ததும் டூமாவின் கோபமெல்லாம் தணிந்தது. அவனுக்குத் தொழுதனி, அவன் கோரிக்கைக்கு இணங்கினார்.

ப. கந்தசாமி.



1. இந்தியாவின் முதல் மின்சார ரயில் எந்த இரு ஸ்டேஷன்களுக்கிடையே ஓடியது?
2. 'ஷெல்லிதாசன்' என்னும் புனைபெயரில் ஒளிந்துகொண்டுள்ள பிரபல தமிழகக் கவிஞர் யார்?
3. 1958 அக்டோபரில் அதிகாரத்தைக் கைப்பற்றிய சர்வாதிகாரி அயூப்கான், பாகிஸ்தான் தோன்றிய தினத்தன்று என்ன பதவியில் இருந்தார்?
4. நோபல் பரிசு பெற்ற இரு அமெரிக்க ஜனாதிபதிகளின் பெயர்களை நினைவுகூர முடியுமா?
5. இந்தியத் தபால் முதன் முதலாக ஆகாய விமானத்தில் பறந்து சென்றது எந்த ஆண்டில்?
6. முதல் முதலாக ஒரு யானை அமெரிக்க மண்ணில் காலடி எடுத்து வைத்தது எந்த நூற்றாண்டில்?
7. செடிகளின் வளர்ச்சி சந்திரனால் பாதிக்கப் படுவதுண்டா?
8. வங்காளி, மைதிலி, போஜ்புரி, ஹனுதி: இந் நான்கும் அண்டை நாடு ஒன்றில் பேசப்படும் மொழிகளில் சில. எந்த நாடு அது?
9. பாரதத்தின் பதினாறாவது ராஜ்யமாகக் கொர்ந்த பிரதேசம் எது?

- பரணி

(விடை 63ம் பக்கம் பார்க்க)

என்ன மாயம்!



பிரயாகையில் கும்பமேளா. பாரதத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் மக்கள் கூடியிருந்தனர். இத்தகைய கூட்டத்தை வெளிநாட்டார் கண்டதேயில்லை. எப்படித்தான் இவ்வளவு மக்கள் ஒரே நாளில் இப்படிக் கூடுகின்றனரோ என்று வியந்தனர்.

பண்டித மதன்மோகன் மாளவியா ஜீவிய வந்தராயிருந்த காலம். ஓர் ஆங்கிலேயர் அவரை அணுகி, "இப்படி ஒரு பெருங்கூட்டத்தைக் கூட்ட நீங்கள் - ஹிந்துக்கள் - என்ன செய்கிறீர்கள்? ஊர் ஊராகப் பிரசாரகர்களை அனுப்பிப் பிரசாரம் செய்கிறீர்களோ? அப்படிச் செய்வதாயிருந்தாலும் செலவு ஏகப்பட்டதாக ஆகுமே? விளம்பரங்கள் கொடுப்பதாயிருந்தாலும் செலவு தலைக்கு மேல் போய்விடுமே! நீங்கள் இப்படி ஒரு கூட்டத்தைக் கூட்ட என்ன மாயம் செய்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"நாங்கள் ஒரு தம்பிடி செலவு செய்வதில்லை. எங்கள் ஹிந்து மக்களின் மனம் இப்படி ஓர் ஒருமைப் பாட்டைத் தானாகவே வளர்த்திருக்கிறது. நாங்கள் ஆண்டுதோறும் பஞ்சாங்கம் என்று ஒன்று போடுகிறோம். போன வருடம் தயாரித்த பஞ்சாங்கம் இது. இதில் இந்த வரியைப் பாருங்கள். இந்த மாதம் இந்தத் தேதியில் 'பிரயாகையில் கும்பமேளா' என்று குறித்திருக்கிறது. இந்த ஒரு வார்த்தையைப் பார்த்துவிட்டுத்தான் பாரதத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் மக்கள் வந்து கூடுகிறார்கள். பல மொழிகள் பேசினாலும், பல பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தாலும் நாங்கள் இந்தியர்கள் ஒருமனப்பட்டவர்கள் என்பதைக் காட்ட இதைக் காட்டிலும் வேறு சான்று வேண்டுமா?" என்று கேட்டார் மாளவியா.

உங்களால் போட முடியுமா?



35 × 73

உங்களுக்கு இரண்டாவது வாய்ப்பாடு தவிர வேறு வாய்ப்பாடு எதுவுமே தெரியாது என்று வைத்துக் கொள்ளுங்கள். மேலே உள்ள கணக்கை உங்களால் போட முடியுமா? - ஏ. கணபதி

(விடை 72-ம் பக்கம் பார்க்க)

கிழித்தெறியுங்கள் பைல்களை!




தகவல் - ஒலிபரப்பு இலாகாவில் நீண்ட காலமாகத் தேங்கிக் கிடக்கும் ஃபைல்களைப் பைசல் செய்யுமாறு ஓர் அதிகாரிக்குக் கட்டளையிட்டது அந்த இலாகா. நிலைமையை நன்றாகப் பரிசீலித்த அந்த அதிகாரி கூறியதாவது:

''1952ம் வருஷத்திலிருந்து தேங்கிக் கிடக்கும் ஃபைல்கள் மொத்தம் 39,700 இருக்கின்றன. இவைகளில் 24,800 ஃபைல்களைக் கிழித்தெறிய வேண்டும்.'' கிழித்தெறிய வேண்டும் என்பதற்கு அவர் கூறிய காரணம் விசித்திரமானது. தற்போதுள்ள விதிகளின்படி ஒரு ஃபைல் மூன்று வருஷத்துக்கு மேல் பைசல் செய்யப்படாமல் தேங்கியிருக்கக் கூடாதாம். ஆகவே அவற்றைப் பைசல் செய்யச் சுலபமான நல்ல வழிதானே இது? ''இப்போது இந்தப் பைல்களைக் கிழித்தெறிவதால் அலுவலகத்தில் 754 சதுர அடி இடமும் ஐம்பது அலமாரிகளும் காலியாகும்'' என்கிறார் அதே அதிகாரி!

(ஆதாரம்: டெக்கான் ஹெரால்ட்)
தகவல்: கே. ராமச்சந்திரன்.

முக்கூட்டு



கடவாத்திய வித்துவான் ராமச்சந்திரனின் ஊரான ஆலங்குடியில் கோகுலாஷ்டமி உற்சவம். பல வித்துவான்களின் கச்சேரித் தொடர்.

காலை நேரம். சிற்றுண்டி காப்பிக்குப் பின் செம்பை பாகவதர், ''பொழுது விடியப் போகிறதே! காளியாக்குடி வைத்தியநாதய்யர் பாடினால் கேட்கலாம்'' என்றார்.

''பக்கவாத்தியங்கள்?'' என்றார் மகாராஜபுரம்.

''நாம் இருவருமே வாசித்து விடுகிறது'' என்று பாகவதர் முடிப்பதற்குள் மகாராஜபுரம் ''சரி'' என்றார்.

விளையாட்டுப் பேச்சு உண்மை நிகழ்ச்சியாயிற்று. காளியாக்குடி வைத்தியநாதையர் பாடினார்; செம்பை வயலின் இசைத்தார்; மகாராஜபுரம் மிருதங்கம் வாசித்தார். மூன்று மணி நேரம் கச்சேரி நடந்தது.

இளமையில் திருஷ்டிபோல் குரல் கட்டிப் பாட முடியாமற் போன போது செம்பை தம் தந்தையாரின் வயலினைக் கொண்டு அதில் தேர்ச்சி பெற்றார். மகாராஜபுரம் எப்படி மிருதங்கம் வாசித்தார்? அதிலும் ஓர் உண்மை உண்டு. அவர் கடவாத்திய வித்துவான் பழனி ரங்கப்பையரிடம் குருகுலவாசம் செய்தவர். மேதைகளுக்குக் கண் பார்த்ததைக் கை செய்யும் ஆற்றல் இயல்போடு ஒட்டியதாயிற்றே! -எல்லார்வி



பைபிள் பற்றி ராஜாஜி



பாளையங்கோட்டையிலிருந்து வெளிவரும் 'புத்துயிர்' என்ற கிறிஸ்துவப் பத்திரிகையின் 1956ம் வருடக் கிறிஸ்துமஸ் மலரைத் தற்செயலாக நான் படிக்க நேர்ந்தது. அதில், ''ரகுபதி ராகவ'' என்ற தலைப்பில் ராஜாஜி எழுதிய கட்டுரைத் தொடரை ஒழுங்காகப் படித்து வந்த இலங்கைவாழ் கிறிஸ்துவ நண்பர் ஒருவர் ராஜாஜிக்கு எழுதிய கடிதத்தையும், அதற்கு ராஜாஜி எழுதிய பதிலையும் ராஜாஜியின் அனுமதியுடன் வெளியிட்டிருக்கிறார்கள்.

நானும் ஒரு கிறிஸ்துவன். இந்த இரு கடிதங்களையும் படித்ததும் எனக்கு ராஜாஜியின் மேலுள்ள மதிப்பும் மரியாதையும் பன்மடங்காகப் பெருகிவிட்டன.

இவை பத்து வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்களாக இருந்தாலும், மீண்டும் ஒரு முறை 'கல்கி' கிறிஸ்துமஸ் இதழில் வெளியிடுவீர்கள் என்று நம்புகிறேன்.


வண்டிப்பெரியாறு, கேரளம் -என்.எஸ். நாதன்

கடிதம் : 'கல்கி'யில் தாங்கள் எழுதி வரும் 'ரகுபதி ராகவ' கட்டுரையை நான் படித்து வருகிறேன். நான் கிறிஸ்துவன் என்பதை நான் எழுதுமுன் என் பெயரைப் பார்த்ததுமே, தாங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். தாங்கள் எழுதும் கட்டுரை ஒவ்வொன்றும் உண்மையாகவே என் மனத்தைத் தட்டி எழுப்புகிறது. இப்பேர்ப்பட்ட உயரிய கருத்துக்கள் எங்கள் மத நூலாகிய பைபிளிலும் காண வில்லை. ஒரு வேளை அது என் அறியாமையோ என்னவோ தெரியவில்லை. பைபிளைக் காட்டிலும் எத்தனையோமடங்கு சிறந்த ஆத்ம போதனையாகவே நான் தங்கள் கட்டுரைகளை எண்ணுகிறேன். எங்கள் பைபிள் மற்ற மதத்தவர்களைக் குறை கூறுகிறது.

நான் எழுதியவற்றுள் ஏதேனும் தவறுதல் இருந்தால் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். கூடிய சீக்கிரம் தங்களுடைய அன்பான திருப்தியான பதிலை எதிர்பார்க்கிறேன்.

வணக்கம்.

பதில் : ''ஆசீர்வாதம். உம்முடைய கடிதம் என் உள்ளத்தைக் கரைத்தது. ஆண்டவன் உமக்கு அருள்வானாக. பைபிளில் காணப்படும் கருத்துக்களில் குறை கூற வேண்டாம். நன்றாகப் படித்துப் பார்ப்பீராயின் மிகச் சிறந்த கருத்துக்களைக் காண்பீர். பிறந்த குலத்தில் மதிப்பு இழக்கலாகாது. பைபிளையும் ஏசுநாதரையும் நான் மிகவும் மதித்து வருகிறேன் — காந்தியும் மதித்தார். சந்தோஷமாகவும், பக்தியுடனும் ஏசுநாதர் சரித்திரத்தை லூக், மாத்யூ, மார்க் முதலிய அத்தியாயங்களில் படிப்பீராக.''



காற்றினிலே வரும் கீதம்

அத்தியாயம் 22

காற்றில் வந்தது கானம்!

ரா. கணபதி

மீராவுக்கு இக உலக நினைவு வந்தபோது, ஆனந்தச் செய்தி கிடைத்தது.


கும்பராணாவிடமிருந்துதான் செய்தி வந்திருந்தது. சித்தோரில் கண்ணன் கோயில் பூர்த்தியாகி விட்டதாம். மீரா புறப்பட்டு வந்து விட்டால் கிருஷ்ண ஜயந்தியன்றே கும்பாபிஷேகம் செய்துவிடலாமாம்.

மீரா புறப்பட்டாள் — தன் கலியாணத்துக்காக!

அன்புத் தாத்தா ராவ்தூதாவுக்கு அவள் அவ்வளவு மகிழ்ச்சியுடன் புறப்பட்டதில் எல்லையில்லாத மனத் திருப்தி உண்டாயிற்று.

"தாத்தா, இனி என்னைப் பற்றி உங்களுக்குக் கவலையே வேண்டாம்! நான் எப்படி நடந்து கொண்டாலும் மகாராவல்ஜி அரவணைத்துக் கொண்டு போய் விடுவார்" என்றாள் மீரா.

பேதை மீரா வரப் போகும் சோதனைகளை அப்போது அறிந்திருக்கவில்லை. அந்தச்



சோதனைகளைக் கேட்டுத் துடிக்கும் துர்ப்பாக்கியம் ராவ்தூதாவுக்கும் இல்லை. நிறைந்த மனத்துடன் பேத்தி புக்ககம் கிளம்பிய சில நாட்களிலேயே அந்தப் பெரியாரின் வாழ்க்கைப் பயணமும் நிறைந்து விட்டது.

"கும்பாபிஷேகத்துக்கு அனைவரையும் அழைக்க வேண்டும்" என்று மீரா திரும்பத் திரும்ப ராணுவிடம் சொன்னாள்.

"சரி, அம்மாவையும், உதயாவையும் அவசியம் அழைத்து விடுவோம்" என்றான் கும்பாஜி.

"அனைவரையும் அழைக்க வேண்டும்" என்று மீளவும் அழுத்திச் சொன்னாள் மீரா.

"நீ என்ன சொல்கிறாய் மீரா?" என்று தெரியாதவன் போல வினவினான் ராணு.

"ஆமாம். உங்கள் மூத்த பிள்ளை உதயசிங்கை நான் பார்க்க வேண்டாமா?" என்று வினவினாள் மீரா.

"மீரா, என் இதயத்தில் மிக மிக நொந்து குமைந்து போயிருக்கும் ஒரு பாகத்தைத் தொட்டு விட்டாய். உதயனைப் பற்றி நான் பேசும்படிச் செய்யாதே. அவனைப் பற்றி நான் பேசுவதென்றால் அது ஏச்சாகத்தான் இருக்கும். அவனை நான் ஏசுவதற்கு அவள் விடமாட்டாள்" என்றான் கும்பராணு நாத்தழுதழுக்க.

'அவள்' என்று அவன் குறிப்பிட்டது கற்புக்கரசியான அவனது மூன்றாள் பட்டமகிஷியும், உதயனது அன்னையுமான கும்பனா தேவியைத்தான் என்பதை மீரா புரிந்து கொண்டாள்.

"நானே பூஜ்ய கும்பனாதேவியாகத்தான் பேசுகிறேன், ஸ்வாமி! என் ஜேஷ்ட புத்திரனைப் பார்க்க வேண்டும் என்கிறேன். நான் அவரைப் புதல்வராக ஸ்வீகாரம் செய்து கொள்வதற்குக் கணவன் சந்நிதியைக் காட்டிலும் வேறு இடம் உண்டா?" என்று பிடிவாதமாகப் பேசினாள் மீரா. கணவனிடம் மனைவி ஸ்தானத்தை மறுத்தவளே பிள்ளை வரம் கேட்டாள்!

"சரி, உன் விருப்பப்படியே செய்கிறேன். அப்புறம் சகலா [illegible] இருக்கிலே இருக்கிறது" என்றான் ராணு.

ஜன்மாஷ்டமி. சித்தோரில் கிரிதர நாகரனின் ஆலயத்துக்குக் கும்பாபிஷேகம் நிச்சயித்த புண்ணிய தினம் அது. மேவார் சாம்ராஜ்யம் என்றும் கண்டிராத வகையில் வைஷ்ணவ சாதுக்களும், நாமசங்கீர்த்தன கோஷ்டிகளும், யோகிகளும், வைராகிகளும் குழுமிச் சித்தோரை வைகுந்தமாக்கியிருந்தனர். சௌபாக்கிய தேவிக்கும் உதயாவுக்கும் அன்று எவ்வளவு எரிச்சல் மூண்டிருந்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை. எனினும் மீராவும் ராணாவும் மீண்டும் மீண்டும் அழைத்திருந்தபடியால் வேண்டா வெறுப்பாகக் குடமுழுக்கு விழாவுக்கு வந்திருந்தனர்.

அன்று இயற்கையே கண்ணனின் இருவுருவம் போலத் திகழ்ந்தது. எங்கும் ஜில்லென்று கனமான கருமேகங்கள் சூழ்ந்திருந்தன. அவற்றின் இடையே ஒளிர்ந்த வான வில்லோ கண்ணனின் குழலில் சூடிய மயிற் பீலியாகவே தோன்றியது. சின்னஞ்சிறு துளிகளாகத் தூற்றல் விழுந்து கொண்டிருந்தது. ரங்க மஹலின் விஸ்தாரமான புல்வெளியில் வெயில் படிவதும், நிலத்தோடு நிலமாகக் காற்று வீசுவதும், அவ்வப்போது இள வெயில் வந்து மேவுவதும், பசுமையிலேயே நூறு நூறு நயங்களைப் பகுத்துக் காட்டியது. நிலத்தின் நுண்ணிய செம்மண் ஆங்காங்கே நீரில் குழைய, மண்ணின் நிறத்தில் நீரும் குழைந்து சிவந்து சின்னஞ்சிறு வடிகால்களாக ஓடுவதைக் காண்கையில் மீராவின் உள்ளம் குப்பென்று சிலிர்த்தது. கண்ணனோடு கலக்கு மின்பத்துக்கு ஓர் உவமையைக் கண்டுவிட்டது அவளது கவியுள்ளம். மண் வண்ணத்தில் ஊறிய நீராக அவள் கண்ணனின் மணிவண்ணத்தில் ஊற வேண்டும். நீரில் ஊறிய மண்ணாகக் கண்ணன் அவளது கண்ணீரில் ஊறவேண்டும். கண்ணனின் நிறத்தில் தோய்ந்து விடுவது பற்றி மீரா பலப் பல பாடல்களில் குரல் கொடுக்கிறாள்.

செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந்தாம் கலந்தனவே

என்று இதையே சங்கத் தமிழும் சொல்லும்.

ஆலயத்தை நெருங்குகையில், அங்கு கோயில் கொள்ளுவதற்காகக் கிரிதரனே அடியெடுத்து வைத்து நடந்து வரும் ஒலி மீராவுக்கு ஸ்பஷ்டமாகக் கேட்டது. கும்பாபிஷேகம் செய்யும் வேத வித்துக்களின் பின்பு அவள் கும்ப ராணாவைத் தொடர்ந்து கோபுரத்துக்கு ஏறியபோது கண்ணன் வருவதைச் சிகரத்திலிருந்து கண்டு களிகொள்ளவும் விரும்பிப் பாடினாள்.

காதாரக் கேட்டேன் இந்நாள் - ஹரி
பாதாரவிந்த ஒலி
மண்டபம் ஏறிக் கண்டிடுவேன் என்
மன்னவன் நடையெழிலை

தாதுரம், மயிலும், அன்றிலும் அகவின
மாதுர்யம் குயிலும் பொழிந்தது
வானம் சொரிந்தது தண்பூஞ் சிதறல்
நாணம் விட்டாள் மின்னல் நங்கை
தரணியும் தரித்தாள் நவ நவப் பசுமை
வருணனின் அன்பு வண்ணத்தில்;
நாகரனே, மீரா மனம் பசுமை பெற
வேகமாய் வா மன்னவா!

சிகரத்துக்குக் கும்பாபிஷேகம் நடந்தது. ஆனந்த சிகரத்தில் மீராவின் இதயத்துக்கும் கும்பாபிஷேகம் நடந்தது. கும்பாபிஷேக நீர்த் துளிகளில் நனைந்து நின்ற கோபுரத்தைப் போன்ற ஒரு மகோன்னதத்துடனேயே மீராவும் கீழிறங்கி சந்நிதிக்கு வந்தாள்.

ஆம், கோபுரமாகவேதான் அவள் இருந்தாள். நேற்றுவரை மென்மை மட்டுமின்றி ஓரளவு நொய்ம்மையும், பலவீனமுமாக இருந்த மீரா இன்று கம்பீரத்தின் உருவாகி விட்டாள். வாடிய பயிர் தண்ணீர் பாய்ந்தவுடன் தலை நிமிர்த்தி நிற்பது போல் கும்பாபிஷேக நீர் பட்டவுடன் மீராவும் தலை நிமிர்ந்து விட்டாள்.

அன்று மீராவுடைய கிரிதரநாதன் பிரதிஷ்டையானது மட்டுமல்ல. கிரிதரன் காப்பாற்றிய பசுக்களின் தலைவியான காமதேனுவையும் அழகிய ஜயபுரிச் சலவைக் கல்லில் செதுக்கச் செய்து அதனையும் விக்கிரகத்தின் பக்கலில் பிரதிஷ்டை செய்வித்தான் கும்பராணா. 'கோ' இல்லாமல் 'கோவிந்தன்' ஏது? காமதேனு சேர்ந்த பின் கிரிதரனுக்கே ஒரு முழுமை கூடினாற்போல் இருந்தது. கிரிதரனைக் கம்பீரமாக முகம் தூக்கிப் பார்க்கும் காமதேனுத் தாயாகவே மீராவும் ராணாவின் கண்களுக்கு க்ஷணநேரம் தரிசனம் தந்தாள். உச்சி வானில் தங்கும் சூரியனைக் காண்பதற்காக முகம் நிமிர்த்திக் கன ஒய்யாரமாக நிற்கும் சூரியகாந்திப் பூப்போல நிற்கும் மீராவைக் கண்டு கும்பராணா எவ்வளவுக்கு அதிசயித்தானோ அவ்வளவுக்கு ஆனந்தமும் கொண்டான். கண்ணனைப் பேழையிலிருந்து வெளியே கொண்டு வரக் காரணமாயிருந்த ராய்மல்லோ அதைவிட அதிகமாக அகமகிழ்ந்தான். எல்லோரையும் விட சேடி ரத்தினாவுக்குத்தான் சொல்லிச் சாத்தியமில்லாத மகிழ்ச்சி.

ஆனால் இவர்கள் மகிழ்ச்சியை யெல்லாம் வற்ற வைப்பதுபோல் கோபுர மீரா நடக்கத் தொடங்கினாள்.

நடக்கத் தொடங்கினாளா? நடனமாடவே தொடங்கி விட்டாள். மேர்தாவில் அவள் பெற்றது 'ஸர்வதர்மான் பரித்யஜ்ய' உபதேசத்தை மட்டுமே. அதை இப்போது அவள் நடத்தியே காட்ட முற்பட்டு விட்டாள். பேடகத்தில் மறைந்து கிடந்த கண்ணனுக்கு நாடறிய அபிஷேக, அலங்கார, அர்ச்சனாதிகள் முடிந்தவுடன் மீரா ஸ்திரீ தருமத்தைத் துறந்து, பத்தினிப் பெண்ணின் தருமத்தைத் துறந்து, மகாராணியின் தருமத்தைத் துறந்து, சகல தருமங்களையும் துறந்து சந்நிதியிலேயே நாட்டியமாடினாள். குழந்தைப் பருவத்தில் க்ஷண காலம் லஜ்ஜை விட்டவள் இப்போது நிரந்தரமாக வெட்கத்தை விட்டு நிருத்தியம் செய்யத் தொடங்கினாள். கற்றுக்கொள்ளாமல் ஆடிய அந்த நடனத்தின் சத்தியத்தை நிலைநாட்டிப் பாட

வும் தொடங்கினாள் — குளக் கரையில் கண்டெடுத்த சிப்ளாக் கட்டையைத் தட்டிக் கொண்டு.

கிரிதரன் முன்பு நான்
திருநடம் புரிவேன்

காதலும் பிரேமையும் காற்றிலம்பாக்கி
சிதல நினைவினைச் சிலையாக உதிர்த்து (கி)

ஆடிப் பாடி என் ரசிக அன்பனை
ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்திடுவேன்
அடியார் கணத்தின் திரு அடிபணிந்து
அடைக்கலம் அவரை அநுதினம் கொள்வேன்

உலகம்கூறும் வெட்கம் உதறித் தள்ளினேன்
குலத்தின் கௌரவத்தைக் குப்பையில்
கொட்டினேன்
பிரியன் சயனத்துக்கும் புறப்பட்டுவிட்டேன்
ஹரியின் திருநிறத்தில் கரைந்து களித்திடுவேன்

மீராவின் ஆடலும் பாடலும் அனைவர் உள்ளத்தையுமே கில்லிட்டுப் போகச் செய்தன. 'ஆண்டிப் பரதேசிகளுக்கு முன்பு ராஜஸ்தான சக்கரவர்த்தினி நடனமாடுவதாவது? 'பிரியன் சயனத்துக்குப் புறப்பட்டு விட்டேன்' என்று பாடுவதாவது? என்ன பயங்கரம்! தேவி, வேண்டாம் இந்த பக்தி வெறி!' என்பது போல மீராவைக் கெஞ்சும் கண்களுடன் பார்த்தான் ரத்தின.

மீராவோ இந்த உலகக் கட்டுப்பாடுகளை, அவன் வார்த்தைப்படியே குப்பையில் கொட்டிவிட்டாள். தனக்காகப் பரிதாபப் படும் தாதியிடம் கானம் செய்யலானாள்:

நாணம் கொள்ளக் காரண முண்டோ?
நாதனுக்குரிய நன்னெறி சேர்ந்தபின் (நாண)

அவளுடைய நாதன் கும்பராணா என்றும், அவனிடம் ஒழுக வேண்டிய தருமத்தை அவள் மீறிவிட்டாள் என்று உலகம் நினைக்கும்போது, மீராவோ பரம திருப்தியாக நாதன் வழியில் நிற்பதாகப் பாடினாள்:


நாணம் கொள்ளக் காரண முண்டோ?
நாதனுக்குரிய நன்னெறி சேர்ந்தபின்(நாணம்)

அற்புத நாயகனின்
கற்பில் நிலைத்தபின்
வெளியுலகம் காணக்
களிநடம் புரிய (நாணம்)

மருமகனான அம்(பு)என்
நிருமல மனத்தை வை(டு)
உருவித் துளைத்தபடி
மறுபுறம் போந்தபின் (நாணம்)

குளவிக் கூடாய்ச் சுற்றம்
உளத்தைப் புண் செய்தாலும்
மானம் மரியாதையை
வானத்தில் விட்டபின் (நாணம்)

பாகிஸ்தான் தோன்றியபோது...




விடைகள்:

1. பம்பாய் விக்டோரியா டெர்மினஸ் ஸ்டேஷனுக்கும், குர்லா ஸ்டேஷனுக்குமிடையே. (1925)
2. மகாகவி பாரதியார்.
3. ராணுவத்தில் ஒரு கர்னலாக இருந்தார். விரைவில் பிரிகேடியர் ஆக உயர்த்தப்பட்டார்.
4. தியோடர் ரூஸ்வெல்ட்: 1906-ல். உட்ரோ வில்ஸன்: 1919-ல்.
5. 1911-ஆம் ஆண்டில். அலகாபாத்திலிருந்து கிளம்பிய முதல் தபால் விமானம் சுமார் ஆறு மைல் தூரத்தில் உள்ள நைனி ஜங்ஷனுக்குப் பறந்தது 18-1-1911 அன்று.
6. பதினெட்டாம் நூற்றாண்டில். (1796)
7. கிடையாது.
8. நேபாளம்.
9. நாகாலாந்து.

கிரிதரப் பிரானுக்கு
உரியவள் ஆனபின்
பரிகசிக்கும் உலகைச்
சிரித்து மன்னிப்பதன்றி (நாணம்)

'சுற்றத்தினர் என்ன செய்தாலும் என்வழி தான் நடப்பேன்' என்று ஓர் இளம் பெண் ஆணையிட்டால் யாருக்குத்தான் கோபம் வராது? சௌபாக்கிய தேவிக்குக் கேட்பானேன்? உதயாவோ வெட்க உணர்ச்சியில் குன்றிப் போய் விட்டாள். "இளமையில் கைம்மை அடைந்த நான் இன்றுவரை அலயிலிருந்தாலொழிய வெளி உலகுக்கு வருவதில்லை. முகத்திரையின்றி ஆடவர் முன் வருவதில்லை. மௌனமும் துளும்பி நிற்கும் மதனியோ பெண் குலமே வெட்கப் படும்படியல்லவா நடந்து கொண்டு விட்டாள்?" முன்பு காரணமில்லாமலே மீராவிடம் ஆத்திரம் கொண்ட உதயாவுக்கு இப்போது காரணத்துடனேயே ஆத்திரம் கொள்ள வாய்ப்புக் கிட்டிவிட்டது. தருமங்களை விடுகிற நிலையையும், மருமகனான அம்பின் போக்கையும் உதா அறிய முடியுமா?

உதா மட்டும்தானா? கும்பாபிஷேகம் செய்த கும்பராணாவுக்கே ஒரே குழப்பமாகி விட்டது. மணமான நாளிலிருந்து மீராவைப் புரிந்து கொள்ளாமலே தவித்தவன் அவன். நடுவே சிறிது காலம் புரிந்து கொண்டாற்

ருஷ்யப் பெருக்கல் விடை :



இரு எண்களைப் பெருக்க, அவ்வெண்களில் சிறியதை இடது கைப்புறத்திலும், பெரியதை வலது கைப்புறத்திலும் எழுதிக் கொள்ளவும். சிறிய எண்ணை இரண்டால் வகுத்து அதற்கு நேர் கீழே எழுதிக் கொள்ளவும் (வகுத்தலில் ½ மீதி வந்தால் அதை விட்டு விட்டு முழு எண்ணை மட்டும் எழுதவும்.) இப்படியே இரண்டிரண்டால் வகுத்துக் கீழே கீழே எழுதிக் கொள்ளவும். இப்படியே 1 என்ற எண் வரும்வரை வகுக்கவும்.

உதாரணம்:

பிறகு பெரிய எண்ணை இரண்டால் பெருக்கி அந்த எண்ணுக்குக் கீழே எழுதவும். இப்படியே பெருக்கிப் பெருக்கி, இடது கைப்புறத்தில் எத்தனை எண்கள் உள்ளனவோ அதற்கு நேராக வலது கைப்புறத்தில் எழுதிக் கொள்ளவும். கடைசியாக, இடது கைப்புறத்திலுள்ள எண்ணில் இரட்டைப் படை எண்களுக்கு நேராக உள்ள வலது கைப்புற எண்களை அடித்து விட்டு எஞ்சிய எண்களைக் கூட்டி எழுத. அதுவே பெருக்கற் பலனாகும்.

35 73
17 146
~~8~~ ~~292~~
~~4~~ ~~584~~
~~2~~ ~~1168~~
1 2336

2555

இந்த ருஷ்ய முறைப் பெருக்கலுக்கு ஆதாரம்: எல். ஹார்வுட் கிளார்க் எழுதிய நூல்; தகவல்: "வையபோழில் முருகண்ணு"

போல் ஆறுதல் பெற்றிருந்தாள். இப்போது புண்ணை மூடிய தழும்பு விண்டுபோய் மீண்டும் குருதி பெருகத் தொடங்கி விட்டது. 'அன்றொரு நாள் பரவெளியில் சயனம் செய்கின்ற காதலனைப் பற்றிப் பாடினாள். இன்று இத்தனை ஆயிரம் மக்களுக்கெதிரே அவனது சயனத்துக்குத் தானும் செல்வதாகப் பறை சாற்றுகிறாளே? அப்படியானால் இவள் மெய்யாகவே கிருஷ்ண பரமாத்மாவையா காதலிக்கிறாள்? இது என்ன சாத்தியமற்ற ஆசை?'

மீராவிடம் மற்றவர்களுக்கு வெறுப்பு மிகுந்தபோதிலும் கும்பனுக்குப் பரிதாபமே ஏற்பட்டது.

மீராவின் செயலினால் சொல்லொணா அவமானமும் அதிர்ச்சியும் அடைந்து அனைவருமே – பிரிய ராணாவும், அதிப் பிரிய ராய்மல்லும், அதைவிடப் பிரியமான ரத்தினாவும் கூட – கண்ணன் கோயிலிலிருந்து வெளியேறினர். பிழைப்புக்காக ஆண்டி வேஷம் போட்டவர்களும் அரச கோபம் ஏற்பட்டு விடுமோ என அஞ்சி வெளியேறினர். அர்ச்சகர்களும் கூட விரைவாகப் பூஜைகளை முடித்துக் கொண்டு சென்று விட்டனர். உண்மையான அடியார்கள் சிலர் மட்டுமே நீண்ட போது அங்கிருந்தனர். அவர்களும் மாலை மயங்கிய பின் அநுஷ்டானங்களுக்காகச் சென்று விட்டனர்.

மிச்சம் இருந்தது இரண்டே ஆத்மாக்கள் தான். ஒன்று மீரா; மற்றது தீமைகளுக்கு உருவமாகச் சொல்லப்பட்ட உதயன்.

கிருஷ்ணப் பிரேமையில் மீரா சுற்றுச் சூழலையும் காலத்தையும் மறந்திருந்தாள். தகர்த்த துர் எண்ணத்தின் வேகத்தில் உதயனும் கால தேச வர்த்தமானங்களை மறந்து மீராவுடனேயே தனித்து நின்றுவிட்டான்!

மீராவுக்குக் கிருஷ்ண போதை தெளிந்த போது நன்றாக இருள் சூழ்ந்து விட்டது. கும்பாபிஷேகமான அன்றைக்கே மாலை வழிபாடுகள் வைபவமாக நடைபெறாமல், அர்ச்சகர் அச்சத்துடன் ஒப்புக்கு பூஜை முடித்துப் போய்விட்டார்.

ஆனால் மீராவுக்கு பூஜை எதுவும் தேவையாயிருக்கவில்லை. சித்தோரில் வந்து அவளை மணப்பதாக வாக்குத் தந்திருந்த கிரிதரனே அவளுக்குத் தேவைப்பட்டான்.

கிரிதர மூர்த்தத்தை நோக்கி நடந்தாள்.

அவள் முன்னர் ஒரு நிழல் விழுந்தது.

உதயன் வந்து நின்றான் அவளுக்கு அண்மையில்.

"ஆகா, சுவாமி தரிசனத்துக்கு வந்தீர்களா? வாருங்கள்" என்று குழந்தை போல் கவடின்றி அழைத்தாள் மீரா.


உதயன் கடகடவென்று சிரித்தான்.

மீராவுக்கு இனம் விளங்கவில்லை.

"உனக்குத்தான் புத்தி கெட்டு விட்டதென்றால் எனக்குமா புத்தி கெட்டுவிட்டதென்று நினைத்தாய்? சுவாமி தரிசனம் செய்கிற வயதா இது?" என்று கேட்டுவிட்டு மீண்டும் சிரித்தான் உதயன். "எல்லோரும் ஒதுக்கி வைத்திருந்த என்னைக் கும்பாபிஷேகத்துக்கு வருந்தி வருந்தி அழைத்தாய் அல்லவா? அதற்குப் பரிசு தரவேண்டாமா?" என்று கூறி அவளை நெருங்கினான்.

மீராவை நெருங்கிய ஆபத்தை நினைத்தாலே, இன்று அவள் சரிதம் முடிந்து எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்பும் நம் நெஞ்சம் நடுங்குகிறது. தன்னந் தனியளான மீராவைக் கயவனிடமிருந்து காப்பாற்ற நமக்கே கையும் காலும் துடிக்கும். கைப்பிடித்த கணவனிடமும்கூடத் தன் தூய்மையைக் காத்துக்கொண்ட மீரா உதயனின் கொடூரத்தைக் கண்டு எப்படிப் பொறி கலங்கியிருப்பாள் என்று துடிப்போம்.

ஆனால் அதிசயத்திலும் அதிசயமாக மீராவின் பொறி கலங்கவில்லை. எல்லாத் தருமங்களையும் விட்டுவிட்ட அவளை இனி தரும காரியம், அதரும காரியம் எதுவுமே தொடாது. அதைத் தெளிந்து கொண்டு தெள்ளிய அறிவுடனே நின்றாள் மீரா. ஆனால் உலகின் தர்மாதர்ம வேகங்களுக்கு உட்பட்ட மற்ற ஆன்மாக்களை அவள் மறக்கவில்லை. உதயன் இழைக்கவிருக்கும் அதருமத்தால் தனக்கு ஊறு இல்லை என்றாலும், அவனுக்கே அதனால் ஏற்படக் கூடிய பாபத்தை அவள் உணர்ந்தாள். அந்தப் பாபத்துக்காகப் பரிதாபம் கொண்டாள். பாய வருகிற புலியையே அம்பு தைத்த புறாவாகக் கருதிப் பரிவுடன் பார்த்தாள்.



BENSONS2/JEN.49C TAM

ஜென்ஸோலின் பிளாஸ்டிக் வால் பினிஷ்

எண்ணெய் கலந்த டிஸ்டெம்பரைப் போல விலை குறைவு. இருந்தாலும் நன்றாக கழுவக்கூடிய, அதிக கவர்ச்சியான நிலைத்து நிற்கும் மெருகு.

இதற்கு முன் உண்மையான பிளாஸ்டிக் அலங்கார பினிஷ் எதுவும் இவ்வளவு குறைந்த விலைக்கு இவ்வளவு அதிகம் கிடைத்ததில்லை

இது மட்டுமல்ல. ஜென்ஸோலின் வால் பினிஷ் பிளாஸ்டிக் பொருள் உள்ளது — கவர்ச்சிகரமான, நிலைத்து நிற்கும் மெருகு தருகிறது. நன்றாக கழுவி சுத்தம் செய்யக்கூடியது; சுலபமாகப் பூசலாம். விரைவில் காய்கிறது. பிரஷ் சுவடே தெரியாது.

ஜென்ஸோலின் பிளாஸ்டிக் வால் பினிஷ் 15 அழகிய வண்ணங்களில் — பக்கத்து பெயிண்ட் கடையில் இப்போது கிடைக்கிறது. எளிய செலவுக்குத் தகுந்தபடி சவுகரியமான விலை. இந்தப் புரட்சிகரமான பிளாஸ்டிக் பினிஷைக் கொண்டு உங்கள் சுவர்களை அலங்கரியுங்கள் — வியப்பூட்டும் தரம், வியப்பூட்டும் விலை!

தயாரிப்பு:
ஜென்ஸன் & நிகல்ஸன் சிறப்பாக விற்பனையாகும் ரோபியாலாக் தயாரிப்பாளர்
ஜென்ஸன் & நிகல்ஸன் (இந்தியா) லிட். 7, அரண்மனைக்காரத் தெரு, சென்னை
7/219, அவனாசி ரோடு, கோயம்புத்தூர்

மீராவின் முகத்தையே மன விகாரத்துடன் பார்த்துக் கொண்டிருந்த உதயனுக்கு அதில் கமழத் தொடங்கிய பரிவின் பிரபையும் ஸ்தூலமாகத் தெரியலாயிற்று.

அந்தப் பிரபையில் மெல்ல மெல்ல அவனது உள்ளத்தில் சூழ்ந்திருந்த இருளும்கூட விலகத் தொடங்கியது.

ஆடாமல் அசையாமல் தன்னையே நோக்கும் மீராவின் திவ்விய வதனத்தையே கண்ணீர் மல்கப் பார்த்துக் கொண்டு நின்றான்.

மீராவின் வதனமா அது? எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் மண்ணோடு மண்ணாகி விட்ட அன்னை கும்பலா தேவியின் திருமுகம் அல்லவா அது?

இதயத்தை ஆயிரம் பாம்புகள் பிடுங்கினாற்போன்ற ஒரு நோவு உதயனுக்குள் பரவியது.

"அம்மா, அம்மா, நீ இறந்து விட்டாய் என்று தவறாக நினைத்து விட்டேன். உலகெலாம் தூற்றும் என்னைவிட்டு நீ மட்டும் இன்னும் போகவில்லையா? மகா பாதகம் செய்ய இருந்த என்னைக் காப்பாற்றினாயே அம்மா!" என்று அலறியபடி மீராவின் பாதத்தில் பணிந்தான் அவன்.

சாந்தமான குரலில் மீரா பேசினாள்: "எழுந்திருங்கள் யுவராஜ். இப்படியே முகத்தை எவ்வளவு நாழிகை பூமியில் புதைத்துக் கொண்டிருக்க முடியும்? வெட்கப்பட அவசியமே யில்லை. உங்கள் அன்னை கும்பலா தேவியாகவே நான் இருப்பேன் என்று மகாராணாவுக்கு வாக்குத் தந்தேன். வாக்கு நிறைவேறி விட்டது. அம்மாவுக்கும் பிள்ளைக்கும் இடையே வெட்கம் என்ன வைத்திருக்கிறது? வெட்கத்தை விடுவதற்கு நான்தான் ஒரு குரு இருக்கிறேனே!"

நிலத்திலிருந்து முகத்தை எடுக்காமலே பேசினான் உதயன். "நான் மீண்டும் உன் முகத்தைப் பார்க்க மாட்டேன். ஏனெனில் அப்படிப் பார்க்கும்போது எனக்கு மாதாவைத் தரிசனம் செய்கிற பாக்கியம் கிடைக்காமல் உன்னை மீராவாகவே பார்த்து விட்டால்....? சித்தி, என்னை மாற்ற நீ முயலாதே. என்னிடம் பரிவும் காட்டாதே. நான் தூர்த்தன். தூர்த்தனாகவே தான் என்றும் இருப்பேன்" என்று விசும்பியபடியே சரேலென் றெழுந்து ஓடி விட்டான் உதயன். அவனைப் பற்றி மீரா சிந்திக்கவே இடமின்றிக் காற்றிலே மிதந்து வந்தது வேணுகானம்! (தொடரும்)



பொழுது விடியும்!

ஆண் : செவத்த புள்ளே செக்கம்மா
சேதியைக் கொஞ்சம் கேளம்மா
வவுத்தில அடிப்பது போலம்மா
விலையும் ஏறிப் போச்சம்மா !

பெண் : விலையும் ஏறிப் போனதாலே
விறகும் வாங்க முடியல்லே
குலையும் காஞ்சு போகுது !
குழந்தை யெல்லாம் வாடுது !

ஆண் : காணி வரியை எடுத்தாலும்
கஷ்டம் குறைஞ்சு போயிடுமா?
ஏணி மேல மத்தவரி
ஏறிக் குந்தி வாட்டுதம்மா !

பெண் : கொடுக்கிற கூலி போதல்லே
கொஞ்சம் அதிலே சேமிப்பா ?
மிடுக்கா அதிலே கொஞ்சத்தைத்
தடுக்காக் கேட்குது அரசாங்கம்!

ஆண் : நிலத்திலே விளையும் நெல்லெல்லாம்
களத்திலே வந்து சேருமுன்னே
பலத்தைக் காட்டி அரசாங்கம்
பறிச்சுக் கிட்டுப் போயிடுதே !

பெண் : விளைச்ச எங்களை ரேஷன்கடை
வாசலில் நிக்க வச்சிட்டு
பளக்கமான மேடைப் பேச்சில்
விளக்கம் கூறுது அரசாங்கம்

ஆண் : போவது எல்லாம் போவட்டும்
பொழுது விடியும் நமக்காக
ஆவது எல்லாம் ஆவட்டும்
அவசரம் வேணும் செக்கம்மா !

— ஞான வைத்தியநாதன்





கலையும் காரிகையும்

நா. எதிராஜ்

காலை நேரம். மணி பத்து இருக்கும். வெய்யில் சூட்டுடன் பளிச்சிடத் தொடங்கியிருந்தது. நானும் என் பம்பாய் நண்பரும் தஞ்சைப் பெருவுடைப்பெருமானுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு, பிராகாரத்தில் அடுத்து நின்ற சுப்பிரமணிய சுவாமியின் கோயிலுக்குச் சென்றோம். ஆறுமுகப் பெருமானுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு, நடந்து வந்த களைப்புத் தீர வெளிச் சந்நிதியில் வந்து அமர்ந்தோம். எங்களுக்கு அருகில் கல் தூணில் சாய்ந்து கண் மூடிய வண்ணம் ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார்.

கையில் வாளும், கேடயமும் தாங்கிக் காவல் புரியும் துவாரபாலகர்களின் மெருகேறிய கருங்கல் உருவச் சிலைகளின் வேலைப்பாட்டில் எங்கள் மனம் இலயித்திருந்தசமயம் அருகில் இருந்த படிக்கட்டுகள் வழியாக வெள்ளைக்காரன் ஒருவன் மேலே வந்தான். அவனைத் தொடர்ந்து அரைகுறை ஆங்கிலத்தில் கோயிலைக் குறித்து விவரித்துக் கொண்டு வந்தான் ஒரு 'வழிகாட்டும் தொழிலாளி'. துவாரபாலகர்கள் சிலைகளின் வேலைப்பாட்டில் மனத்தைப் பறிகொடுத்த வெள்ளைக்காரன் சிலைகளைத் தொட்டுப் பார்த்து விட்டு, 'மார்வெலஸ் ஒர்க்' என்று புகழ்ந்தவாறு மூலவரை நோக்கி நகர்ந்தான். கந்தவேளைக் கண்டுவிட்டு, திரும்பிப் படிக்கட்டுகள் வழியாக வெள்ளைக்காரன் கீழே இறங்கினான். அவனைத் தொடர்ந்து வந்த அந்த 'வழிகாட்டும் தொழிலாளி' சொல்லிக்கொண்டே

சென்ற விஷயம் என்னைத் திடுக்கிட வைத்து விட்டது.

''எதையாவது இட்டுக்கட்டி, கதை ஜோடனை செய்து எப்படி நம்ப வைக்கிறார்கள் பார்த்தீர்களா?'' என்றேன் நான் நண்பரிடம்.

''ஏன் அந்த 'கைடு' கூறியதில் உண்மை இல்லையா?'' என்று நண்பர் கேட்டார்.

''எப்படி உண்மையாக இருக்க முடியும்? வெறும் கட்டுக்கதை. கல் எங்கேயாவது...'' நான் வார்த்தையை முடிப்பதற்குள் 'ஊம்!' என்ற நீண்ட பெருமூச்சுக் கேட்டது. அதைத் தொடர்ந்து, ''சார்! அப்படிச் சொல்லிவிடாதீர்கள்'' என்ற குரல் கணீரென்று கேட்டது. திரும்பிப் பார்த்தேன். தூணில் சாய்ந்து கொண்டிருந்த பெரியவரின் குரல்தான் அது. தம் கையிலிருந்த ஒரு தினசரிப் பத்திரிகையை என்னிடம் கொடுத்து, ''இதைப் படியுங்கள்'' என்று கூறி ஒரு பத்தியைக் குறிப்பிட்டார்.



'சைகோனில் அறுபது வயதுப் புத்த பிக்குணி ஆழமான ஆற்றில் இறங்கி நடக்க அது அவளுக்கு முழங்கால் அளவுக்கு இருந்தது. பலர் நேரில் கண்டு அதிசயித்தார்கள்' என்ற செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

நான் பெரியவரைப் பார்த்தேன்.

''இதைப் போல உலகில் அமானுஷ்ய நிகழ்ச்சிகள் எத்தனையோ நிகழத்தான் செய்கின்றன. பகுத்தறிவுக்கும், விஞ்ஞான அறிவுக்கும் அப்பாற்பட்ட அமானுஷ்யமான சக்தி உலகில் இயங்கி வருகிறது. அத்தகைய அமானுஷ்ய சக்தியின் காரணமாகக் கல் உயிர் பெற்றது. அந்த 'கைடு' கூறியது என்னவோ உண்மைதான். இந்த முருகர் கோயிலைப் பற்றிய கதையை என் தாத்தா சொல்லும் போது கேட்க வேண்டுமே, ஆஹா!...''

பெரியவர் உடலில் புல்லரித்தது. கண்களில் ஒளி கூடியது.

''அந்தக் கொண்டண்ணு ராஜு சாமான்ய ஸ்தபதியா? அபூர்வ, அதிசயப் பிறவி என்று தான் சொல்ல வேண்டும். அவர் கரம் பட்ட கல் உயிர் பெறும். காவியம் பாடும்!'' என்று பெரியவர் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். அவர் கண்களில் நீர் கோத்து நின்றது.

பெரியவர் கதையைத் தொடர்ந்தார்:

இன்றைக்குச் சரியாக முந்நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கார்த்திகை மாதத்தில் கார்த்திகை சோமவார தினத்தன்றுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. இப்போது நாம் உட்கார்ந்திருக்கிறோமே இந்தக் கோயில் அன்றுதான் புதிதாக நிர்மாணித்து முடிவடைந்திருந்தது. தஞ்சையின் ஆஸ்தான தலைமைச் சிற்பி கொண்டண்ணு மிகச் சுறுசுறுப்பாக அலைந்து கொண்டிருந்தான். கடைசி மெருகிடும் வேலையில் ஈடுபட்டிருந்த ஸ்தபதிகளைச் சீக்கிரம் முடிக்குமாறு அடிக்கு ஒரு தரம் கட்டளையிட்டுக் கொண்டிருந்தான். கோயிலைக் கட்டி முடிப்பதற்கு ராஜ குருவும் மந்திரியுமான கோவிந்த தீட்சிதர் அவகாசம் அளித்திருந்த மூன்று மண்டலங்களின் கடைசி நாள் அன்றோடு முடிவடைந்து விட்டது. அரசர் அன்று கோயிலைப் பார்ப்பதற்காக வரப் போவதாக இருந்தார்.

யானைகளும் குதிரைகளும் பூட்டிய ரதம் போன்று அமைந்த கோயிலில், யானைகளுக்கும், குதிரைகளுக்கும் கண்களைத் திறக்க வேண்டிய வேலை மட்டும் பாக்கி நின்றது. அந்த நுணுக்கமான வேலையைக் கொண்டண்ணுதான் செய்தாக வேண்டும்.

புத்தம் புதிதாக நிர்மாணித்துள்ள கோயிலை அன்று மன்னர் பார்வையிடப் போவதைக் காண மக்கள் உற்சாகத்தோடு கோயிலை நோக்கிச் சென்று, வடக்கு, தெற்குப் பிராகாரத்தில் குழுமி நின்றார்கள். வைத்த கண் வாங்காமல், கலை மெருகோடு விளங்கும் கோயிலைப் பார்த்து வியப்புக் கடலில் மூழ்கி நின்றார்கள். எல்லாச் சிற்பிகளும் தங்களுடைய வேலைகளை முடித்துக் கொண்டு விட்டார்கள். கொண்டண்ணு கோயிலை ஒரு முறை சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தான். ஒவ்வொரு வேலைப்பாடும் அவனுடைய மனத்துக்குப் பிடித்திருந்தது. தான் செதுக்கி உருவாக்கிய யானைகளையும் குதிரைகளையும் உற்றுப் பார்த்தான். ஆஹா! அவை கல்லால் ஆன யானைகளா, குதிரைகளா? இல்லை, இல்லவே இல்லை! காட்டிலே வளர்ந்து திரிந்த யானைகளும் குதிரைகளும்தான். கந்தவேளின் கற்கோட்டத்தை இழுத்துச் செல்ல எத்தனை அழகாக வந்து, அணிவகுத்து நிற்கின்றன' என்று எண்ணிக் கொண்டான். தன் படைப்பைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தான். அவன் முகத்திலே மகிழ்ச்சி பரவியது. கண்களில் ஒளி வீசியது. இஷ்ட தெய்வத்தை நினைத்துக் கொண்டு கொண்டண்ணு யானையின் எதிரே சென்று அமர்ந்தான். யானைக்குக் கண் திறப்பதற்காகச் சிற்றுளியால் மெல்லப் பொளியத் தொடங்கினான்.

மன்னர் ரகுநாத நாயக்கர், தம் மந்திரி கோவிந்த தீட்சிதருடன் கோயிலுக்கு விஜயம் செய்தார். புதிதாக எழுப்பியிருந்த கோயி லின் ஒவ்வொரு பகுதியாகப் பார்வை யிட்டார்கள்.

அரசரும், அமைச்சர் கோவிந்த தீட்சி தரும் தூரத்திலிருந்தவாறே கொண்டண் ணாவைக் கண் கொட்டாது பார்த்துக் கொண்டே நின்றார்கள். கண்ணும் கருத்து மாகப் பணி புரியும் கொண்டண்ணாவைக் கண்ட மன்னர் உள்ளத்திலே உணர்ச்சி வெள் ளம் பெருக்கெடுத்தது. திடீரென்று அமைச்ச ரிடம் மனம் திறந்து பேசத் தொடங்கினார்.

''குரு தேவா! தாங்கள் சமாதானம் சொல் வதும், நான் திருப்தி அடைவதும் வழக் மாகிவிட்டது. ஆனால்...'' மன்னர் வார்த் தையை முடிக்காமல் மந்திரியின் முகத்தை நோக்கினார்.

''மன்னா! இதுவரை சமாதானங்களை ஏற் றுக் கொண்டது ஒப்புக்காக இருக்கலாம். ஆனால் சிருஷ்டிக்குத் தியாகம் வித்து என்பதை மறுக்க முடியாதே!'' என்று பதில் தந்தார் அமைச்சர்.

''அதை நான் மறுக்கவில்லை. ஆனால் தியா கம் என்பது தன்னையே அழித்துக்கொள்வ தல்லவே!''

''தியாகத்துக்கு எல்லையே யில்லை. வித்து தன்னையே மாய்த்துக் கொண்டுதான் மரத்தை வளர்க்கிறது.''

''தாங்கள் சொல்வது பொருத்தமாக இருந்தாலும்...''

''மன்னா! உண்மை கசப்பாகத்தான் இருக் கும். கசப்பு ருசிக்க ஆரம்பித்துவிட்டால், ஏனைய ரசங்கள் அர்த்தமற்றதாகி விடும்.''

''தத்துவம் இருக்கட்டும் சுவாமி! நம்மீது கொண்டண்ணா வருத்தப்படாமல் இருக் கிறானா?'' என்று சஞ்சலத்தோடு கேட்டார் மன்னர்.

''வருத்தமா? நம்மிடம் அவனுக்கு என்ன வருத்தமிருக்கிறது? நாம் வீணாக மனத்தை அலட்டிக் கொள்வதில் அர்த்தமில்லை.''

''வேறெதற்குமில்லை, சுவாமி! பேராசைப் பட்டேனே, அதற்காகத்தான். என்றோ வானளாவ நிற்கும் இந்த ராஜேசுவரம் எங்கே? அதனருகில் அதன் அழகை மிஞ்ச வேண்டும் என்று எழுப்பிய இந்தக் கற்கோட்டம் எங்கே? தாங்கள் தூண்டிவிட்டு...'' மன்னர் முகத்தில் சஞ்சலத்தின் ரேகைகள் பளிச் சிட்டன.

''உன்னுடைய எத்தனையோ வெற்றிகர மான போர்களுக்குத் தூண்டுகோலாக இருந் தேன். ஆனால் இந்த முருகன் திருப்பணிக் காகத் தூண்டியதில்தான் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி'' என்றார் அமைச்சர்.

''எனக்குக்கூடத்தான் மகிழ்ச்சி. ஏன், நம் மதிப்புக்குரிய மக்களுக்கும் உற்சாகம் தான். கண்ணெதிரே எழுந்துள்ள அழகுக் கற்கோட்டத்தைக் கண்டு ஆனந்தமடை கிறார்கள் அவர்கள். ஆனால்...''

''ஆனால்?'' — வியப்போடு கேட்டார், மந்திரி.

''அந்த ஒருவன் கொண்டண்ணா இப்படி வருந்துவதற்காகவா விஜயநகரத்திலிருந்து அதிலும் மனைவியை இழந்த நிலையில் தன் பாலகனுடன் இங்கு வந்தான்'' என்று வருத்தத்துடன் வினவினார் மன்னர்.

''வந்தவன், வனப்பு மிக்க வனிதை, கலையரசி சசிகலாவை யல்லவா பெற்றிருக் கிறான். வருத்தப்பட என்ன இருக்கிறது?''

''கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாவிட் டால்...?''

''அப்படி ஒன்றும் இல்லை. விரைவில் அவள் மூலம் அவன் வம்ச ஒளி வீசப் போகிறது.''

''அப்படியென்றால், அவள் உண்டாகியிருக் கிறாளா?'' என்று மிகுந்த வியப்புடன் கேட்டார் அரசர்.

''ஆமாம். கொண்டண்ணாவின் சிருஷ்டி யில் எது முன்னால் பிரகாசிக்கப் போகிறது என்பதில்தான் போட்டி யிருந்தது.''

''ஐயோ! இந்த நிலையிலா அவர்களைப் பிரித்தீர்கள்?'' என்று பதறினார் மன்னர்.

''மன்னா! ஏன் பதறுகிறாய், உண்மை நிலை அறியாமல்?''

''சுவாமி! அவளைத் தங்கள் திருமாளிகை யில் சிறை வைத்திருக்கிறீர்கள். இது உண்மையில்லையா?''

''சிறை! ஆமாம். உண்மைதான். பிறவிக் கலைஞனை என் உள்ளத்திலும், அவளை என் வீட்டிலும் சிறை வைத்திருக்கிறேன்'' என் றார் அமைச்சர்.

''அப்படிச் சொன்னால்?''

''அரசே! உண்மைக்கு ஒளி உண்டு. ஒளி உள்ள படைப்புக்கு நிழல் உண்டு. ஒளி கண்ணைப் பறித்தாலும், நிழலே ஒதுங்கிச் செல்வது சுலபமாகலாம். உண்மையில் ஒளியை இழந்ததாகாது'' என்று விளக்கம் தந்தார் குருதேவர்.

''குருதேவா! மன்னிக்க வேண்டும். பதற் றத்தில்...''

''மன்னா! உன் பதற்றத்தைக் கண்டு நான் மெச்சுகிறேன். எத்தனை அரசர்கள் உன்னைப் போல ஓர் ஏழைச் சிற்பிக்காகவும், அவன் மனைவிக்காகவும் இரங்கிப் பச்சாத்தாபப்படு கிறார்கள்? இனியும் உன்னிடம் ஒளிக்க விரும்பவில்லை. கொண்டண்ணாவுக்கும் அவன் மனைவி சசிகலாவுக்கும் சிறு தகராறு. தன் மோகத்தில் அரசப் பணியை, கலைப் பணி யைக் கொண்டண்ணா மறந்து விடுகிறான் என்று கர்வப்பட்டாள் சசிகலா. இதில் ரோஷம் பிறந்து விட்டது அந்தக் கலைஞ னுக்கு'' என்றார் மந்திரி.

''வீரனுக்குக் காதலைப் புறக்கணிக்க ஒரே மாற்று போர்முனை. கலைஞனுக்குக் கலைப் பணிதான் போலும்!''

''அவ்வளவுதான். தன் சிருஷ்டி முடியும் வரை அவளைத் திரும்பிப் பார்ப்பதில்லை என்று விரட்டி விட்டான். அந்த அழகியை என் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டேன்'' என்று கூறினார் அமைச்சர்.

''இதுதான் உண்மையா? அப்படியென் றால் அரசப் பணிக்காகக் கணவன் மனைவியைப் பிரித்து விட்டார் 'ஐயன் சுவாமிகள்' என்று மக்கள் தூற்றுவது...''

''மன்னா! மனைவியை விரட்டிவிட்ட கொண்டண்ணா என்னிடம் வந்து அழுதான்.

இதோ—
வலியை
சிக்கனச் செலவில்
விரைவாக நீக்கவல்ல மாத்திரை

தலை நோவு, தொண்டைப் புண், ஜலதோஷம்
ஆகியவற்றைக் குணப்படுத்தக் கூடியது.

நிவாரின்



2 மாத்திரைகள் கொண்ட ஒரு பாக்கெட் விலை 10 பைசாதான்

உங்கள் அருகாமையிலுள்ள வியாபாரியிடமிருந்து
50 பாக்கெட்டுகள் கொண்ட ஒரு அட்டைப் பெட்டியை வாங்குங்கள்.



தயாரிப்பவர்கள்:
டேப்லெட்ஸ்
பிரைவேட் லிமிடெட்
எக்ஸ்பிரஸ் எஸ்டேட்ஸ்,
மதராஸ்-2

*சோல் செல்லிங்
ஏஜெண்டுகள்:*
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்
& பார்மக்யூடிகல்ஸ் லிமிடெட்
எக்ஸ்பிரஸ் எஸ்டேட்ஸ், மதராஸ்-2

EP-TI-I

''பாவம்! கர்ப்பிணியை விரட்டி விட்டேன். கல்லை வடித்தெடுக்கும் கல் தச்சனுக்குக் கல் மனம்தானே? உலகம் என்னை மன்னிக்குமா?'' என்று வருந்தினான்.

''பிறகு....?'' என்று ஆர்வத்துடன் கேட்டார் அரசர்.

''அரச சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள் குடும்ப நிலையில் வேலையில் பொறுப்பற்றிருப்பதைக் காண நான் பொறுக்க மாட்டேன். அதிலும் தலைமைச் சிற்பியே அவ்வாறு இருப்பதா?'' என்று எல்லோர் முன்னிலையிலும் இரைந்தேன். ஆகவே அந்தக் கோயில் திருப்பணி முடியும்வரையில் கொண்டண்ணு தன் மனைவியைப் பார்க்கக்கூடாது. சசிகலா என் வீட்டில் இருக்கட்டும் என்று கூறிவிட்டேன்.''

''அப்படியா?''

''அவன் மனைவியைக் காக்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டதில் மகிழ்ச்சியே அவனுக்கு.''

''குருதேவா! அரசியல் புகழுக்காக உயிரைத் துறந்த மந்திரிகளைப் பார்க்க முடியும். ஆனால் கலைப் பணிக்காகப் பழியைக் கூடச் சுமந்த தங்களைப் போன்ற தியாக சீலர்களைக் காண்பது அரிது'' என்றார் மன நிறைவு பெற்ற மன்னர்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது ஓர் அழகிய பெண் விரைந்து செல்வதைக் கண்டார்கள். அவளை அடையாளம் கண்டு கொண்ட அவர்கள் திடுக்கிட்டார்கள்.

''யாரது? சசிகலாவா?'' என்று வியப்புடன் கூறினார் மன்னர்.

''ஆமாம். அவளேதான்.'' இப்போது இங்கே எப்படி வந்தாள்? விந்தையிலும் விந்தையாக இருக்கிறதே! மந்திரிக்கு வியப்பில் ஒன்றும் புரியவில்லை. அவள் வீட்டிலிருந்து ஏன் வந்தாள்? இத்தனை நாட்களாக மனத்தை அடக்கி ஆண்டு வந்த அவளுக்கு இந்த ஒரு நாள் மட்டும் வெற்றி கொள்ள முடியவில்லையா? கணவனைக் காண ஓடி வந்து விட்டாளே! பேதைப் பெண்' என்று தமக்குத்தாமே சிந்தித்தவாறு நின்றார் ராஜகுரு.

கொண்டண்ணு யாளியின் கண்களைத் திறந்து முடித்தான். திடீரென்று கிழக்கே வானம் கருத்தது. கரு மேகங்கள் குமுறிக் கொண்டு மேலே வந்தன. தலைமைச் சிற்பி அடுத்துக் குதிரைக்குக் கண்ணைத் திறக்க முற்பட்டான். அதுசமயம் சசிகலா அவனிடம் வந்து சேர்ந்தாள். ஆசையையெல்லாம் ஒன்று திரட்டி அன்பு ததும்பக் கொண்டண்ணுவை அழைத்தாள்.

''அத்தான்! அத்தான்!''

மனைவி தன்னை ஆசையுடன் அழைத்தது அவன் காதுகளில் விழுந்தால்தானே!

''அத்தான்! ஊர் உலகம் எல்லாம் உங்கள் அற்புத சிருஷ்டியைப் பற்றித்தான் பேசுகிறது. இதைக் கேட்டு உள்ளம் குளிர்ந்த நான், இந்த அற்புதக் கலைக் கோயிலைக் காண வேண்டும் என்ற துடிப்பில் எவ்வளவு ஆசையுடன் ஓடிவந்திருக்கிறேன் தெரியுமா?'' என்று ஆர்வத்துடன் கூறினாள் சசிகலா.

மூளை விற்பனை!

பியர் ஹூடெக் என்று ஒரு பிரஞ்சுக்காரர் இருந்தார். அவருக்கு அபாரமான ஞாபக சக்தி உண்டு. அதனால் ஆராய்ச்சி நிலையங்கள் பல அவர் இறந்த பின் அவருடைய மூளையைச் சோதனை செய்ய முன்வந்தன. அவர் இலகுவில் யாருக்கும் சம்மதம் தரவில்லை.

அந்த நபருக்குப் பணத் தொல்லைகள் அதிகம். இதைத் தெரிந்து கொண்ட நியூயார்க் ஆராய்ச்சிச்சாலை என்றோ சமயம் பார்த்து அவரிடம் பொருள் கொடுத்து, அவருக்குப் பிறகு மூளையை ஆராய்ச்சி செய்யும் உரிமை பெற்றது.

ஒரு நாள் ஹூடெக் காலமானார்.

உடனே நியூயார்க் ஆராய்ச்சி சாலை பரிசோதனைக்கு அவர் மூளையைக் கேட்டது. ஆனால் என்ன வேடிக்கை தெரியுமா? மூளையை விற்றுப் பணம் சம்பாதிக்கும் வழியைத் தெரிந்து கொண்ட ஹூடெக் பணமுடை ஏற்பட்ட போதெல்லாம்—எழுபத்தைந்து தடவைகள்—அடுத்தவருக்குத் தெரியாமல் வெவ்வேறு ஆராய்ச்சி நிலையங்களுக்குத் தமது மூளையை விற்றிருந்தார். எழுபத்தைந்து நிலையங்களும் அவருடைய மூளைக்கு உரிமை கொண்டாடின!

ஆதாரம்: 'உமன்ஸ் வீக்லி'

தகவல்: ப. கந்தசாமி

கொண்டண்ணு திரும்பிப் பாராமல் இருக்கவே அவன் கவனத்தைக் கவரச் சசிகலா முயன்றாள்.

''மகிழ்ச்சியைத் தெரிவிக்க வந்த உங்கள் மனைவியின் முகம் பார்த்துப் பேசக்கூடாதா, அத்தான்?'' என்று கெஞ்சினாள்.

அவன் திரும்பிப் பார்க்கவில்லை.

''அத்தான்! இந்தக் குதிரையும் யானையும் உயிர் உள்ளவை போலவே தோன்றுகின்றன.''

கொண்டண்ணு கல்லாகவே இருந்தான். கரங்கள் என்னவோ வேலையில் மூழ்கியிருந்தன. குதிரையின் கண்களைத் திறந்து முடித்தான் கொண்டண்ணு.

குமுறிக் கொண்டிருந்த மேகத்தில் இடி போசை கேட்டது. மின்னல் பளிச்சிட்டு மறைந்தது. குழுமி நின்ற மக்களிடையே பரபரப்பு எழுந்தது.

''அதோ பாருங்கள் கோயில் நகருகிறது. கோயில் நகருகிறது!'' என்று ஆவேசம் வந்தவன் போலக் கூட்டத்திலிருந்த ஒருவன் கூச்சலிட்டான்.

''கோயிலாவது நகருவதாவது? உனக்கு என்ன பைத்தியமா?'' என்று அவனுக்கு அருகில் இருந்தவன் கேட்டான்.

''நன்றாகக் கவனித்துப் பாருங்கள். வடக்கு மதில் சுவரிலிருந்து நந்தியின் தலை முன்பு நன்றாகத் தெரிந்தது. இப்போது

தெரியவில்லை'' என்று முதலில் குரல் எழுப்பியவன் மீண்டும் கூச்சலிட்டான்.

''ஆமாம். இப்போது நந்தி மறைந்திருக்கிறது. கோயில் நகருகிறது! கோயில் நகருகிறது!'' என்று மற்றவனும் கூச்சலிட்டான்.

அது சமயம் கொண்டண்ணு மற்றொரு குதிரைக்கும் கண்ணைத் திறந்து முடித்தான். அடுத்துக் கடகடவென்று ஓசை கேட்டது. அது இடி முழக்கமா? இல்லை யென்றால் அது என்ன?

கொண்டண்ணுவுக்கு என்ன நடக்கிறது என்பதே தெரியவில்லை. தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலையை மறந்திருந்தான். அவனுக்கு ஒரே நினைப்பு. ஒரே சிந்தனை. கரங்கள் வேலை செய்தன. இன்னும் ஒரு யானைக்கும் ஒரு குதிரைக்கும் கண்கள் திறந்து விட்டால் போதும்! அவன் சாதனை முடிவு பெற்று விடும். கரங்கள் விரைந்து பணியாற்றின. இப்போது குதிரைக்குக் கண்கள் திறக்கப்பட்டு விட்டன.

''ஆஹா! வெற்றி! வெற்றி!'' என்று ஆவேசம் வந்தவன் போலக் கூச்சலிட்டான் கொண்டண்ணு. கட்டுக் கடங்காத மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தான்.

தூரத்திலிருந்த மக்களுக்கும் மன்னருக்கும் மந்திரிக்கும் எதுவும் விளங்காதது போலவே அவன் அருகில் நின்ற சசிகலாவுக்கும் எதுவும் புரியவில்லை. கிடுகிடு சத்தம் கேட்டு அவள் உள்ளம் நடுங்கியது. பயத்தில் கொண்டண்ணுவின் கரத்தைப் பற்றிக் கொண்டாள் சசிகலா.

''அத்தான்! இது என்ன சத்தம்! கோயில் நகருகிறதாமே என்ன இது?'' என்று பயந்த குரலில் கேட்டாள் சசிகலா.

கொண்டண்ணு திரும்பிப் பார்த்தான். மனைவியைக் கண்டதும் ''நாசமாய்ப் போக! இங்கே நிற்காதே போ'' என்று முறுமுறுத்தான்.

கொண்டண்ணு காட்டிய வெறுப்பால் சசிகலாவின் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த வருத்தம் கண்கள் வழியாக நீராகப் பெருகி ஓடத் தொடங்கியது. அவள் கண்ணீரோடு அங்கு நிற்பதைக் கண்ட கொண்டண்ணு வெறி பிடித்தவனானான்.

''கர்வம் பிடித்தவளே பார்! அன்று மமதைப் போதையில் என்னை ஏளனமாகப் பேசினாயே, பார்! உன் கணவனின் கைத் திறனைப் பார். மூன்றே மண்டலத்தில் கற்கோயில்; அதுவும் கலைக் கோயில். கல்லாலான குதிரைகளும், யானைகளும் உயிர் பெற்றுவிட்ட அதிசயத்தைப் பார். ஆஹா! ஹா!...ஹா!...'' என்று வெறிச் சிரிப்புச் சிரித்தான் கொண்டண்ணு.

''அத்தான்! கோயில் நகருவதை நிறுத்துங்கள், சீக்கிரம்!'' என்று சசிகலா தூண்டினாள்.

''என் கலைத் திறனை உலகம் காணவேண்டும் என்று கனவு கண்டாயே, அந்தக் கனவு நினைவாகும்போது நிறுத்துவதா? வெற்றி வாகை சூடும் நோக்கில் என்னைத் தடுக்காதே'' என்று கத்தினான் சிற்பி.

''நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்கள். என்னை மன்னித்து விடுங்கள். கோயில் நகருவதை மாத்திரம் நிறுத்தி விடுங்கள், அத்தான்!'' என்று கெஞ்சினாள் சசிகலா.

''உன் ஆணவம் அழிந்ததா? உன் மமதை மறைந்ததா! இன்னும் பார்! ரதக் கோயில் பறக்கப் போவதைப் பார்'' என்று கர்வத்துடன் கூறினான் சிற்பி.

''என்ன கோயில் பறக்கப் போகிறதா? ஐயோ! அத்தான்! வேண்டாம், வேண்டாம்'' என்று பதறினாள் சிற்பியின் மனைவி.

''இன்னும் கால் நாழிகை நேரத்துக்குள் பாக்கியுள்ள ஒரு கண்ணும் திறக்கப்பட்டு விடும். நீமட்டும் அருகில் வராதே. போய் விடு, போய்விடு'' என்று தொண்டை கிழியக் கத்தினான் அவன்.

நகரும் கோயில் பறக்கப் போகிறது என்ற செய்தி மக்களிடையே பரவி, பரபரப்பை உச்ச ஸ்தாயியிக்குக் கொண்டு சென்று விட்டது.

கொண்டண்ணு பாக்கியிருந்த யானையின் கண்ணைத் திறக்க முனைந்தான். அவன் செய்யும் வேலையைத் தடுக்கும் நோக்குடன் சசிகலா அவன் கரத்தைப் பற்றினாள்.

''என்னைத் தடுக்காதே! வெற்றியின் உச்சியில் நிற்கிறேன். போ அப்பால்! போய்விடு''

கொண்டண்ணு கர்வமே உருவெடுத்தவனாக நின்றான். எதையும் பாருட்படுத்தவில்லை. வெறி பிடித்த நிலையில் நின்ற அவனைச் சசிகலா, வெறித்துப் பார்த்தாள். பிறகு மெல்லக் கீழே இறங்கினாள்.

மன்னரும் மந்திரியும் அவளை அணுகினார்கள். அரசரைக் கண்டதும் சசிகலா 'ஓ'வென்று கதறிவிட்டாள்.

''மகாராஜா! கோயில் பறக்கப் போகிறதாம். அவருக்கு வெறி பிடித்து விட்டது. அவரைக் காப்பாற்றுங்கள்'' என்று அழுது கொண்டே கூறினாள் சசிகலா.

அரசரும் அமைச்சரும் யோசித்தார்கள்.

''அமைச்சரே, கோயிலும் அழியக்கூடாது. கொண்டண்ணுவுக்கும் எவ்வித நஷ்டமும் இருக்கக் கூடாது. அதற்கு வழி சொல்லுங்கள்'' என்று அமைச்சரிடம் யோசனை கேட்டார் மன்னர்.

''ஒரே ஒரு வழிதான் உண்டு. அதைச் சொல்ல மனமில்லை'' எனப் பதிலளித்தார் அமைச்சர்.

''என்ன வழி? சொல்லுங்கள், சீக்கிரம்'' என்று பதறினாள் சசிகலா. மன்னரும் அமைச்சரைத் துரிதப்படுத்தினார்.

''நாம் அதைச் செய்வது முறையாகாது. நாகரிகமும் ஆகாது.''

''என்னவென்பதை முதலில் சொல்லுங்கள் ஸ்வாமி'' — மன்னர் ஏக்கத்துடன் கேட்டார்.

''ஒரு கர்ப்பிணிப் பெண்ணை, அதிலும் தலைப் பிரசவக்காரியைப் பலி கொடுத்து விட்டால் நின்றுவிடும்.''

''ஐயோ! நரபலியா? வேண்டவே வேண்டாம். நாமே கொண்டண்ணுவிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு வழிக்குக் கொண்டு

வரலாம்'' என்று கூறிய மன்னர் கொண்டண்ணனிடம் விரைந்து சென்றார். அமைச்சரும், சசிகலாவும் மன்னரைத் தொடர்ந்தனர்.

''கொண்டண்ணா! கொண்டண்ணா! முதலில் கோயில் நகருவதை நிறுத்து'' என்று மன்னர் சிற்பியிடம் வேண்டிக் கொண்டார்.

''மன்னிக்கவேண்டும் மகாராஜா! உழைப்பைக் கொடுத்து, உயிரைக் கொடுத்து உருவாக்கிய இந்தக் கற்கோட்டத்தை நிறுத்துவதா?'' என்றான் சிற்பி விரக்தியுடன்.

''அப்படியென்றால்....?'' மன்னர் எதுவும் விளங்காத நிலையில் கேட்டார்.

''ஊரைப் பற்றிக் கவனித்தாயா?'' என்று அமைச்சர் வினவினார்.

''அதைப் பற்றி நினைக்க நேரமில்லை எனக்கு'' என்று பதிலளித்தான் சிற்பி.

''ஊர் மக்கள் பலர் மடிய வேண்டி வருமே என்று யோசித்தாயா கொண்டண்ணா! சுயநலத்தை மறந்து பொதுநலத்தைக் கவனி'' என்று அதட்டினார் அரசர்.

''மகாராஜா! வான விதானத்தை நோக்கிப் பறக்க முனையும் என் சிறகுகளையா வெட்டி எறியச் சொல்கிறீர்கள்? நான் உருவாக்கினேன்; உயிரும் ஊட்டுகிறேன். என்னையே அழிக்கச் சொல்கிறீர்களே!'' என்றான் கொண்டண்ணா ஏக்கத்துடன்.

''அவருடைய உன்னதப் படைப்பு அழியக் கூடாது. அது காலம் காலமாக நிலைத்து நிற்க வேண்டியது. எனக்கு வழி தோன்றி விட்டது; எனக்கு வழி தோன்றி விட்டது'' என்று கூறியவாறே வெறி பிடித்தவள் போல் சசிகலா அங்கிருந்து ஓடினாள்.

'சிற்பியின் மனைவிக்குப் பைத்தியம்பிடித்து விட்டதா என்ன? எங்கே ஓடுகிறாள்!' மூவரும் ஒன்றும் புரியாமல் சசிகலா ஓடுவதையே பார்த்துக் கொண்டு நின்றனர்.

வெறிச்சோடிய கண்களுடன் தன் மனைவி ஓடுவதைப் பார்த்துக் கொண்டே நின்றான் கொண்டண்ணா. அவன் பார்வையிலிருந்து மறைந்து விட்டாள் சசிகலா. அவள் எங்கேயோ ஓடி விட்டாள்.

''கோயில் நின்றுவிட்டது. கோயில் நின்று விட்டது, நின்றுவிட்டது'' என்ற பேரிரைச்சல் எங்கும் கேட்கத் தொடங்கியது. மக்களிடையே ஒருவிதப் பரபரப்பு ஏற்பட்டது. ''என்ன அங்கே? என்ன நடந்தது?'' என்று மன்னர் வினவினார்.

''ஐயோ! ஒரே ரத்த வெள்ளம்! ஒரு பெண் ரத்த வெள்ளத்தில் கிடக்கிறாள்'' என்ற கூக்குரல்கள் மூவருக்கும் பேரிடியே தலையில் விழுந்தது போலிருந்தது.

கொண்டண்ணாவின் உள்ளம் நடுங்கியது. உடல் நடுங்கியது. ''ஐயோ சசி! சசி!'' என்று கதறியவாறு விரைந்து ஓடினான், பரபரப்பு ஏற்பட்டிருந்த இடத்துக்கு. அமைச்சரும், மன்னரும் அவனைப் பின்தொடர்ந்து ஓடினர்.

சசிகலா அங்கே ரத்த வெள்ளத்தில் கிடந்தாள். தன் கணவனின் உன்னதப் படைப்பு காலம் காலமாக நின்று புகழைப் பரப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் தன்னையே பலியாகத் தந்துவிட்டாள். கோயில் நகருவது நின்றுவிட்டது என்று அறிந்த சசிகலா



இருபது வயதில் மனிதன் முகலாவண்யம் நிறைந்தவனாயிருப்பதற்குக் காரணம் இயற்கையின் அன்பளிப்பு ஆகும். முப்பது வயதில் அவன் முகத்தில் காணப்படும் மேடு பள்ளங்களுக்குக் காரணம் வாழ்க்கையில் அவன் கண்ட ஏற்றத்தாழ்வு ஆகும். ஐம்பதில் அவன் முகம் போகிற போக்குக்குக் காரணம் அவனேயாகும். அத்தோற்றம் அவன் தனது பல நல்ல, தீய செயல்களால் தானாகவே சம்பாதித்துக் கொண்டது; சுயார்ஜிதம்.

-- அஷ்டாவக்கிரர்

வின் முகத்திலே அலாதியான காந்தி வீசியது. அவளுடைய கண்களில் கவர்ச்சி மிக்க ஒளி சுடர் விட்டுப் பிரகாசித்தது. தன்னிடம் ஓடிவந்த கணவனைக் கண்ட அவள் வதனத்தில் மகிழ்ச்சி பூத்தது. ஆர்வத்துடன் கணவன் கரத்தைப் பற்றினாள் சசிகலா.

''ஐயோ சசி! அவசரப்பட்டு என்ன காரியம் செய்துவிட்டாய்?'' என்று அலறினான் கொண்டண்ணா.

சசிகலாவின் கண்களில் நீர் பெருகியது. ''அத்தான்! என்னை மன்னித்துவிடுங்கள்!'' அவளால் மேற்கொண்டு பேச முடியவில்லை. தொண்டையை அடைத்தது. மூச்சு வாங்கியது. சற்றைக்கெல்லாம் தலை சாய்ந்தது. கலைக்குத் தன் உயிரையே தந்துவிட்டுத் தியாகியாகி விட்டாள், சசிகலா.

''ஐயோ சசி! உயிர் பெற்ற கலைதான் சவமாகிவிட்டதே! நீயுமா சவமாகிவிட்டாய்!'' என்று சிற்பி துக்கத்தோடு அலறினான். அவனுடைய சோகக் குரல் எங்கும் கேட்டு எல்லோருடைய இதயத்திலும் எதிரொலித்தது. மனமுடைந்து, நடைப்பிணமாகிவிட்ட கொண்டண்ணா அதிக நாள் வாழவில்லை.

பெரியவர் கதையை முடித்தார். ஏற்கனவே பளபளத்துக் கொண்டிருந்த அவருடைய விழிகளில் கண்ணீர் ததும்பி நின்றது.

''நீங்கள் இக்கதையை நம்புகிறீர்களோ, இல்லையோ, இதை எங்கள் குடும்பத்தினர் காலம் காலமாக நம்பி வருகின்றனர். எங்கள் ரத்தத்துடன் ஊறிய கதை இது. கொண்டண்ணா ராஜுவின் ரத்தம் எங்கள் உடலில் ஓடுவதுதான் காரணம்'' என்றார் பெரியவர்.

''பரம்பரை ரத்தமா? தலைப் பிரசவக்காரி தான் இறந்து விட்டாளே!'' என்று கேட்டேன் நான்.

''கொண்டண்ணாவின் முதல் மனைவி மூலம் பிறந்த மகனுடைய வழித்தோன்றல் எங்களுடைய குடும்பம்'' என்றார் அந்தப் பெரியவர்.

சிவனருட் செல்வர்



திருமுருக கிருபானந்த வாரியார்

இவ்வாறாகத் திருநாவுக்கரசர் அருந் தமிழ் மாலை பல சாத்திப் பணி செய்து கொண்டிருந்தார். இவ்வற்புதங்களைக் கேட்ட பல்லவன் சமண சமயத்தின் இழுக்கினை யறிந்தான். திருவதிகை வந்து, திருநாவுக்கரசரைத் தொழுது, சமண சமயத்தை விடுத்துச் சைவ சமயம் சேர்ந்தான். பல இடர்களை விளைவித்த மகேந்திர பல்லவன் மலரடி வீழ்ந்து வணங்கியபோது, அருள் வடிவாகிய அடிகள் அவனை வெறுக்காது அணைக்கும் தாய் போல் அணைத்து அருள் புரிந்தார்.

பல்லவர்கோன் வந்து பணியக் கருணை செய்தார்
தொல்லைநெறி வாகீசர் சோமேசா - கொல்ல
இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று

என்பார் மாதவச் சிவஞான யோகிகள். கொடுமை பல புரிந்த பல்லவனுக்கும் கருணைத் திறந்தான் என்னே?

சமணர் கூற்று பொய்மை என்று மெய்மையுணர்ந்த மன்னன் பாடலிபுத்திரத்திலிருந்த பள்ளிகளையும், பாழிகளையும் இடித்துக் கொண்டு வந்து குணபரச்சுரம் என்ற திருக்கோயிலைப் புதுக்கினான்.

திருவதிகையிலிருந்த திருநாவுக்கரசர் பதிகள் தோறும் சென்று பரமனைப் பாடுதல் வேண்டும் என்று விரும்பிப் புறப்பட்டார். பெண்ணாகடம் என்னும் தலத்தை அடைந்தார். தூங்கானை மாடம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள செஞ்சடைக் கடவுளை அஞ்சலி செய்து, ''இறைவனே! புன்னெறியாம் அமண் சமயந் தொடக்குண்ட இந்த உடம்புடன் உயிர் வாழ மாட்டேன். நான் உயிர் வாழ உமது இலச்சினையான சூலத்தையும் இடபத்தையும் பொறித்து அருள் புரிவீர்'' என்று வேண்டிச் செந்தமிழ்ப் பதிகம் பாடியருளினார்.

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற்கு இச்சையுண்டேல்
இருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலம் என்மேற்
பொறி மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க் கொழுந்தே

சிவபெருமான் திருவருளால் ஒரு சிவபூதம் ஒருவரும் அறியாமல் வந்து, திருநாவுக்கரசருடைய திருத் தோள்களில் சூல முத்திரையும், இடப முத்திரையும் இட்டு அகன்றது. அதனைக் கண்ட நாவுக்கரசர் விண்மாரி யென்னக் கண்மாரி பொழிந்தார். அரனாரது அருள் திறத்தை எண்ணி விம்மிதமுற்றார். ''உய்வு பெற்றேன்'' என்று மகிழ்ந்தார்.

விண்ணவர் பரவும் கண்ணுதலைத் தொழுத திருநாவுக்கரசர் அங்கிருந்து புறப்பட்டு, ஆனாத சீர்த் தில்லை யம்பலத்தே ஆடுகின்ற அருட்கூட்டப் பெருமானை வணங்கி, ஊனும் உயிராலும் பயன் கொள்ள நினைந்து தில்லைச் சிற்றம்பலத்தின் அருகில் வந்தார். தில்லையின் எல்லை வந்தவுடன், மண்மிசை வீழ்ந்து வணங்கி எழுந்து, மயில்கள் களிநடம் புரியும் சோலை சூழ்ந்த தாமரை வாவிகளும், செந்நெல் வயல்களும் நிறைந்த மருதநில வழியே வந்தார். ''இங்கு வாருங்கள்; பிறவிப் பிணி தீருங்கள்'' என்று குயில் கூவும் திருநந்தவனத்தைக் கண்டார். நடேசப் பெருமானுக்கு மலர்களை உதவும் அப் பூங்காவைக் கண்டு பணிந்தார். கிளிகளும் நாகணவாய்ப் பறவைகளும்,

''ஹர ஹர'' என்று ஒலித்தன. மறை யொலி முழங்கும் தில்லையம்பதியின் மேலைக் கோபுர வாயிலின் வழியாகத் திருக்கோயிலுக்குள் நுழைந்தார். திரு மாளிகை வீதியை வலம் வந்து, பொன்னம்பலத்தின் முன் சென்று எல்லையில்லாத அன்புடன் சபாநாதரைத் தொழுதார்.

கையுந் தலைமிசை புனைஅஞ் சலியன ;
 கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன ; கரணங் களுமுடன்
 உருகும் பரிவின, பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்
 மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடும்அவர்
 ஆர்வம் பெருகுதல் அளவின்றால்

உடல் புளகமுற, கண்ணீர் மல்க, பல முறை பணிந்து எழுந்தார். ''என்று வந்தாய்'' என்ற குறிப்புடன் நடிக்கும் கூத்தப் பெருமானது திருவருளை வியந்து பாடினார்.

ஒன்றியிருந்து நினைமின்கள்
 உந்தமக் கூனமில்லை
கன்றிய காலனைக் காலால்
 கடிந்தான் அடியவர்க்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுள்
 சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தா யென்னும்
 எம்பெருமான்றன் திருக்குறிப்பே

திருக்கோயிலின் திருமுன்றிலும் திரு வீதிகளிலும் திருப்பணிகள் செய்து கும்பிடும் தொழிலரானார் திருநாவுக் கரசர். சில காலம் தில்லையுள் தங்கி யிருந்த அவருக்கு அன்பினால் கண்ணீர் பெருக, அது மார்பில் வழிந்து திரு நீற்று வண்டல் பொருந்தியது.

தில்லையி லிருந்து திருக்கழிப்பாலை சென்ற பின்பும் சிதம்பரத்தையே நினைத்து,

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனை
நினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனே?

என்று பாடிக் கொண்டே மீண்டும் தில்லையம்பதி வந்து அம்பலவாணரை அன்புடன் தொழுதார். ''அரியானை'' என்று தொடங்கும் அடியவர் பெரிய திருத்தாண்டகத்தைப் பாடியருளினார்.





அரியானை அந்தணர்தஞ் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே

இறைவரது அருள் பெருகப் பதிகம் பாடித் திருத் தொண்டுகள் புரிந்து வந்தார் நாவுக்கரசர். அங்கிருந்து அடியவர்கள், சீகாழியில் சிவபெருமான் திருவருளால் உமா தேவியார் திருஞான சம்பந்தருக்குச் சிவஞானங் குழைத்துத் திருமுலைப் பால் ஊட்டியதும், அதனை உண்ட திருஞான சம்பந்தர் ''இவன் எம்மான்'' என்று சிவபெருமானைச் சுட்டிக் காட்டி, ஏழிசை வண்டமிழ்ப் பாமாலை பாடியதும் பற்றிக் கூறினர். அதனைக் கேட்ட நாவுக்கரசரின் உள்ளத்தில் பெரு வியப்புத் தோன்றியது. திருஞான சம்பந்தப் பிள்ளையாரது திருவடியை வணங்க வேண்டும் என்று மிக விரும்பி, கனக சபாபதியைப் பணிந்து பிரியாவிடை பெற்றார். பிறவிப் பிணியைத் தீர்க்கும் திருவீதியில் திருமேனி பொருந்தப் புரண்டு வலம் வந்து எல்லையை வணங்கிப் புறப்பட்டுச் சீகாழியம்பதிக்கு வந்தருளினார்.

வேதநாயகர் சூலை வலி தந்து ஆட்கொண்டருளிய ஆளுடைய அரசர் எழுந்தருளி வருவதைத் திருஞான சம்பந்தர் கேட்டருளினார். அவரைக் காண வேண்டும் என்ற பெரு விருப்பினால் திருத் தொண்டர் குழாம் சூழ எழுந்தருளினார். பாலுக்காக அழுது உலகை வாழ்வித்தவர் தொழுது வருவதைக் கண்ட திருநாவுக்கரசர் அடியார்களிடையே சென்று அளவிலாக் காதலுடன் சம்பந்தருடைய சரணமலர் பணிந்தார். ஞானசம்பந்தர் தம் திருக் கரங்களால் நாவுக்கரசரின் திருக்கரங்களைப் பற்றிப் பணிந்து, என் தந்தை யாரே என்று பொருள் படும்படி ''அப்பரே!'' என்று அழைத்தார்.

''அடியேன்'' என்றார் திருநாவுக்கரசர். இரு குருநாதர்களும் கலந்த காட்சியைப் பிரபு சேக்கிழாரை யன்றி யாவரே கூறவல்லார்?

அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்பு செறி கடலுமா மெனவும்; ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும்; புவனம் உய்ய
இருட்கடுவுண் டவர்அருளும் உலகம் எல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவுங் கூடித்
தெருட்கலைஞா னக்கன்றும் அரசுஞ் சென்று
செஞ்சடைவா ணவர்கோயில் சேர்ந்தார் அன்றே

''திருஞான சம்பந்தரின் திருவடி வணங்கும் பேறு பெற்றேன்'' என்று மகிழ்ந்தார் திருநாவுக்கரசர். ''திருநாவுக்கரசரை வணங்கும் பேறு பெற்றேன்'' என்று உவந்தார் திருஞான சம்பந்தர்.

திருஞானச் செல்வர்கள் திருக் கோபுரத்தைத் தொழுது, உள்ளே சென்று விமானத்தை வலம் வந்தனர். ஞானசம்பந்தர் அப்பரை நோக்கி, ''உங்கள் தம்பிரானைச் செந்தமிழால் பாடுவீராக'' என்று கூறியருளினார். ''பார் கொண்டு மூடி'' என்ற திருப் பதிகம் பாடியருளினார் அப்பரடிகள். அதனைக் கேட்டு இன்ப வடிவானார் சம்பந்தர். அவர்கள் அங்கிருந்து ஆளுடைய பிள்ளையாரின் திருமடத்துக்கு எழுந்தருளித் திருவமுது செய்தனர். அன்று போல் என்றும் தூய நட்பு செழித்தோங்க அப்பர் சம்பந்தருடன் பல நாட்கள் இருந்தார்.

வாகீசப் பெருந்தகையார்க்குச் சோழ வளநாட்டுத் திருத்தலங்களை வணங்க வேண்டும் என்று விருப்பம் ஏற்பட்டது. ஆளுடைய பிள்ளையாரிடம் தமது விருப்பத்தைக் கூறினர். ''நாமும் உங்களோடு உடன் வருவோம்'' என்று கூறினார் திருஞானசம்பந்தப் பிள்ளையார். அப்பருடன் சென்ற திருஞான சம்பந்தர் திருக்கோலக்கா என்னும் திருத் தலத்தைத் தரிசனம் செய்வித்துத் திரும்பினார். ஞானசம்பந்தரிடம் விடை பெற்றுக் கொண்ட அப்பரடிகள் கருப்பறியலூர், திருப்புன்கூர், நீடூர், திருக்குறுக்கை, திருநின்றியூர், திருநனிபள்ளி,

திருச்செம்பொன்பள்ளி, மாயூரம், திருத்துருத்தி, வேள்விகுடி, எதிர்கொள்பாடி, திருக்கோடிக்கா, திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேசுரம், பழையாறை முதலிய திருத்தலங்களை வணங்கிக்கொண்டு திருச்சத்திமுற்றம் வந்தார்.

உமாதேவியார் பூசித்த புனிதமான தலமாகிய சத்தி முற்றத்தில் எழுந்தருளியுள்ள சிவக்கொழுந்தை உள்ளங் குழைந்து, ''எம்பெருமானே! கூற்றுவன் வந்து என் உயிரைப் பற்றுமுன் உமது அழகிய அடிமலரை அடியேன் சென்னி மீது வைத்தருள வேண்டும்'' என்று உருகினார் அப்பர்.

கோவாய் முடுகி யடுதிறல்
கூற்றம் குமைப்ப தன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற்
பொறித்துவை போகவிடில்
மூவாமுழுப்பழி மூடுங்கண்டாய்
முழங்குந் தழற்கைத்
தேவா திருச்சத்திமுற்றத்
துறையும் சிவக்கொழுந்தே.

கருணைக் கடலாகிய எம்பெருமான் ''நல்லூருக்கு வா'' என்று பணித்தருளினார். அதனைக் கேட்ட நாவரசர் இன்பக் கடலில் மூழ்கிக் கரை காணாமல் தத்தளித்துத் திருநல்லூர் சென்று கோயிலுட் புகுந்து மனம் உருகிப் பரமனுக்குப் பாமாலை சாத்தினார். ''உனது நினைப்பதனை முடிக்கின்றோம்'' என்று கூறிச் சிவபெருமான அவரது சென்னி மிசை பாத மலரைச் சூட்டியருளினார்.

தரித்திரனுக்கு ஒழியாத தனம் கிடைத்தது போல் அப்பரடிகள் திருவருளை நினைந்து உருகி, விழுந்து, எழுந்து நிறைந்து, மலர்ந்து, திருப்பதிகம் பாடினார்.

நினைந்துருகும் அடியாரை
நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள்
நீங்கவைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப்
போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார்
சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத்
தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து
மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென்
தலைமேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானார்
நல்லவாறே.

மேலும் பல பதிகள் சென்று தரிசித்துத் திங்களூர் அருகில் வந்து கொண்டிருந்தார் அப்பர்.

34. அன்பின் சிகரம் அப்பூதி

திங்களைப் போல் குளிர்ந்த சோலைகளுக்கு இடையில் விளங்கிய அந்தத் திருப்பதியில் அந்தணர் மரபில் அவதரித்தவர் அப்பூதியடிகள். திருநாவுக்கரசரின் பெருமையைக் கேள்விப்பட்ட அவர் அவரது அடிமலரில் அளவற்ற அன்பு பூண்டார். அவரது திருநாமத்தை எப்போதும் உச்சரித்துக் கொண்டிருந்தார். வீட்டிலுள்ள அளக்கும் கருவிகள் நிறுக்கும் கருவிகள், குழந்தைகள், பசுக்கள் முதலியவைகட்கெல்லாம் திருநாவுக்கரசு நாயனாரின் திருப்பெயரையே சூட்டி அழைத்தார். சாலை, குளம், கிணறு, தண்ணீர்ப் பந்தர் முதலிய எல்லாத் தருமங்களையும் 'திருநாவுக்கரசு' என்ற திருப்பெயரால் அமைத்தார்.

அவ்வழியே சென்ற திருநாவுக்கரசர் தம் பெயரில் உள்ள தண்ணீர்ப் பந்தரைக் கண்டு பெரும் அதிசயம் கொண்டார். அங்குள்ளோரை அணுகி, ''இது யாருடைய தண்ணீர்ப் பந்தர்?'' என்று வினவினார். ''இது அப்பூதியடிகளுடையது; அவர் இப்போதுதான் திருமனை சென்றார்'' என்று அங்கிருந்தோர் கூறினர். அதனைக் கேட்ட வாகீசர், அப்பூதியடிகளது திருமனையை அடைந்தார். அடியவர் ஒருவர் வந்திருக்கிறார் என்பதை அறிந்த அப்பூதியடிகள் வெளியே வந்து அவரைத் தொழுதார். ''ஐயா! தாங்கள் வைத்த அறச்சாலை முதலியவைகட்கு உமது பேர் எழுதாமல் வேறு ஒரு பேர் எழுதிய காரணம் யாது?'' என்று அவரிடம் வினவினார் அப்பரடிகள். ''சிவபெருமானது திருவருள் முழுவதும் பெற்ற எமது திருநாவுக்கரசரது பேர் வேறு பேரோ? நன்று; நன்று உங்கள் பேச்சு! அவரை அறியாதவரும் தரணியில் உளரோ? நீர் யார்?'' என்று சிறிது கோபத்துடன் கேட்டார் அப்பூதியடிகள். ''அன்பரே! இறைவரால் சூலை வலி தந்து தடுத்தாட்கொள்ளப்பெற்ற உணர்விலாச் சிறியேன் அடியேன்'' என்று கூறினார் திருநாவுக்கரசர். அதனைக் கேட்ட அப்பூதியடிகள் அளவிலா ஆனந்த மடைந்தார். மனைவி மக்கள் முதலியோரை அழைத்து அப்பரடிகளின் அடிமலரில் வணங்கச் செய்தார். அப்பரடிகளை உள்ளே அழைத்துச் சென்று உணவு கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார். அப்பரடிகளும் அதற்கிசைந்தார்.

(தொடரும்)

வட்ட மேஜை

- ☐ மூன்றல்ல, நான்கு
- ☐ நாமும் சென்றோம்
- ☐ சத்திய யுகம்
- ☐ 'வெள்ளிக் காலம்' வேண்டும்!

'நோட்டு, குட்டு' என்ற ஆனில் பகுதியில் 1966ம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள புதிய ஒரு ரூபாய் நோட்டில் 'பாரத்' என்ற பதம் மூன்று இடங்களில் இருப்பதாகப் பரணி குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் உண்மையில் நான்கு இடங்களில் வருகிறது. சந்தேகம் இருந்தால் கையெழுத்துப் பகுதிக்கு நேராக வெளிச்சத்தில் பாருங்கள். மேலிருந்து கீழாக வாட்டர் மார்க்கில் 'பாரத்' என்ற இந்தி எழுத்துக்களைக் காணலாம்.

கடப்பேரி,
4-12-66 — பத்மா சந்திரன்



ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி அவர்கள் ஐ. நா. சபையிலும் மற்றும் பல நகரங்களிலும் நடத்திய கச்சேரிகளின் இன்னிசை மேற்கத்திய நகரங்களில் எந்த அளவு வரவேற்பையும், அம்மக்களின் ஆரவாரத்தையும் பெற்றது என்பதைக் 'கல்கி'யின் கடந்த 8 இதழ்களில் வெளிவந்துள்ள கடிதங்கள் நன்கு புலப்படுத்துகின்றன. அந்த நாட்டு மக்களும் இந்திய மக்களுக்குச் சளைத்தவர்களல்ல, கர்நாடக சங்கீதத்தை அநுபவிப்பதில் என்பதை ஜேம்ஸ் ஏ. ரூபின் தமது கடிதங்களில் நன்கு விவரித்துள்ளார். இவையும் மற்றும் ராபர்ட் ஷெல்டன் முதலிய ரசிகர்களின் கட்டுரைகளும் எம். எஸ். அவர்களுடன் நம்மையும் அந்த நகரங்களுக்கு அழைத்துச் சென்று நாமும் அந்தக் கச்சேரிகளை நேரில் கேட்கிறோம் என்ற அளவுக்கு ரொம்ப உயர் தரமாக இருந்தன.

மைசூர்
9-12-66 — சேதுராமன்

சத்திய யுகம் என்ற திரு எம். எஸ். கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதிய கதையில் ''வீரபத்திரன் தாடி நரைத்த வயோதிகர் என்று நினைத்துவிட வேண்டாம். வயது இருபத்தி மூன்று, இருபத்தி நான்குதான்'' என்கிறார் கதாசிரியர். பிறகு இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது தமது கதாநாயகன் அஸ்ஸாம் எல்லையில் வேலை பார்த்து வந்ததாகவும் எழுதியிருக்கிறார். இது எப்படிச் சாத்தியமாகும்? இரண்டாம் உலக யுத்தத்தின் சமயம், அவரது கதாநாயகர் பிறந்திருந்தாலுமே அப்படியே பிறந்த மேனியாகவா சண்டைக்குச் சென்றார்?

பம்பாய்-78
28-11-66 — எஸ். பி. சாரதி

''சத்திய யுகம்'' என்ற கதையைப் படித்தேன். அருமையான கதை. ஆசிரியர் தம் கருத்தில் இந்தக் கதையை இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடனேயே நிகழ்ந்ததாக வைத்துப் புனைந்திருப்பாராயின் கதையில் தவறு ஏதும் கூறுவதற்கில்லை.

ஜாகராகண்ட்
மத்திய பிரதேசம்
30-11-66 — லலிதா பரமேசுவரன்


1891ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் தேதி தொ. சி. இராமச்சந்திரர் என்பவரால் சென்னையிலிருந்து வெளியிடப் பெற்ற ''இந்து பாக சாஸ்திரம்'' என்ற சமையல் கலைப் புத்தகத்தை அண்மையில் படித்துப் பார்க்க நேர்ந்தது. அதில் இரண்டு பேர் முதல் பத்துப் பேர்கள் வரை உள்ள குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு மாதத்துக்கு ஆகும் ஆகாரச் செலவு பற்றிய அட்டவணைப் பட்டியல் தரப்பட்டிருக்கிறது. பத்துப்பேர்கள் உள்ள குடும்பத்துக்கு மொத்த மாதச் செலவு ரூ. 40-12-0 என்றும், இரண்டு பேர் உள்ள குடும்பத்துக்கு ரூ. 15 என்றும் படித்துப் பார்க்கும் போது பிரமிப்பு ஏற்படுகிறது. பன்னிரண்டரை ரூபாய்க்கு நூறு படி அருமையான அரிசி கிடைத்த காலம் அது! அப்படிப்பட்டதொரு பொற்காலம் வராவிடினும் ஒரு 'வெள்ளிக் கால'மாவது வர வழியுண்டா என்று வாக்குச் சீட்டுப் படைத்த ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டிய தருணம் இது.

நெய்வேலி — 3
10-12-66 — எஸ். சுந்தரேசன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

உங்கள் கேசம் உதிருகிறதா?

இம் மாதிரி அபாயக் குறிகளை அசட்டை செய்யாதீர்கள்:



★ கேசம் குறைதல்

★ மெழுக்கேன்ற, துவண்ட ரோமம



இளமையில் வழுக்கை
இந் நிலை ஏற்படுவதைப் பெரும்பாலும்
தடுத்திருக்க முடியும்.

கேசம் குறைதல், ரோம உதிர்வு ஆகியவை உங்களைப் பாதித்தால் இன்றே ப்யூர் சில்விக்ரின் உபயோகிக்கத் தொடங்குங்கள். உங்கள் ரோமத்திற்கு ஆக்கம் தரும் பதினெட்டு அமினோ-அமிலங்கள் யாவும் அடர்வான நிலையிலே செறிந்துள்ளது ப்யூர் சில்விக்ரின். உச்சந் தலையிலே அழுத்தித் தேய்த்தால் ப்யூர் சில்விக்ரின் மயிர்க்கால்களை ஊடுருவி, நீடித்த கலனைக் கேசத்திற்கு மீட்டுக் கொடுக்கத் தேவைப்படும் இயற்கையான ஊட்டத்தை வழங்குகிறது.

ஆல் அபௌட் ஹேர் (ALL ABOUT HAIR) என்ற, படங்கள் கொண்ட இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினீர்களானால் இவ் விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1, சில்விக்ரின் அட்வைசரி சர்விஸ், தபால் பை 727, பம்பாய் 1



ப்யூர் சில்விக்ரின்
கேசக் கோளாறுகளின் சிகிச்சைக்கான தோரு தீவிர குணம் செறிந்த தயாரிப்பு. ஒரு மாத சிகிச்சைக்குப் போதுமானது

சில்விக்ரின் ஹேர் டிரஸ்ஸிங்
நாள் முழுதும் உங்கள் கேசத்தைப் பாங்காகப் படியவைத்திருக்கும். கேசக்கோளாறுகள் ஏற்படாமல் தடுக்கப் போதுமான ப்யூர் சில்விக்ரின் அடங்கியது



Silvikrin

சில்விக்ரின் — கேச ஆரோக்கியத்திற்கான வழி

SP/1/P/2/64

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 35 சதம்
தபால் செலவு தனி

AMCO

PACKAGED ELECTRICITY for DIVERSE UTILITIES





AUTOMOTIVE

Heavy Duty Batteries for Tractors, Buses and Trucks, Light Duty Batteries for Pleasure Cars & Taxis, and compact small units for Scooters & Motor Cycles

FORK LIFTS

Fork Lift Batteries for handling heavy materials even in restricted space.






POWER STATIONS

Storage Batteries for auxiliary power and control, closing & tripping circuit breakers, and operating oil switches




TELE-COMMUNICATION




Storage Batteries for central office equipment, operating relays, message registers, P. B. X boards etc.

RAILWAYS

Traction Batteries for starting Diesel Loco Engines, Cells for carriage lighting and working of fans air-conditioning, track & signal circuits.





WIRELESS

Batteries for Broadcasting from studios to the Transmission centre

AM-52

AMCO BATTERIES
"STAY STRONGER LONGER"

AMCO BATTERIES LIMITED, Mysore Road, Bangalore-26